
# முகவரியைத் தேடுகிறார்கள்

சோ. ராமேஸ்வரன்



# முகவரியைத் தேடுகிறார்கள்

(சிறுகதைத் தொகுப்பு)

சோ.ராமேஸ்வரன்

# Muhavariyaith Thedukirarkal

(A Collection of Short Stories)

By S.Rameswaran

மீரா பதிப்பகம்
கொழும்பு 06
தொலைபேசி: 2513336

முகவரியைத் தேடுகிறார்கள்
(சிறுகதைத் தொகுப்பு)

முதலாவது பதிப்பு 2004

© சோ. ராமேஸ்வரன்

**முன் அட்டை:**
ஆர்.பிரசன்னா

**கணனி அச்சுப்பதிவு**
செல்வி ராமேஸ்வரன்

விலை: ரூபா 140/-

**அச்சுப் பதிவு:**
தரஞ்ஜி பிரின்ட்ஸ்
501 ஹைலெவல் வீதி
நாவின்ன
வெல்லம்பிட்டிய

## ஆசிரியர் உரை

**1994**க்கும் 2004க்கும் இடைப்பட்ட பத்து வருடங்களினுள் நான் எழுதிய பத்து சிறுகதைகள் பரிசுக் கதைகளாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்பது கதைகளை இங்கு தொகுத்து வெளியிடுகின்றேன்.

நான் பொதுவாக இனப்பிரச்சினைகளை அடியொற்றிய சிறுகதைகளைத்தான் படைக்கின்றேன். பெரும்பாலும் எனது கதைகள் ஒவ்வொன்றிலும் சிங்களக் கதாபாத்திரங்கள் வருவதுண்டு. இங்குள்ள பெரும்பாலான கதைகளும் அந்த வரையறைக்குள் அடங்கியுள்ளன.

இது எனது ஆறாவது சிறுகதைத் தொகுப்பு.

சிறுகதைகளைப் பற்றி ஒரு முன்னோட்டத்தை எழுத நான் விரும்பவில்லை.

இதை கணனியில் பொறித்துத் தந்தவர் என் மனைவி. அட்டைப் படத்தைத் தயாரித்தவர் மகன். இருவருக்கும் நன்றி.

கதைகளை சுவைத்துப் பாருங்களேன்.

**சோ. ராமேஸ்வரன்**

**E 2/4 அன்டர்சன் தொடர் மாடி**
**கொழும்பு 05**

## பொருளடக்கம்


| | |
|---|---|
| ஒரு 'கப்டனும்', ஒரு பிராமணச் சிறுவனும் | 01 |
| சிறிபாலபுர 'மாத்தையா' | 13 |
| முகவரியைத் தேடுகிறார்கள் | 28 |
| வாழ்வதற்காக சாவதா? | 36 |
| சேனாதீரவும், அந்தப் பெண்களும் | 48 |
| நியாயம், தர்மம்..... | 56 |
| புதிய வீட்டில் | 67 |
| மலர் வளையத்திற்கும் வாசமுண்டு | 79 |
| பெண்மையின் மென்மை | 90 |




# ஒரு 'கப்டனும்', ஒரு பிராமணச் சிறுவனும்

"ஐயா....."

செல்லம்மாவின் கணீரென்ற குரல் அந்த ஆலயத்தில் எதிரொலித்தது.

மூலஸ்தானத்தில் துளசிசங்கர் குந்தியிருந்தான். பிள்ளையார் சிலையைக் கழுவியபடி, சிந்தனையில் தன்னை மறந்திருந்தவனுக்கு செல்லம்மாவின் குரல் கேட்கவில்லை.

"ஐயா....."

துளசிசங்கரின் யோசனை அறுந்த நேரத்தில், செல்லம்மாவின் குரல் மீண்டும் வெளிப்பட, அது அவனின் கவனத்தை ஈர்த்தது. அசுவாரஷ்யத்துடன் தலையைத் திருப்பி, குரல் வந்த திக்கில் பார்வையை ஆறுதலாகப் படரவிட்டான்.

செல்லம்மா பூசைத் தட்டுடன் நிற்பது தெரிந்தது.

துளசிசங்கர் எழுந்தான். அங்கிருந்தபடியே செல்லம்மாவை சினத்துடன் நோக்கினான். "பூசைக்கு இன்னும் நிறைய நேரமிருக்குது. ஆச்சி, இப்ப போயிற்று, பேந்து வாங்கோ....."

"அது தெரியும்டா அப்பு. அப்பாட்டை இதைக் குடுத்திட்டு போகத் தான்....."

"பூசைச் சாமான்களை அதிலை வைச்சிட்டுப் போங்கோவன்."

"எங்கையடா அப்பு இதை வைக்கிறது? நிலத்தில வைக்கிறது சரியோ? நீ கொண்டு போய் மடப்பள்ளியில வையன்."

துளசிசங்கரின் முகத்தில் சினம் பிரசவித்தது. "உங்களால ஒரு வேலையும் செய்ய ஏலாது." கைகளை வேட்டியில் அரை குறையாகத் துடைத்தவன், கீழே இறங்கி வந்தான்.

அவனை செல்லம்மா அன்பு ததும்ப நோக்கினாள். வாஞ்சையுடன் புன்னகைத்தபடியே, "துளசி, இண்டைக்கு பள்ளிக்கூடத்துக்குப் போக இல்லையோ?" எனக் கேட்டாள்.

"இல்ல....." அவன் வேண்டாவிருப்புடன் பதில் அளித்தான்.

"ஏன்டா மோனை?"

துளசிசங்கர் பதில் கூறாமல் நின்றான்.

"சொல்லன்ரா என்ர குஞ்சு....."

"சோதனை மறுமொழி வர மட்டும் போகத் தேவையில்லை."

"ஓ..... ஓ..... நீ 'ஓ.எல்' சோதனை எடுத்தனி..... மெய்யே, எப்படி நல்லா செய்தனியோ?"

"ஒரு மாதிரி செய்தன்."

"எட்டு 'டீ' கிடைக்குமோ?"

இப்படி செல்லம்மா கேட்டதும், துளசிசங்கரின் பேச்சு தடைப்பட்டது. இவ்வளவு நேரமும் சினத்துடனும், வேண்டா விருப்புடனும் பேசியவனின் முகத்தில் ஓர் இறுக்கம் பற்றியது. கண்களில் ஒரு மெல்லிய வேதனை படர்ந்தது.

"இணே, நல்ல வடிவாக படிக்கிற சூழ்நிலை எங்கடை வீட்டில இருக்குதோ? அண்ணன் செத்தார்..... அம்மாவும் செத்தா. அத்தானோட கோவிச்சுக் கொண்டு அக்கா வீட்டில கிடக்கிறா. பொறுப்பாக நடக்க வேண்டிய அப்பா சின்னப்பிள்ளை மாதிரி அழுது, புரண்டார். இதுகள் மட்டுமோ? 'லைட்' இல்லை. 'கேர்ஃபியூவும்" போட்டு விடுவாங்கள். இந்த நிலைமையில படிக்க ஏலுமோ?"

செல்லம்மா உடனடியாக ஒன்றும் கூறவில்லை. அவனையே கண் வெட்டாமல் பார்த்து, சில வினாடிகளை நகர்த்தினாள். பின் ஏதோ ஞாபகத்திற்கு வந்தவளாக, "யோகேஸ் இப்பவும் வீட்டிலையோ இருக்குது?" என வினவினாள்.

"ஓமணை....."

செல்லம்மா நெடுமூச்செறிந்தாள். "உன்ர அப்பா தன்ர சக்திக்கு மீறி சீதனம் குடுத்து அவளைக் கட்டி வைச்சார். எல்லாம் உத்தியோக மாப்பிள்ளை எண்ட கௌரவத்திற்கு. ஆனால், எல்லாம் வீண் போல..... பாவம் அவள். இந்த சின்ன வயசில வாழா வெட்டியாகி....."

செல்லம்மா சொல்லிக் கொண்டு போக, துளசிசங்கரின் கண்களின் கீழே இருந்த நரம்புகள் துடித்தன. "அத்தானைக் கண்டன் எண்டால்....." அவன் குரலை உயர்த்திவிட்டு, மீதி வார்த்தைகளை நெஞ்சினுள் அடைத்தான்.

செல்லம்மா மௌனமாக அவன் முகத்தையே பார்த்தபடியே நின்றாள்.





"அக்கா விடுற ஒவ்வொரு துளி கண்ணீருக்கும் அந்த ஆள் மறுமொழி சொல்ல வேணும்." துளசிசங்கர் சீறுகிறான்.

"என்ன மாதிரி?"

"அதை இப்ப சொல்லமாட்டன். நேரம் வரக்கிள்ளை சொல்லுவன்."

"சரி போயிட்டு வாறன். இந்தா இதைப்பிடி. அப்பாட்டை சொல்லி பூரம் நட்சத்திரத்தில ஒரு அர்ச்சனை செய்" என்ற செல்லம்மா, தட்டைத் துளசிசங்கரிடம் நீட்டினாள்.

துளசிசங்கரின் முகத்தில் இருந்து இறுக்கம் மெல்ல மெல்ல தளர்ந்தது. தட்டை கை நீட்டிப் பெற்றவன், "உங்கட வீட்டில ஆரணை பூரம் நட்சத்திரம்?" என வினவினான்.

"இந்திரன் தான்....."

"எப்படி இந்திரன் பாடு? இப்பவும் ஜேர்மனியிலையோ?"

"ஓமோம்..... மெய்யே, அவன் உன்னோடையோ படிச்சவன்?"

"இல்லணை..... அண்ணனோடை....."

"உன்ர கொண்ணரும் அநியாயமாகச் செத்திட்டார்."

"ஓ....."

தமையனின் நினைவு துளசிசங்கரின் மனதினுள் மெலிதாக நுழைந்தது.

**நா**ன்கு மாதங்களின் முன், வீட்டை அடமானம் வைத்து விட்டு, அதில் தேறிய ஐந்து லட்சம் ரூபாவுடன் ஊரை விட்டுச் சென்றவன், கிளாலி கடல் ஏரியில் பிணமாக மிதந்தவர்களில் ஒருவனாகத் திகழ்ந்தான்.

அந்த ஊரே அன்றைய தினம் சோகத்தில் மூழ்கிவிட்டது. சுந்தரராஜசர்மாவுக்கு மகனின் பிரிவைத் தாங்க முடியவில்லை. பைத்தியம் பீடிக்கும் நிலைக்கு ஆளாகிவிட்டார்.

இந்த அதிர்ச்சிச் செய்தியைக் கேட்டு மங்களநாயகி மயங்கி விட்டாள். தொடர்ந்து மூன்று நாட்களாகப் புலம்புவதும், மூர்ச்சை அடைவதுமாகக் கிடந்தவள், வேதனையை தாங்க முடியாமல் தன் மீது மண்ணெண்ணெய் ஊற்றி, தற்கொலை செய்யவும் முயன்றாள்.

மங்களநாயகி இறுதி வரை இயல்பு நிலையை அடைய வில்லை. ஒரு மாதம் வரை புலம்பினாள். ஒப்பாரி வைத்தாள்.

ஊண், உறக்கமின்றின்றி பித்துப் பிடித்த நிலையில் கிடந்து அழுந்தினாள். இறுதியில் நோயினால் பீடிக்கப்பட்டு, பெரும்பாலான நேரத்தை படுக்கையில் கழித்தாள். அவளைக் கவனிப்பதற்கு பக்கத்தில் ஒருவரும் இருக்கவில்லை. துளசிசங்கருக்கும், மற்றவர்களுக்கும் சமைத்துக் கொடுக்கக் கூட அவளால் முடியவில்லை.

சுந்தரராஜசர்மா இரு நாட்கள் சமையலில் ஈடுபட்டார். ஆனால், வாயில் வைக்க முடியாத அளவுக்கு உப்பை போடவே, யாவரும் அரைகுறையாக வயிற்றை நிரப்பினார்கள்.

அவர்களின் ஆசாரத்திற்கு ஏற்ப சமைத்துக் கொடுக்க எவரும் முன் வரவில்லை. துளசிசங்கருக்கு பொறுக்க முடியவில்லை. தமக்கையைத் தேடிப் போனான். யோகேஸ்வரியின் கணவர் ஒரு முரட்டு பிடிவாதக்காரர். "என்ர மனுசியை உங்கட வீட்டுக்கு சமைக்க அனுப்பினன் எண்டால் எனக்கு ஆர் சமைச்சுத் தாறது" என்று கேட்டார். பின் வாயில் வந்ததை எல்லாம் சொல்லி துளசிசங்கரை அவமானப்படுத்தி அனுப்பிவிட்டார்.

வீட்டை விட்டு வெளிக்கிடும் போது யோகேஸ்வரி 'கேவிக் கேவி' அழுவதை துளசிசங்கர் அவதானித்தான். வீடு வந்தவன் அன்று முழுவதும் பட்டினி கிடந்தான். தமக்கையைப் பற்றிய எண்ணம் அவனைச் சோகத்தில் மூழ்கடித்தது.

தன்னைக் கணவன் எவ்வாறு சித்திரவதை செய்கிறார் என்பதை யோகேஸ்வரி சாடைமாடையாகக் கூறியதை எண்ணி மனம் கலங்கினான்.

"உன்னை அவர் ஏன் அடிக்கிறார்?" என்று துளசிசங்கர் கேட்ட போது, "எல்லாம் வழமையான சீதன விசயம் தான். அப்பா குடுத்த சீதனம் போதாதாம்" என்றாள் யோகேஸ்வரி.

"பீத்தல் 'கிளார்க்குக்கு' நாங்க குடுத்த சீதனம் போதாதோ" என்று கேட்டு விட்டு வந்தவன், அவர்களது தூரத்து உறவுக்காரியான சீதேவியின் வீட்டுக் கதவை மறு நாள் தட்டினான்.

இச்சம்பவத்தின் பின் சீதேவியே இவர்களுக்கு மத்தியானச் சாப்பாட்டை சமைத்துக் கொண்டு வந்து நீட்டினாள். காலையில் யாவரும் தேநீரையும், கோப்பியையும் குடித்து வயிற்றை நிரப்பினார்கள். இரவு வேளைகளில் கோயில் மோதகம், பொங்கல், வடை என்று மிஞ்சுபவற்றினால் வயிற்றை நிரப்பினார்கள். துளசிசங்கரின் பசி ஒரு நாளுமே அடங்கவில்லை. எந்நேரமும் பசி அவனை வாட்டியது. அடிக்கடி தலை சுற்றியது. ஒரு முறை மயங்கி கீழே விழுந்தும் விட்டான்.





"ஆள் கொஞ்சம் பலவீனம். நல்லா சாப்பாடு குடுங்கோ" என்று இவனைப் பரிசோதித்த 'டொக்டர்' சொல்லவே, சுந்தரராஜசர்மா முழித்தார். சில மாத்திரைகளை வாங்கிக் கொடுத்தார்.

துளசிசங்கர் குணம் பெறவில்லை. எந்நேரமும் சோம்பிய நிலையிலேயே காணப்பட்டான்.

மங்களநாயகி குணமடையவே இல்லை.

கடைசி நாட்களில் நீராகரமே அவள் வயிற்றை நிரப்பியது.

ஒரு நாள் துளசிசங்கர் பள்ளிக்கூடத்திற்கும், சுந்தரராஜசர்மா சந்தைக்கும் போயிருந்த வேளை மங்களநாயகி கண்களை நிரந்தரமாக மூடிவிட்டாள். பள்ளிக்கூடத்திலிருந்து மாமனுடன் வீடு வந்த துளசிசங்கருக்கு தாயின் பூதவுடலைத் தான் காணக்கிடைத்தது.

அவனால் தாயின் மரணத்தை தாங்கிக்கொள்ள முடிய வில்லை. சகல உணர்ச்சிகளுமே மரத்த நிலையில், தாயின் பூதவுடலை பார்த்தபடி நின்றான். வேதனை அவன் இதயத்தை நன்கு அமுக்கியது. அழுது வேதனையை விரட்ட முயன்றான். ஆனால், மனம் மரத்திருந்தபடியால், ஒரு சொட்டுக் கூட அழுகை வரவில்லை.

தாயின் பூதவுடல் மயானத்திற்கு கொண்டு செல்லப்படும் வரை இயந்திரமான நிலையில் செயல்பட்டான். கொள்ளி வைத்த பின் சிதை விளாசி எரிந்த போது - அதில் இருந்து வெளிப்பட்ட வெட்கையுடன் அவன் இதயத்தில் இருந்து வேதனை வெளிக் கிளம்பியது. அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. ஒப்பாரி வைத்து அழுது புரண்டான்.

இது நடந்து ஒரு மாதத்திற்குள் யோகேஸ்வரி கைகளிலும், கால்களிலும் கண்டல் காயங்களுடன் வீடு வந்து சேர்ந்தாள். "இனி நான் இங்க தான் இருக்கப் போறன்" என்று சொல்லி விடவே, துளசிசங்கர் ஸ்தம்பனமாக நின்றான்.

தமையனின், தாயின் மறைவுகள், அவர்கள் இருவரின் சாவைத் தொடர்ந்து வீடு வந்து சேர்ந்த தமக்கையின் கோலம், துளசிசங்கரின் மனதில் குரூர எண்ணங்களை லேசாக விதைத்து விட்டன.

ஒரு முறை அத்தானைத் தேடிச் சென்று, தமக்கையுடன் சேர்ந்து வாழும்படி துளசிசங்கர் மன்றாட்டமாக கேட்க, அவர் விறகு ஒன்றை எடுத்து வந்து இவனை அடித்துத் துரத்திவிட்டார்.

இச்சம்பவம் அவனுள் குரோத எண்ணங்களை நன்கு வளர்த்து விட்டது.

இதன் பின், எங்காவது போகும் போது, தெருவோரங்களில் இருந்து மரங்களைத் தடியால் அடித்து, அதில் ஒரு வகை களிப்படைந்தான். நாளடைவில் இதில் குரூர திருப்தி கொள்ளவே நாய், பூனை, ஆடு, மாடு என்று ஏதாவது மிருகத்தை கண்டால் கல் எடுத்து எறிந்து காயமேற்படுத்தினான். பக்கத்து வீட்டுக்காரர் ஆசையாக வளர்த்த பூனைக்கு அலரி விதையை அரைத்து பாலில் கலந்து கொடுத்து, அதைக் கொன்றான். பறட்டை நாய் ஒன்றை இரும்புக்கம்பி ஒன்றினால் அடித்து, அதன் காலை முறித்தான். இச் செயல்கள் எல்லாவற்றையும் நிறைவேற்றிய போது, பரமதிருப்தி ஒன்று தன்னுள் ஏற்படுவதை அவன் உணர்ந்தான்.

பேரனின் இச் செயல்களைக் கண்டும், கேட்டும் வேதனையில் உழன்ற ஞானலிங்கசர்மா ஒரு முடிவுக்கு வந்தார். அவனை அழைத்து தன் முன்னால் உட்கார வைத்தார்.

"அப்பு, ஏன்ரா வாயில்லா சீவன்களை எல்லாம் வதைக்கிறாய்?" என்று நேரிடையாகவே கேட்டார் ஞானலிங்கசர்மா.

"என்ன பாட்டா சொல்லுறீங்க" என்று எதுவுமே தெரியாதது போல துளசிசங்கர் நடித்தான்.

"உன்னை கொஞ்ச நாளா 'நோட்' பண்றன். நாய், பூனை, ஆடு, மாடு எண்டு எல்லா வாயில்லா மிருகங்களையும் அடிக்கிறாய். அதுகளுக்கு கல் எறியுறாய், பக்கத்து வீட்டுக்காரரின்ர பூனைக்கு நஞ்சு வைத்து சாக்காட்டி இருக்கிறாய். இந்த மிருகங்கள் எல்லாம் அவதிப்படுறதைக் கண்டு சந்தோசப்படுறாய். ஏன்ரா இப்படி எல்லாம் செய்து, சந்தோசப்படுறாய்?"

பாட்டாவிடமிருந்து குற்றச்சாட்டுக்கள் நிரம்பிய இவ்வாறான வார்த்தைகளை துளசிசங்கர் எதிர்பார்க்கவில்லை. முதலில் இவ்வாறான செயல்களைத் தான் செய்யவில்லை என்று மறுப்புத் தெரிவித்தான். பாட்டா மிரட்டவே, கண் கலங்கினான்.

"உன்ர மனதில இருக்கிறதை சொல்லுடா, துளசி. நான் பரிகாரம் காண்றன்."

"பாட்டா, என்னவோ தெரிய இல்லை. நாயை, ஆட்டை, பூனையை, மாட்டை எல்லாம் காணக்கிள்ளை எனக்குள்ள ஒரு வெறி வருது. அதால தான் அதுகளை துரத்தித் துரத்தி அடிக்கிறன். நஞ்சு வைச்சு சாக்கட்டுறன்."





"அப்பு, நீ சின்னப்பொடியன். இந்த மாதிரி வாயில்லாத சீவன்களை வருத்திறது பாவம். அதுகள் என்ன பிழை செய்தது எண்டு அதுகளை அடிக்கிறாய்? சாக்காட்டுறாய்? ஏன் எங்களுக்கு கொடுமை செய்யுறாய் எண்டு கேக்க அதுகளுக்கு வாய் இல்லாதபடியால் தானே நீ இப்படி செய்யுறாய்?"

துளசிசங்கர் பதில் கூறாமல் இருந்தான்.

"உன்ர அண்ணன், அம்மா செத்தாப் போலையோ இந்தக் குணம் வந்தது?"

"ஓம் பாட்டா. அண்ணனை ஏன் சாக்காட்டினவங்களாம்?"

ஞானலிங்கசர்மா பேரனைத் தடவிக் கொடுத்தார். "அப்பு, அது தான் கர்மவினை. அதை எங்களால் தடுக்க ஏலாது. உன்ர அண்ணன் இந்த மாதிரி சின்ன வயசில சாக வேணும் எண்டு தலையில எழுதி இருக்குது. அதை உன்னாலையோ, என்னாலையோ தடுக்க ஏலாது. அது போலத்தான் உன்ர அம்மாவும். நீ உனக்கு எண்டு விட்ட வழியில வாழு. நீ வாழ்ற வரைக்கும் உன்ர வாழ்க்கையை நேர்மையாக, நாணயமாக நடத்து. ஆசையை விட அன்புக்கு நிறைய இடம் குடு."

ஞானலிங்கசர்மா தெட்டத் தெளிவாக கூறியதை துளசி சங்கரினால் துலாம்பாரமாக கிரகிக்கவோ, ஆராயவோ, ஏற்றுக் கொள்ளவோ முடியவில்லை. சந்தர்ப்பம் வரும் போதெல்லாம் அவர் கூறியதை நினைவுக்கு கொண்டு வந்து, அது பற்றி மனதினுள் ஒரு தர்க்கத்தை நடத்தினான். இறுதி வரை அவனால் ஒரு முடிவுக்கும் வர முடியவில்லை. தனது செயலையும் அவன் நிறுத்தவில்லை.

"என்னடா துளசி, யோசிக்கிறாய்?" செல்லம்மா அவன் யோசனையைக் கொய்ய, துளசிசங்கர் சகஜ நிலைக்கு திரும்பினான்.

"அண்ணனை நினைச்சன்....." துளசிசங்கர் தொண்டையைச் செருமினான். அவன் குரல் மெலிந்திருந்தது.

"கொண்ணர் கிளாலியில தப்பி இருந்தால் இப்ப கனடாவில சீமான் மாதிரி இருப்பார். என்ன?"

"ஓமணை. அண்ணனும் போயிட்டார். காசும் போயிட்டுது."

"வீடு இன்னும் ஈட்டில கிடக்குதாக்கும்."

துளசிசங்கர் பெருமூச்செறிந்தான். "வட்டியோட ஆறரை லட்சம் குடுத்தால் தான் வீட்டை ஈட்டில இருந்து எடுக்கலாம். இந்த சென்மத்தில அது முடியுமோ?"

"எங்க முடியும்?"

"அண்ணன் ஒரு மோட்டு வேலை செய்திட்டார். அம்மா எத்தனை தரம் போக வேண்டாம் எண்டு சொன்னவ. கேட்டால் தானே?"

"இந்தக் காலத்து பிள்ளையள் பெற்றாரின்ர சொல்லைக் கேட்டால்தானே?" எனச் சொன்ன செல்லம்மா மூலஸ்தானத்திற்கு பார்வையை ஓடவிட்டாள். "நீ உன்ர வேலையைச் செய். எனக்கு நேரமாச்சுது. நான் போயிட்டு வாறன். பூசைக்கு வரமாட்டன். பூரம் நட்சத்திரத்தில அர்ச்சனை செய்யச் சொல்லி அப்பாட்ட சொல்லு."

செல்லம்மா நடையைக் கட்டினாள்.

துளசிசங்கர் தட்டுடன் மடப்பள்ளிக்குச் சென்றான். அதை அங்கு வைத்துவிட்டு, மீண்டும் மூலஸ்தானத்திற்கு சென்றான். சில வினாடிகள் வரை பிள்ளையார் சிலையைப் பார்த்தபடி நின்றான். அவனுள் பல்வகை உணர்ச்சிகள் போராட்டம் நடத்தின. அந்த உணர்ச்சிகளில் கோபம், ஆத்திரம், வெறி, தாபம், பக்தி என்பன சிக்கி இருந்தன.

தாயின், தமையனின் முகங்கள் ஒன்று மாறி ஒன்று அவன் நெஞ்சில் மோதின. எல்லா உணர்ச்சிகளையும் தள்ளியபடி கோப உணர்ச்சி மேலெழுந்தது. அவன் இரத்தம் கொதித்தது.

அந்நேரம் நாயொன்று வாசலுக்கு அருகில் நின்றபடி வாலை ஆட்டியதைக் கண்டான். உடனே அங்கிருந்து பாய்ந்து, கல் ஒன்றை எடுக்க ஓடினான். அவன் செய்கையை நாய் அவதானித்துவிட்டது. அது வீச்சுடன் ஓடிவிட்டது.

துளசிசங்கருக்கு சிரிப்பாக இருந்தது. சிரித்துவிட்டான்.

சற்றுத் தொலைவில் குண்டுச் சத்தம் கேட்டது. வழமையாக இச்சத்தம் கேட்பதனால் துளசிசங்கர் அதையிட்டு மனதை அலைபாய விடுவதில்லை. ஆனால், அன்றைய தினம் குண்டுச் சத்தம் தொடர்ந்தது. 'வேன்'கள் ஓடும் சத்தமும் கேட்டது.

"வாறாங்கடா, வாறாங்கடா" என்று கூவிக் கொண்டு ஆட்கள் ஓடும் அரவம் அவன் கவனத்தைத் தட்டியது. இராணுவம் தமது முகாமில் இருந்து வெளியேறிவிட்டதா என யோசித்தான். ஆனால், யோசனையை அவன் மனதினுள் இறுக்கவில்லை. தனது காரியத்தைத் தொடர்ந்தும் மேற்கொண்டான்.

அப்போது முன் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது.

யாராக இருக்கும்? யாரும் அடைக்கலம் தேடி வந்திருக்கிறார்





களோ? எத்தனையோ தடவைகள் எத்தனையோ மக்களுக்கு அடைக்கலம் கொடுத்த கோயில் தானே? யாராவது வந்திருப்பார்கள்.

துளசிசங்கர் 'எதையும்' துலாம்பரமாகச் சிந்திக்கவில்லை. ஓடிப் போய் கதவைத் திறந்தான். வெளியே அவன் எதிர்பார்த்ததிற்கும் மாறாக இராணுவ வீரர்கள் நிற்பது தெரிந்தது. அவன் இதயம் ஒரு முறை சிலிர்த்தெழும்பியது. ஒன்றையும் தெளிவாக யோசிக்காமல் கதவைச் சாத்த முற்பட்டான். ஆனால், அதற்கிடையில் முன்னே நின்ற 'கப்டன்' தனது காலைக் கதவின் அடிப்பாகத்தில் வைத்து, கதவை அசைக்கவிடாமல் தடுத்தான்.

துளசிசங்கர் கோபத்துடன் 'கப்டனை' முறைத்தான். 'கப்டன்' அதைக் கண்டு கொள்ளாமல் துளசிசங்கரை கேலியாக நோக்கினான். பின், துப்பாக்கியை அவன் முகத்திற்கு நேரே பிடித்தான்.

துளசிசங்கரின் முழுத் தேகமும் நடுங்கியது. இதய ஓட்டம் உச்சத்தை அடைந்தது. எல்லாமே சில வினாடிகள் தான். "ஐயோ" என்று குழறியபடி, மூலஸ்தானத்தை நோக்கி ஓடினான். சில அடிகள் தான் ஓடி இருப்பான்.

துப்பாக்கி வெடிச்சத்தம் கேட்டது. அக்கணமே ஓட்டத்திற்கு தடை விதித்தான். அங்கிருந்தபடியே பீதியுடன் பார்வையைத் திருப்பி 'கப்டன்' மீது செலுத்தினான்.

'கப்டன்' துப்பாக்கியை வானத்தை நோக்கிப் பிடித்திருந்தான். அதில் இருந்து புகை கிளம்பியது.

துளசிசங்கரைப் பயம் முழுதாக கௌவிக் கொண்டிருந்தது. அவனது முழு உடலும் நடுநடுங்கியது.

'கப்டன்' கண்களால் வருமாறு சைகை காட்டினான்.

அவனை நோக்கி நடப்பதற்கு துளசிசங்கருக்கு பயமாக இருந்தது. நின்ற நிலையில் 'கப்டனை' அச்சத்துடன் பார்த்தான்.

"'வரேங்'" எனக் கையால் வரும்படி காட்டியவாறு 'கப்டன்' கத்தினான்.

துளசிசங்கர் பார்வையை நாலாபுறமும் சுழற்றினான். பின் 'கப்டன்' மீது பதித்தான்.

"ஏவரேங்'."

துளசிசங்கர் சில அடிகள் முன்னேறினான். பின் என்ன நினைத்தானோ நின்றான்.

"'வரேங்'."

துளசிசங்கரின் மார்பு வெகுவாகத் துடித்தது. அவன் முன்னேறவில்லை. எங்கே 'கப்டனை' நெருங்கினால், அவன் தன்னைச சுட்டுவிடுவானோ எனக் கலங்கினான்.

'கப்டன்' பொறுமை இழந்தான். துப்பாக்கியை எடுத்து துளசிசங்கரின் முகத்திற்கு நேரே பிடித்தான்.

அப்பொழுதும் அவன் அசையவில்லை.

தாயின், தமையனின் நினைவுகள் மாறி, மாறி நெஞ்சில் தங்கிவிட்டுச் சென்றன.

'துளசி.....' தாய் அழைப்பது போல, 'தம்பி.....' தமையன் அழைப்பது போல குரல்கள் அவன் செவிப்பறையில் மோதுகின்றன.

'கப்டனின்' முகம் இறுகியது. அவன் துப்பாக்கியின் குதிரையில் தன் ஆள்காட்டி விரலைப் பதித்தான்.

துளசிசங்கர் கண்களை மூடினான். இரு காதுகளையும் இறுகப் பொத்தினான். நெஞ்சை நிமிர்த்தினான்.

வினாடிகள் நகர்ந்தன. துப்பாக்கி ரவைகள் தன் உடலைப் பிய்த்துக்கொண்டு பாயும் என துளசிசங்கர் நினைத்தான். ஆனால், ஒன்றுமே நடைபெறவில்லை.

துளசிசங்கர் கண்களைத் திறந்தான்.

'கப்டன்' கனிவாகச் சிரித்தான். துப்பாக்கியை இடைப்பட்டியில் செருகிவிட்டு, "'கம் ஹியர்'" என அழைப்பு விடுத்தான். அப்பொழுதும் துளசிசங்கர் அசையவில்லை.

"'கம் மை டியர் போய்'" என 'கப்டன்' கண்களால் அழைத்தான்.

'தம்பி.....' தமையன் அழைப்பது போல துளசிசங்கருக்கு தென்பட்டது. 'கப்டனை' நோக்கி நடந்தான்.

"சுருக்கா வா." 'கப்டன்' தமிழில் கத்தினான்.

துளசிசங்கர் 'கப்டனை' அடைந்தான். ஆறடி உயரமும் ஆஜானுபாகுவான தோற்றமும் கொண்ட 'கப்டனை' நோக்கினான்.

துளசிசங்கரின் கன்னத்தில் 'கப்டன்' மெல்லக் கிள்ளினான். கன்னம் சிவந்தது. அவனை சில வினாடிகள் வரை 'கப்டன்' சுவாரஷ்யத்துடன் நோக்கினான். பின், "நீ துவக்குக்கு பயமில்லையா?" எனத் தமிழில் கேட்டான்.





"இல்லை."

"ஏன்?"

"எனக்கு இப்ப எதிலையும் பயமில்லை."

"அதுக்கு என்னா காரணம்?"

"வாழ்க்கையில வெறுப்பு வந்திட்டுது."

"இந்த வயதில?"

"ஓமோம்."

"வெறுப்புக்கு காரணம் என்ன?"

"எத்தனையோ காரணம் இருக்குது."

"எல்லாத்தையும் என் கிட்ட சொல்லு."

"அண்ணா அநியாயமாகச் செத்தார். பித்து பிடிச்சு அம்மா செத்தா. அக்கா வாழா வெட்டியா எங்கட வீட்டில கிடக்கிறா....."

"அப்பா?"

"இருக்கிறார். ஆனால், பொறுப்பில்லாமல் நடக்கிறார். பூசை செய்யுறதைத் தவிர வேறை ஒண்டும் அவருக்குத் தெரியாது. அம்மா செத்தாப் போல பூசையைக் கூட ஒழுங்காகச் செய்யுறதில்லை."

"அண்ணன் எப்படிச் செத்தவர்?"

"கிளாலியில சூடுபட்டு செத்திட்டார்."

"ஓ.....!"

'கப்டன்' மேலும் பேசவில்லை. அவன் முகத்தில் பரிதாபம் நிறைய பரவி இருந்தது.

"உனக்காகப் பரிதாபப்படுறன்."

'கப்டன்' மேலும் ஒன்றும் கூறவில்லை. அங்கிருந்து அகன்றான். அவனுடன் வந்திருந்த இராணுவ வீரர்களும் அவனைப் பின் தொடர்ந்தனர்.

துளசிசங்கர் முன் கதவின் அருகில் நின்றபடி அவர்கள் போவதை இமை கொட்டாமல் பார்த்தபடி நின்றான்.

சுந்தரராஜசர்மா ஓடோடி வந்தார்.

"தம்பி, அவங்கள் உன்னை ஒண்டும் செய்ய இல்லையோ?"

"இல்லை அப்பா. அந்த 'கப்டன்' நல்லவன். என்னோடை நல்லா கதைச்சிட்டுப் போறான்."

"என்னவாம்?"

"பெரிசா ஒண்டும் கதைக்க இல்லை" என்று அவன் மழுப்பும் போது, ஞானலிங்கசர்மா வந்து சேர்ந்தார். பேரனைத் தடவிக் கொடுத்தார்.

"அப்பு, என்னடா நடந்தது?"

துளசிசங்கர் நடந்தவற்றைச் சுருக்கமாக விபரித்து விட்டு, "அந்தக் 'கப்டன்' கூப்பிடக்கிள்ளை நான் போக இல்ல. அவன் எவ்வளவு கோவம் அடைஞ்சான் தெரியுமா? அவன் என்னைச் சுடுவான் எண்டு தான் நினைச்சன். ஆனால், அவன் அப்படி செய்ய இல்ல. ஏன் பாட்டா" என அப்பாவி போலக் கேட்டான்.

ஞானலிங்கசர்மா மெதுவாகச் சிரித்தார். "'கப்டனை' பொறுத்தளவில அவனுக்கு நீ ஒரு வாயில்லாத சீவனாகத் தான் இருந்திருப்பாய். அதால தான் எவ்வளவோ கோவம் வந்தும் அவன் உன்னை ஒண்டும் செய்ய இல்லையாக்கும்."

இச்சம்பவத்தின் பின் மிருகங்களைக் கண்டால் துளசிசங்கர் ஒன்றும் செய்யாமல் போய்விடுவான்.

*(கனடாவில் இருந்து வெளிவந்த 'சூரியன்' பத்திரிகை 1995இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதல் பரிசைப் பெற்றது.*

*அவுஸ்திரேலியாவில் உள்ள விக்ரோறியா இலங்கைத் தமிழ்ச் சங்கம் 1995இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசைப் பெற்றது.)*



# சிறிபாலபுர 'மாத்தையா'

நுளம்புக் கூட்டம் ஒன்று அளவுக்கு மீறி 'கிணு கிணு'த்தது. தன்னை மறந்த நிலையில் உறங்கிக்கொண்டிருந்த கனகசபை திடுக்கிட்டு கண் விழித்தான். எரிச்சல், கோபம், வெறுப்பு ஆகிய உணர்ச்சிகள் அவனைத் தழுவின. ஆனால், சகல உணர்ச்சி களையும் அடக்கியபடி, கண்களை மூடி உறக்கத்திற்கு அடிமையாக முற்பட, மீண்டும் 'கிணு கிணு'ச் சத்தம். கனகசபை பொறுமையை இழந்தான். இரு காதுகளின் பக்கமும், தலையணையில் இரு கைகளாலும் மாறிமாறி அடித்தான். ஆனால், நுளம்புக் கூட்டம் கனகசபையின் தாக்குதலுக்கு ஆளாகாமல், எதிர்த்தாக்குதலை நிகழ்த்துவதற்கு முன்னோடியாக 'கிணு கிணுப்பை' தொடர்ந்தபடி சுற்றிச் சுற்றி வர.....

திடுதிப்பென - கன்னத்தில் ஓங்கி அறைந்தாற் போன்று கனகசபை படுத்திருந்த பலகை மறைப்புடன் ஒட்டினாற் போல், மறுபுறத்தில் கிடந்த 'ரேடியோ'வில் இருந்து ஹிந்திப் பாடலொன்று அலறியது. சகிக்க முடியாத ஒரு பழைய பாடல் அது.

அந்தப் பாடலின் நாராச ஒலியை அப்படியே அமுக்குவது போல, முன்னாலிருந்த வீட்டின் பக்கமாக ஓர் ஆணும், பெண்ணும் வாக்குவாதப்படும் சத்தம் உச்சஸ்தொனியில் கேட்டது. அவர்களின் வாக்குவாதத்தை உற்றுக் கேட்ட போது, இருவரும் கணவனும், மனைவியும் என்று தெரிந்தது. வாக்குவாதம் உச்சக் கட்டத்தை அடைந்த போது, மனைவியைக் கணவன் தாக்கி இருக்க வேண்டும். அவள், "'அம்மே, மகே அம்மே'" என்று குழறினாள். அதன் பின் அவள் தூஷண வார்த்தைகளைத் தாராளமாகப் பாவித்து அவனை ஏசினாள். அவனிடம் இருந்து எவ்வித பதிலும் வராததினால், அவன் அங்கிருந்து அகன்றுவிட்டான் என கனகசபைக்குப் புரிந்தது.

ஊரில், இரு பிள்ளைகளுடன் விட்டு வந்த மனைவி மங்களத்தின் முகம் ஒரு கணம் கனகசபையின் மனதை மேய்ந்து விட்டு மறைந்தது. கனகசபை அவளுடன் வாக்குவாதப்பட்டிருக்கிறான். ஆனால், இப்படி இல்லை. அதில் நாகரீகம் மலிந்திருந்தது.

மங்களம் மீண்டும் மனதினுள் புக முயன்றாள். அந்நேரத்தில் அவள் நினைவை மனதுக்குள் புகுத்தி, நித்திரையைக் குழப்ப அவன் விரும்பவில்லை. ஒன்பது மணிக்கு பாயில் சரிந்த போதும், அரை மணித்தியாலம் கூட நிம்மதியாகப் படுத்திருக்கமாட்டான்.

மங்களத்தை மனதில் இருந்து களைந்து விட்டு நித்திரையைத் தொடர முற்பட்டான். தூக்கம் கண்களைத் தழுவ முயன்ற போது, முன்புற தகரக் கதவில் 'யாரோ' தட்டினார்கள். யாராக இருக்கும்? 'பொலிஸ்'? அந்த எண்ணம் கனகசபையை மிரட்டியது. அவன் இதயம் ஒரு முறை துள்ளியது. கதவு மீண்டும் தட்டப்பட்டது. கனகசபை எழுந்து, கதவைத் திறக்கப் பயந்தான். கண்களை இறுக மூடி, மூச்சைக் கூட அடக்கினான்.

கனகசபையின் கால்புறமாக தலை வைத்து படுத்திருந்த சிறிபால கொட்டாவிவிட்டபடி எழுந்தான். "யாரடா அவன்" என சிங்களத்தில் கேட்டவன், 'டோர்ச் லைட்'டின் உதவியுடன் நடந்து சென்று, கதவைப் பெரிய ஓசையுடன் திறந்தான்.

கனகசபை கண்களைத் திறந்து, மெல்ல தலையை உயர்த்திப் பார்த்தான். இருவர் நிற்பது தெரிந்தது. அவர்கள் காக்கிச் சட்டைக்காரர் அல்லர். சாரங்காரர். "விஜிதாவின் வீடு எங்கே இருக்குது?" என்று ஒருவன் சிறிபாலவிடம் அதிகாரத் தோரணையில் கேட்டான்.

"எந்த விஜிதா?" அலட்சியமாக சிறிபால வினா தொடுத்தான்.

"அடோ, உனக்கு விஜிதாவை தெரியாதா?" முதலில் பேசியவன் அதட்டினான்.

"தெரியாது?" மற்றவன் உறுமினான்.

சிறிபால தலையைச் சொரிந்தபடி, "பெம்முல்ல விஜிதாவா?" எனக் கேட்டான்.

"அவளே தான். எங்கே இருக்கிறாள்?"

சிறிபால தனது ஆள்காட்டி விரலை உயர்த்தி, தூரத்தில் தெரிந்த ஒரு குடியிருப்பைக் காட்டினான். "அது தான்."

அந்த இருவரும் மேலும் ஒன்றும் சொல்லாமல், தள்ளாடியபடி நடந்து சென்றனர்.

சிறிபால கதவை மூடிவிட்டு, படுக்கைக்கு வந்தான். "பொம்பள பொறுக்கிங்க. மூக்கு முட்ட குடிச்சிட்டு வந்திருக்கிறாங்க." சிறிபால முணுமுணுத்தபடியே பாயில் சரிந்தான்.

சில நிமிடங்கள் கடந்தன. சிறிபாலவிடமிருந்து குறட்டை ஒலி பயங்கரமாகக் கேட்டது.

கனகசபையிடம் இருந்து தூக்கம் தூர விலகிச் சென்றுவிட்டது.





பலவாறான யோசனைகள் மனதினுள் எட்டிப் பார்ப்பதும், மறைவதும்..... நுளம்புகளின் 'கிணுகிணுப்பு' மீண்டும் ஆரம்பமாகியது. அவை இப்போது அவனைப் பதம் பார்க்கவும் துடித்தன. கைகளையும், கால்களையும் சொறிந்தபடி.....

கனகசபைக்கு சினம் பொங்கியது. ஆத்திரம் எல்லை மீறியது. நுளம்புகளை, சிறிபாலவை, வேலை தேடி கொழும்புக்கு செல்வது என்று முடிவு எடுத்த தன்னை, மாநகர சபையினரை என்று யாவரையும் மனதினுள் திட்டினான். தன் நிலையை நினைக்க, நினைக்க வேதனை கிளம்பி அது மெல்ல, மெல்ல உயர்ந்த போது, கண்களில் நீர்த் திவலைகள் உருவாக.....

"இஞ்சருங்கோ, இப்ப உங்களுக்கு நாற்பத்தி ஐஞ்சு வயசாகுது. இனி கொழும்புக்கு போய் உழைக்க வேணுமோ? இஞ்சையே தோட்டத்தை சரியா செய்தால் எல்லாரும் நிம்மதியாக இருக்கலாம். இனியும் உங்களுக்கு ஒரு கௌரவமான வேலையை ஆரும் தருவினம் எண்டு நினைக்கிறியளோ?" மங்களம் கூறிய வார்த்தைகள் அவனுள் ரீங்காரமிட.....

திடீரென உடல் சூடு அடைவதை கனகசபை உணர்ந்தான். வியர்வை கசிந்தது. நமைச்சல் உணர்ச்சியை அது தோற்றுவித்தது. முழு உடலும் வியர்வையால் நனைய, எரிச்சல் எல்லை மீற...... சலித்தபடியே எழுந்தவன், சாரத்தால் முகத்தை, மேலுடம்பை, கைகளைத் துடைத்தான். அந்த அகோரத்திற்குள் வெதும்ப அவனால் முடியவில்லை. வெளியே வந்தான்.

எங்கிருந்தோ புறப்பட்டு வந்த காற்று மெல்ல அவனை அணைத்தபடியே சென்றது. அவனுள் சுகானுபவம் தோற்றியது.

வானத்தை ஏகாந்தமாக நோக்கினான். கண்களுக்கு வித்தியாசமாக எதுவுமே புலப்படவில்லை. இருளின் பின்னணியில் நட்சத்திரங்கள். பார்வையைத் தாழ்த்தி சுற்றும் முற்றும் பார்த்தான். பல அறைகளினாலான பெட்டிகளின் அமைப்பில் அமைந்திருந்த குடியிருப்புக்கள் யாவுமே இருள் அரக்கனிடம் பலியாகிக் கிடந்தன.

தூரத்தில் பலகை மறைப்புக்கள் சரிந்து, கோணலாகக் கிடந்த விஜிதாவின் குடியிருப்பை கனகசபை கண்களால் மேய்ந்தான். அவனுள் ஒரு 'கிளுகிளுப்பு' துள்ளியது. மனதினுள் ஓர் உற்சாகம் பீறிட்டு, காதோரங்களைச் சூடாக்கியது.

விஜிதாவை கனகசபைக்குத் தெரியும். சிறிபாலவின் வீட்டுக்கு வந்த மூன்றாம் நாள் தான் அவளைக் கண்டான். அந்த சேரிப்புறத்தில் வாழும் இளம் பெண்களுடன் ஒப்பிடும்போது, அவள் சற்று

வித்தியாசமாக விளங்கினாள். அவள் கண்களில், ஆடைகளில், நடையில், பார்க்கும் விதத்தில், வீதியோர குழாயடியில் குளிக்கையில் அந்த வித்தியாசம் வெளிச்சமாகியது. அவனுள் ஒரு சந்தேகப் பொறி பற்றியது. அவன் சந்தேகப்பட்டதை சிறிபாலவிடம் தெரிவிக்க, "ஐயா, ரொம்ப கெட்டிக்காரர்தான். விஜிதா வேணுமா? சொல்லுங்க..... 'செட்' பண்ணித் தாறன்" என சிறிபால சொல்ல, அடிமனதில் புதையுண்டிருந்த சின்னதொரு ஆசையை மறைத்தபடி, புன்சிரிப்புடன் சிறிபாலவின் கோரிக்கையை கனகசபை நசுக்கினான்.

"ஐயா, இந்த மாதிரியான சேரிப்புறங்களில விஜிதா மாதிரி பொம்பளைங்க, 'கசிப்பு'க்காரங்க, 'குடு'காரங்க இருக்கிறாங்க. இவங்க மாதிரி ஆக்கள் இல்லாட்டால் இந்த இடத்தில இருக்கிற ஆக்கள் மனுஷராக வாழமாட்டாங்க. மிருகமாக மாறிடுவாங்க." சிறிபால முதல் நாளிரவு இப்படியொரு விளக்கத்தை முன் வைத்த போது, கனகசபை அவனை நுணுக்கமாக நோக்கினான்.

"சிறிபால, நீ என்ன சொல்றாய்?"

"ஐயா, இந்த இடத்தில இருக்கிற ஆட்கள் சந்தோஷமாக வாழ்றதுக்கு கெட்ட பொம்பளைங்க, கசிப்புக்காரங்க, 'குடு'காரங்க எல்லாம் இருக்க வேணும். இந்த பொம்பளைங்ககிட்ட கிடைக்கிற சுதி, கசிப்பில, 'குடு'வில கிடைக்கிற 'கிக்' எல்லாத்தையும் அதாவது வீட்டுக்குள்ல கிடக்கிற வெக்கையை, பசியை, மனுசிக்கிட்ட கிடைக்காத சுதியை என்டு எல்லாத்ததையும் மறக்கச் செய்திடும்."

கனகசபை இடைமறித்தான். "சந்தோஷமாக இருக்கிறதுக்கு வேறை விஷயங்கள் இல்லையா?"

"ஐயா, இந்த மாதிரியான நெருக்கடியான, சனப்பெருக்கம் நிறைந்திருக்கிற, கூனிக்குறுகி, வாழ்க்கை நடத்திற அவல நிலையில இருக்கிற ஆக்களுக்கு இப்படியான சந்தோஷம் தேவை. இல்லாட்டி அவங்க மிருகங்களாகத்தான் வாழுவாங்க."

சிறிபாலவின் கருத்து கனகசபைக்கு தெளிவாக விளங்க வில்லை. அவனைக் கேள்விக்குறியுடன் நோக்க, சிறிபால தொடர்ந்தும் பேசினான். "ஐயா, நீங்க எல்லாம் உங்கட ஊரில எப்படி வாழுறீங்க எண்டு எனக்குத் தெரியும். நான் ஒருக்கால் யாழ்ப்பாணத்துக்கு போயிருக்கிறன். அங்க நீங்கள் எல்லாம் விசாலமான இடத்தில சனநெருக்கடி இல்லாத இடங்களில வாழுறீங்க. சூழல் அசுத்தமாகிற சந்தர்ப்பமும் குறைவு. இங்க அப்படி இல்ல. இந்த சேரிபுறத்தைப் பாருங்க. ஒவ்வொரு வீடும் ஐம்பது சதுர அடி அளவில தான் இருக்குது. அதுக்குள்ள எத்தனை பேர் இருக்கிறாங்க எண்டு தெரியுமா? சில இடங்களில ஏன்ட வீட்டில இருக்கிற மாதிரி பத்து





பேர் கிடக்கிறாங்க. ஐயா, இங்க வீட்டுக்குள்ள கொஞ்சம் ஆக்கள் படுத்திருக்க, மீதிப் பேர் படுக்க இடமில்லாமல் 'பேவ்மென்றில' படுக்கிறாங்க. இப்படி நரக வாழ்க்கை வாழுறவங்க இந்த மாதிரி சந்தோஷமாக இருக்க வேணும். இல்லாட்டி அவங்க செத்துப் போயிடுவாங்க."

சிறிபால சொல்வதை கனகசபையினால் ஓரளவு ஏற்றுக் கொள்ளக்கூடியதாக இருந்தது. நள்ளிரவில் சலம் கழிக்க வெளியே சென்றுவிட்டு திரும்பி வரும் போது குடியிருப்புகளுக்கு முன்னால், வீதியோரத்தில் எத்தனை பேர் படுத்துக் கிடப்பதைக் கண்டு, அவர்களுக்காகப் பரிதாபப்பட்டிருக்கிறான்?

"சிறிபால, இதுக்கு அடிப்படைக் காரணம் என்ன எண்டு நினைக்கிறாய்?" கனகசபை ஏகாந்தமாக வினாவினான்.

"ஐயா, நீங்க படிச்சிருக்கிறீங்க. இது உங்களுக்கு தெரிய இல்லையா?"

"இல்லை." எவ்வித சிந்தனையும் இன்றி கனகசபை சொன்னான்.

"எல்லாமே சனப்பெருக்கம் தான். நாளுக்கு நாள் சனம் பெருகுது. அதோட உங்கட இனப்பிரச்சனையும் இதுக்கு முக்கிய காரணம்."

"என்ன மாதிரி?"

"யாழ்ப்பாணத்திலை இப்ப சண்டை நடக்குது. அதால உங்கட ஆக்கள் நிறையப் பேர் கொழும்புக்கு ஒவ்வொரு நாளும் படை எடுக்கிறாங்க. ஆனால், இதுக்கு ஏற்ற மாதிரி கொழும்பில வீடுகள் இல்ல. எங்கட நாட்டைப் பொறுத்தளவில சனப் பெருக்கத்திற்கு ஏற்ற மாதிரி வீடமைப்புத் திட்டங்கள் இல்ல எண்டு தான் நான் சொல்லுவன். இல்லாட்டால் கொழும்பில ஒரு கொஞ்ச இடங்கள விட எல்லா இடத்திலையும் சேரிகள் இருக்கமாட்டாது. முந்தி எல்லாம் ஏழைகள் தான் சேரிப்புறத்தில வாழ்ந்தாங்க. இப்ப நடுத்தர வகுப்பினர் கூட சேரிப்புறத்திற்கு படை எடுக்கத் தொடங்கிட்டாங்க. உங்கடை ஆக்களும் மூலை முடுக்கெல்லாம் வாழுறாங்க."

எவ்வித தடங்கலும் இன்றி, தெட்டத் தெளிவாக சிறிபால சொன்னான். அவனின் கருத்தாழமிக்க உரையாடலில் கனகசபை கவரப்பட்டான். இனி அவனுடன் சற்று 'சீரியஸாக' உரையாட வேண்டும் என்ற ஆசை கனகசபைக்கு பிறந்தது.

சிறிபாலவை பெருமையுடன் நோக்கியவாறு கனகசபை தனது பேச்சை ஆரம்பித்தான். "மூலப் பிரச்சினையான சனப்பெருக்கத்தை தடுத்து நிறுத்தினால் இந்த மாதிரி பிரச்சினை வருமா?"

சிறிபால மெல்லக் கனைத்தான். "சனப்பெருக்கத்தை அப்படியே நிற்பாட்ட முடியாது. அதைக் கட்டுப்படுத்தத்தான் முடியும். எவ்வளவுதான் கட்டுப்படுத்தினாலும் ஒவ்வொரு நாளும் தொகை கூடும். ஒரு நாளுமே குறையாது. குறையுறது எண்டால் போர் உக்கிரமடைய வேணும்."

சிறிபால இறுதியாக வெளியிட்ட கருத்தை கனகசபை அடிக்கடி நினைவில் இருத்தி, அதை அலசி ஆராய்ந்தான்.

'போர் உக்கிரமடைய வேணும்.....'

**க**னகசபை இரண்டு, மூன்று தடவைகள் கொட்டாவிவிட்டான். தூக்கம் கண்களைச் சுழற்றியது. நாள் முழுவதும் கொழும்பு மாநகரின் பெரும் பகுதிகளுக்கு நடந்தும், 'பஸ்'ஸிலும் சென்று வந்ததினால் ஒரே அசதியாக இருந்தது. மீண்டும் கவனத்தை 'அந்த இருவரும்' ஈர்த்தெடுத்தனர்.

விஜிதாவின் வீட்டில் இருந்து அவர்கள் வெளியேறி, நடந்து வந்தனர். கனகசபை அசையாமல் அவர்களைச் சுவாரஷ்யமாகப் பார்த்தபடி நின்றான். அவர்கள் அவனைத் தாண்டிச் சென்றனர். ஒருவன் பல தடவைகள் காறித்துப்பினான். இருவரும் மறைந்தவுடன், விஜிதாவின் வீட்டை கனகசபை ஆர்வத்துடன் நோக்கினான்.

வீதியோர மின்கம்ப ஒளி விஜிதாவின் வீட்டில் படர்ந்திருந்தது. வீட்டு வாசலின் அருகில் விஜிதா நிற்பது தெரிந்தது. அவனுக்கு 'ஜில்'லென்றிருந்தது. திடீரென உடம்பில் ஓர் உற்சாகம் புகுந்தது. விஷமத்தனமான எண்ணம் ஏற்பட, அது அவனை அங்கிருந்து விரட்ட முற்பட்டது.

கனகசபை அக்கம், பக்கம் நோட்டமிட்டான். வீதியோரத்தில் புழுதியுடன் இரண்டறக்கலந்து, நித்திரையில் ஆழ்ந்திருந்த இருவரைத் தவிர, வீதி 'பளிச்'சென்றிருந்தது. பக்கத்து வீட்டு 'ரேடியோ'வின் அலறல் அந்தப் பிரதேசத்தின் அமைதியைக் குலைத்தது.

கனகசபையின் மனம் ஒரு கோணத்தில் சரிந்து, நெளிந்து, வளைந்தது. சிறு துளியாக இதயத்தை நனைத்த சபலம், படிப்படியாக வெள்ளமாகிய போது தன்னை மறந்தவனாக, எல்லாக் கட்டுப்பாட்டையும மீறி விஜிதாவின் வீட்டை நோக்கி நகரத் தொடங்கினான்.

விஜிதா இன்னும் அதே இடத்தில், சவர்க்கார விளம்பரத்திற்கு 'போஸ்' கொடுக்கும் பெண்களைப் போல - கதவு நிலையில் சரிந்தபடி நின்றாள். கனகசபை அவளை நெருங்கிவிட்டான். அவள் முன்பாக





தயக்கத்துடன் நின்றான். மெல்லியதொரு புன்னகையை வெளிப் படுத்தியபடி தொண்டையைச் செருமினான்.

அவனை விஜிதா அசுவாரஷ்யத்துடன் நோக்கினாள். "ஐயா, என்ன வேண்டும்?" அவள் கேட்டுவிட்டு இரு கைகளையும் உயர்த்தி சோம்பல் முறித்தாள்.

விஜிதாவின் கேள்வி கனகசபையை தூக்கி எறிந்தது போல விளங்கியது. இப்போது என்ன சொல்வது? மனதில் தேங்கிக் கிடப்பதை அப்படியே அவிழ்த்துவிடுவதா? இல்லையென்றால்...... கனகசபை ஒன்றும் பேசாமல் அவளை ஆசைதீரப் பார்த்தபடி நின்றான்.

விஜிதாவுக்கு அவன் நிலை தெளிவாகி இருக்க வேண்டும். இப்படி எத்தனை பேரை அவள் கண்டிருப்பாள்?

"ஐயா, நீங்கள் எல்லாம் கௌரவமானவர்கள். நீங்கள் இந்த மாதிரி வரக்கூடாது. உங்கள் ஆசையை அடக்க பழகுங்கள்."

மீண்டும் படுக்கையில் புரண்டு, நித்திரை வரும் வரை விஜிதாவின் வார்த்தைகள் அவன் இதயத்தை வாளால் வெட்டி.....

**ஊ**ரில் இருந்து புறப்படுவதற்கு முதல் நாளிரவு அந்த விளக்கு வெளிச்சத்தில் மங்களம் ஈரமான குரலில் சொல்கிறாள். "நான் சொல்லுறதைக் கொஞ்சம் கேளுங்களேன். கூழோ, கஞ்சியோ குடிச்சு நாங்க எல்லாரும் ஒண்டாக இருக்கிறது தான் நல்லது. நீங்கள் கொழும்பிலையும், நானும், பிள்ளையளும் இஞ்சையும் வாழுறதில என்ன சந்தோஷம்?"

"இஞ்ச கமம் செய்து பிழைக்க ஏலுமோ? வானத்தையும், பூமியையும் நம்பி எனக்கு அலுத்திட்டுது. திரை கடல் ஓடியும் திரவியம் தேடு எண்ட நிலைக்கு வந்திட்டன்." கனகசபை காட்டமாகக் கூறினான்.

மங்களத்தின் முகம் கூம்பியது. சில விநாடிகள் மௌனத்திற்கு அடிமையானாள். எவ்வளவுதான் பிரதிவாதங்களை நடத்தினாலும் கனகசபை தனது வாதத்தை நிறுத்தமாட்டான். அது சரி என்றே இறுதி வரை சாதிப்பான். பல நாட்களாக அவன் வாதித்து, தன் எண்ணத்தை நிறைவேற்றுவதற்காக மறு நாள் கொழும்புக்கு பயணமாவதற்கு தயாராகிக் கொண்டிருக்கும் போது அவன் மனதை மாற்றமாட்டான் என்று அவளுக்குத் தெரியும். இருந்தும் ஒரு கடைசி முயற்சியாக.....

"அங்கை எங்கை தங்கி இருக்கிறதா நோக்கம்?" மங்களம் ஆர்வத்துடன் கேட்கிறாள்.

"முந்தி என்னோட வேலை செய்த சிறிபாலவின்ர வீட்டில. அவன் ஒருத்தன் தான் கொழும்பில இருக்கிறான். மற்றவையள் தூர இடத்தில இருந்து கோச்சியில வாறவையள். அதோட அவங்கட வீடு எங்கை இருக்குது எண்டு எனக்குத் தெரியாது. சிறிபாலவின்ர வீட்டுக்குத் தான் நான் போயிருக்கிறன்."

"சிறிபால? ஆள் ஆர்?"

"அவன் எங்கட 'செக்ஷன் பியன்'. நல்லவன். என்னில அவனுக்கு நல்ல விருப்பம். தன்ர வீட்டுக்குக் கூட்டிக்கொண்டு போய் தேத்தண்ணி தந்து எனக்கு சிங்களம் படிப்பிச்சவன். தமிழ் ஆக்கள் மாதிரி தமிழ் கதைப்பான். சில வேளையில செந்தமிழும் கதைப்பான். எல்லா விஷயத்திலையும் வலு கெட்டிக்காரன்..... வேலை கிடைச்ச பிறகு ஒரு அறைக்கு மாறிவிடுவன்."

"வசதியான வீடோ?"

கனகசபை அரைகுறையாகச் சிரித்தான். "கொழும்பில ஒரு 'பியன்' வசதியான வீட்டிலை இருக்க ஏலுமோ? சின்ன வீடுதான்..... அதில என்னால சரிக்கட்ட முடியும். கொஞ்ச நாளைக்குத் தானே?"

ஊரில இருந்து பல கஷ்டங்களுக்கு மத்தியில் வவுனியா வந்த கனகசபை, அங்கிருந்து 'ரயில்' ஏறி, கொழும்பு கோட்டையை அடைந்தான்.

கோட்டை 'ரயில்' நிலையத்தில் இருந்து புற்றீசல்களாக பெருவாரியான சனம் வெளிப்பட்டதைக் கண்டு அவன் ஆச்சரியத்தில் மிதந்தான். வீதியெங்கும் பரம்பிக் கிடந்த சனக்கூட்டம் அவனை வியப்பில் ஆழ்த்தியது. வாகன நெரிசலைக் கண்டு பிரமித்தான். வீதிகளைக் கடப்பதில் பதற்றமடைந்தான்.

பலருடனும் முட்டிமோதி, மெதுவாகவும், விரைவாகவும் நடக்கிறான். இருபது வருடங்களின் பின் எவ்வளவு மாற்றம்! முன்னர் சனசந்தடி அற்றிருந்த இடமெல்லாம் சனவெள்ளமாகக் காட்சி அளித்தது. சந்து பொந்துகளிலும் சனநெருக்கம், வாகன நெரிசல்......

கோட்டை, புறக்கோட்டை என்று அவன் சுற்றிச் சுற்றிப் பார்க்க அவனுள் வியப்பு, இனம் புரியாத கிலேசம். எல்லோரும் தன்னை மிதித்துவிடுவார்களோ என்ற காரணமற்ற பீதி.....

நடக்கிறான், நடக்கிறான்..... அவன் ஒரு வருடம் மட்டுமே பணிபுரிந்த அலுவலகம் தென்படுகிறது. அதில் ஒரு மாற்றமும் இல்லை.





சுவர்களில் அதே அழுக்கு. 'கிளார்க்' உத்தியோகத்தை உதறித் தள்ளிவிட்டு ஊரில் கமம் செய்து வாழப் போவதாக கனகசபை சொன்ன போது ஆர்தர் சில்வா, ரட்ணாயக்கா, லெஸ்லி என்று பலர் பரிகாசம் செய்ததை நினைத்துப் பார்க்கிறான்.

சிறிபால பகிடி பண்ணுகிறான்: "ஐயா பசுமைப் புரட்சி செய்ய ஊருக்குப் போறார்" என்று சிறிபால பல தடவைகள் கனகசபையைச் சீண்டி.....

சிறிபால கிராண்ட்பாஸில், சனசந்தடி அற்ற, இரண்டறை வீட்டில் வாழ்ந்தவன். அவன் வீட்டுக்கு சம்பளத்தன்று போய் 'பார்ட்டி' நடத்திய ஞாபகம் கனகசபையை விட்டு அகலவில்லை. 'ஐயா, ஐயா' என்று சிறிபால விளித்து, அன்பொழுகக் கதைத்ததை கனகசபை இன்னும் மறக்கவில்லை. வெறி மிஞ்சிய நிலையில் அவன் வீட்டில் இரவைக் கழித்த போது, திருமணமான புதிதாக இருந்தும், சிறிபாலவின் மனைவி தன்னுடன் அன்புடனும், பண்புடனும் நடந்ததை கனகசபை எண்ணி மனம் களிப்படைந்திருக்கிறான்.

'பஸ்' ஏறி கிராண்ட்பாஸை அடைந்த கனகசபை நடந்தான். சிறிபாலவின் வீட்டை அடையும் வரை வழியில் தென்பட்ட புதிய கட்டிடங்களை அதிசயமாகப் பார்த்தவண்ணம் நடந்தான். சிறிபாலவின் வீட்டைக் கண்டு பிடித்தான். வீடு சற்று நவீனமயமாகி இருந்தது. சிறிபால வாழ்க்கையில் முன்னேறிவிட்டானாக்கும் என்று எண்ணியவனாக கனகசபை கதவைத் தட்டினான். அறிமுகம் இல்லாத ஒருவர் கதவைத் திறந்தார். சிறிபாலவை விசாரித்தான் கனகசபை. அவன் அந்த வீட்டில் இருந்து வெளியேறி வேறொரு இடத்தில் இருப்பதாக, சொல்லி, ஒரு சிறுவனை இடம்காட்ட அனுப்பி வைத்தார் வீட்டுக்காரர்.

பாலத்துறை பாலத்தைத் தாண்டி, குறுகலான வீதி ஒன்றின் ஊடாக சிறுவனுடன் கனகசபை நடந்தான். பல சந்திகளைத் தாண்டி நடந்தனர். வழிவழியே எதிர்ப்பட்ட பெருவாரியான ஆட்களைக் கண்டு, குப்பைகள் வாரியிறைக்கப்பட்ட வீதிகளின் இருபுறமும் கிடந்த பழங்காலத்து, அழுக்கான குடியிருப்புக்களைக் கண்டு, குடியிருப்புக்களின் முன்பாக விளையாடிக் கொண்டிருந்த 'அழுக்கு' சிறார்களைக் கண்டு கனகசபைக்கு வெறுப்புணர்ச்சி மனதினுள் கிளம்ப ஆரம்பித்தது. நடைபாதை வியாபாரிகள் பரப்பி வைத்திருந்த 'அச்சாறு', வெருளு, இறால் வடை, அவித்த கடலை, ஜம்பு என பல தின்பண்டங்களில் ஈக்கள் மொய்த்தபடி கிடப்பதைக் கண்டு கனகசபைக்கு அருவருப்பாக இருந்தது. சாக்கடைகளில் இருந்து வெளிப்பட்ட நாற்றத்தைச் சகிக்க முடியாமல், மூக்கைப் பொத்தியபடி

பலிகடா போல சிறுவனுடன் நடந்த கனகசபைக்கு ஏதோ ஒன்றுக்குள் மாட்டிக் கொண்டது போன்ற உணர்வு இறுகத் தொடங்கியது.

இப்போது கனகசபைக்கு சினம் ஏற்படத் தொடங்கியது. "வீட்டைக் காண இல்லை" என பொறுமை இழந்தவனாகக் கேட்டான். "அங்க தான் இருக்குது" என சிறுவன் சுட்டிக்காட்டிய போது, கனகசபை நின்ற மேட்டுப்பகுதியில் இருந்து பள்ளமான இடத்தில் விரிந்து கிடந்த சேரிப்புறத்தைக் கண்டு அவன் திடுக்கிட்டுப் போனான்.

எடுத்த எடுப்பில் அந்த சேரிப்புறத்தை நோக்கிய போது, அந்த சூழலை தன் மனதுக்குள் பதித்த போது கனகசபையை வேதனை நன்கு அழுத்தியது.

கால்கள் கூசிய நிலையில் முன்னேறுகிறான். சேறும், சகதியும், குப்பைகளும் நிறைந்த குறுகிய மண் வீதியில் நடக்கிறான். கண்களுக்கு தெரிந்த குடியிருப்புக்கள் யாவுமே ஒரே அழுக்காக, அருவருப்பை தூண்டக்கூடிய விதமாக விளங்கின.

சில வீடுகளின் தகரக் கூரைகளில் கருவாடு காய்ந்து கொண்டிருந்தது. குடலை அரிப்பது போன்ற நாற்றம் வீசியது. 'ஹொட்டேல்' ஒன்றில் இருந்து பாடல் ஒன்று பயங்கரமாக அலறுகிறது. கரத்தைக்காரர்கள் நிலத்தில் குந்தியிருந்தபடியே பீடி புகைக்கிறார்கள். வேறு சிலர் 'ரேஸ் பேப்பரில்' தம்மை மறந்திருக்கின்றனர். வீதியோரம் முழுவதும் பலவகையான தின்பண்டங்கள் தயாரிக்கும் இடமாக மாறி, பலவகையான மணத்தை வெளிப்படுத்துகின்றது. அழுக்கு நிறைந்த உடையுடன் எண்ணெய் ஊறின நிலையில் காணப்பட்ட ரொட்டிக்காரன் தனது வேலையில் கண்ணும் கருத்துமாக இருக்க, அவனைச் சுற்றி அரைகுறை அழுக்கு ஆடைகளில் அடுத்த தலைமுறையின் 'கதாநாயக, நாயகிகள்' ஈக்களாக அவனைச் சூழ்ந்து நிற்க, சொறி நாய்கள் அங்கும், இங்கும் நிலத்தை முகர்ந்து பார்த்தபடி ஓட..... புழுதியைக் கிளப்பியபடி 'ஓட்டோ ரிக்ஷாக்கள்' விரைந்து செல்ல..... கூச்சல் ஒரு புறம், இரைச்சல் மறுபுறம்.எவருடனும் முட்டி மோதுவதைத் தவிர்த்தவனாக கனகசபை நடந்தான்.

கனகசபையின் வேதனை பன்மடங்காகிறது. 'இந்த மாதிரியான இடத்திலா இருக்கப் போறன்' என்று எண்ணிய போது பலகைகள், தகர விரிப்புக்கள், 'பிளாஸ்ரிக்' சீலைகள், 'ரயர்கள்', இத்துப்போன மரங்கள் ஆகியவற்றினால் உருவான வீட்டின் முன் சிறுவன் நின்றான். "சிறிபால அய்யே" என்று பலதடவைகள் கத்திய பின்னர் ஒவ்வொரு அளவுகளிலும் ஆறு பிள்ளைகள் வெளியே வந்தனர். இறுதியாக சிறிபால வந்தான். அவன் உருவத்தில் தெரிந்த மாற்றம்!





"நீங்க..... நீங்க..... கனகசபை ஐயா தானே?" என சிறிபால அடையாளம் கண்டான். கனகசபை மகிழ்ச்சியுடன், "ஓமோம் சிறிபால" என்று தலையாட்ட, உடனே சிறிபால "ஐயா" என்றபடி கனகசபையை கட்டி அணைத்தான். இறுக்கமான அணைப்பு. "வாங்க ஐயா" என்று கனகசபையை உள்ளே அழைத்துச் சென்றான். வீட்டினுள் நுழைந்த போது, இரு பிள்ளைகள் நிலத்தில் உருண்டு, புரண்டு விளையாடு வதை கனகசபை கண்டான். சிறிபாலவின் மனைவி பொடிமெனிக்கே முகமலர்ச்சியுடன் வரவேற்றாள்.

பலகைப் பெட்டி ஒன்றில் கனகசபை அமர்ந்தான். வீடு என்ற பெயரில் தனது ஊர் வீட்டின் பின்புறத்தில் கட்டப்பட்டிருந்த ஆட்டுக் கொட்டிலின் அளவில் விளங்கிய அந்த வீட்டை கனகசபை கண்களால் அளந்தான். பலகை மறைப்பில் தொங்கிக் கொண்டிருந்த ஊத்தை நிறைந்த உடுப்புக்கள். நிலத்தில் வழிந்தோடிய பிள்ளை களின் சிறுநீர், எங்கிருந்தோ வெளிப்பட்ட பலவிதமான மூக்கை அடைக்கும் நாற்றங்கள்.....

யாவும் கனகசபைக்கு குமட்டலை ஏற்படுத்தின. புண்களும், சிரங்குகளும் நிறைந்த கால், கைகளைப் பார்க்க..... அருவருப்பும், எரிச்சலும் கனகசபையை நெருங்குகின்றன. மூச்சு எடுத்து வெளிவிட தயங்கிய நிலையில் தன் உள்ளத்தினுள் ஏற்பட்ட பல வகை உணர்ச்சிகளை அடக்கிய நிலையில் துடித்தான்.

"சிறிபால, ஏன் இந்த தொந்தரவான இடத்தில குடியேறி இருக்கிறாய்?" கனகசபை கேட்டான்.

"ஐயா, இந்த இடத்திற்கு என்ன குறைச்சல்? முந்தி இருந்த வீடு வாடகை வீடு. இது எனக்கு சொந்தமானது. அடிப்படை வசதி இல்லாட்டாலும், எல்லாமே இலவசமாக கிடைக்குது. அதுவும் தேர்தல் காலத்தில எங்களை எல்லாம் நல்லா கவனிப்பாங்க. கலியாணம் முடிச்ச புதிசில கிராண்ட்பாஸ் வீட்டில இருந்தன் தானே? ஆனால், பிள்ளைகள் பெருகப் பெருக வாடகை குடுக்க கட்டுப்படியாக இல்ல. என்ன செய்வம் எண்டு யோசிச்சன். அப்ப தான் இந்த மூளை வந்தது. நானும், இன்னும் இரண்டு குடும்பமும் முதல்ல வீடுகளை கட்டி இதில குடியேறினம். அந்த நேரத்தில நிறைய எதிர்ப்பு இருந்தது. 'முனிசிப்பல'காரங்க எங்களுக்கு எதிராக 'கேஸ்' எல்லாம் போட்டாங்க. ஒரு மாதிரி எல்லாத்திலையும் வெற்றி பெற்றம். அப்ப ஒரு நாயும் இந்த பக்கம் குடியேற வரயில்ல. சட்டப்பிரச்சினை எல்லாம் முடிஞ்ச பிறகு, சனமும் கொஞ்சம் கொஞ்சமாக கூட எத்தனை பேர் இந்தப் பக்கம் படை எடுத்தாங்க தெரியுமா? இப்ப இந்த சேரிப்புறத்தில நூற்றி அறுபத்தி இரண்டு குடும்பங்கள்

இருக்குது. இந்த இடத்திற்கே எத்தனை பேர் விலை பேசுறாங்க தெரியுமா?" என்று மூச்சுவிடாமல் சிறிபால சொன்னான்.

கனகசபை மௌனம் சாதித்தான். ஒன்றும் பேசவில்லை. சிறிபாலவை கண் இமைக்காமல் பார்த்தபாடி இருந்தான்.

"ஐயா, இந்த சேரிப்புறத்திற்கு என்ன பெயர் எண்டு தெரியுமா?"

"தெரியாது."

"சிறிபாலபுர...... ஏன்ட பெயரைத் தான் வைச்சிருக்கிறாங்க. ஏன் தெரியுமா? கொழும்பு மாவட்ட 'எம்.பி.' டங்கன் அபேசேகர ஏன்ட கூட்டாளி. அவருக்காக நான் 'எலக்ஷனில' வேலை செய்தன். இங்க இருந்த எல்லாரும் அவருக்கு 'வோட்' போட்டாங்கள். அந்த நன்றிக் கடனுக்காக அவர் இதை சிறிபாலபுர எண்டு பெயர் வைச்சிருக்கிறார்." சிறிபால மலர்ச்சியுடன் புன்னகைத்தான். "ஐயா....." அவனே தொடர்ந்தும் பேசினான். "கொழும்பிலையே இந்த இடம் ஒரு '∴பேமஸ்' இடம்"

எலலாததுககும. இஞ்ச நடககாத 'பிசினஸ்' இல்லை எண்டே சொல்லலாம்." சிறிபாலவின் முகத்தில் ஒரு பெருமை படர்ந்தது.

ஒரு மௌனம விழுந்தது திடீரென கனகசபையை சிறிபால ஆர்வத்துடன் நோக்கினான். "ஐயா, இந்த சேரிப்புறத்தை உங்களுக்கு ஞாபகம் இருக்குதா? நீங்க என்னோட வேலை செய்யக்கில்ல இஞ்ச வந்திருக்கிறீங்க. ஆனால, அப்ப இது விளையாட்டு மைதானம். இந்த விளையாட்டு மைதானத்தில நான், நீங்க, ரட்ணாயக்கா 'மாத்தையா' எல்லாம் இரவில சாராயம் குடிச்சு, 'பைலா' போட்டிருக்கிறம். இண்டைக்கு சேரிப்புறமாகிவிட்டுது. இது மாதிரி எத்தனை பொது இடங்கள் எல்லாம் சேரிப்புறங்களாகி விட்டுது எண்டு உங்களுக்கு தெரியுமா? இதுக்கு காரணம் என்ன? சனப்பெருக்கம். மற்றது இனப்பிரச்சனை."

கோட்டை ரயில் நிலையத்தில் இருந்து சிறிபாலவின் வீடு வரைக்கும் வந்த பொழுது வீதியில் தெரிந்த வாகன நெரிசல், வீதியோரங்களில் கண்ட சனக்கூட்டம், ஒவ்வொரு வீடுகளுக்குள் கிடந்த குடும்பங்களின் எண்ணிக்கை யாவுமே சிறிபாலவின் கூற்றை மெய்ப்பித்தன. இருபது வருடங்களுக்கு முன் இப்படியா வாகன நெரிசல் இருந்தது? வீதியோரங்களில் சனக் கூட்டம் இருந்தது? நடக்கும் போது எவராவது முட்டி மோதி இருக்கிறார்களா? சனப்பெருக்கம் பல தாக்கங்களை ஏற்படுத்தித்தான் இருக்குது.





கனகசபை கொஞ்சம், கொஞ்சமாக ஊரில் இருந்து கொழும்புக்கு வந்த நோக்கத்தை சொல்கிறான். சிறிபாலவுடன் தங்கி இருக்கும் நோக்கத்தையும் சூட்சுமமாக வெளியிட்டான்.

"ஐயா, இது ஒரு ஊத்தையான இடம். நாற்றத்தை சகிக்க வேணும். அக்கம் பக்கத்தில இருந்து வாற சத்தத்தை சகிக்க வேணும். நாள் முழுவதும் காதை பிய்த்தெடுக்கிற மாதிரி 'ரேடியோ', 'டேப் ரெக்கோர்டர்' அலறுவதை சகிக்க வேணும். என்ர பிள்ளையளின்ர குழப்படியை சகிக்க வேணும்....." என்று சிறிபால சொல்லிக் கொண்டே போக, "பரவாயில்லை. வேலை கிடைக்க மட்டும் இஞ்ச இருக்கிறன்" என கனகசபை சொன்னான்.

ஆனால், கனகசபை எதிர்பார்த்ததிற்கும் மேலாக அந்த இடம் மோசமானதாக விளங்கியது. மலசலகூடத்திற்குச் சென்றால் அங்கு ஒரு 'க்யூ'. குளிக்கச் சென்றால் அடிதடி சூழ்நிலை. நள்ளிரவின் பின் தான் கண்களை மூடலாம். அது வரை ஒவ்வொரு திக்குகளில் இருந்தும் ஒவ்வொரு விதமான இரைச்சல், இசை, பாடல், குடிகாரர்களின் அட்டகாசம், வாக்குவாதங்கள், சண்டைகள், சச்சரவுகள்..... ஈக்களின், நுளம்புகளின், நாய்களின் தொல்லைகள்..... நாற்றங்கள்..... அகோரங்கள்..... கால்களை, கைகளை, முழு உடம்பை அடிக்கடி சொறிவதும், தடவுவதும்.....

எல்லாவற்றையும் சகித்த கனகசபை வேலை தேடி பல இடங்களிலும் அலைந்தான். ஒரு இடத்திலையும் அவனுக்கு வேலை கிடைக்கவில்லை. பத்திரிகைகளில் விளம்பரங்களைப் பார்த்துவிட்டு விண்ணப்பித்த போது ஒரு 'இன்டர்வியூ'வுக்கும் அழைப்பு வரவில்லை.

"அதுதான் ஐயா நீங்க வந்த முதல் நாளே சொன்னனான். முந்தி மாதிரி இப்ப வேலை எடுக்கிறது அப்படி இலேசு இல்ல. இப்ப ஒரு வேலைக்காக எத்தனை பேர் போட்டி போடுறாங்க தெரியுமா? ஒரு சின்ன வேலை எடுக்கிறதுக்கு ஆட்கள் படுறபாடு...... சனப் பெருக்கத்தின்ர இரண்டாவது பிரச்சினை இதுதான்" என்று சிறிபால சொன்ன போதும் கனகசபை தனது முடிவைத் தளர்த்தத் தயாராக இருக்கவில்லை.

வேலை தேடும் படலத்தை சலிப்பின்றி தொடர்ந்தான் கனகசபை. அதிர்ஷ்டவசமாக அவனைத் தேடி ஒரு வேலை வந்தது. 'கம்பனி' ஒன்றில் 'கிளார்க்' வேலை. அதன் 'எம்.டி.' ஒரு கறார் பேர்வழி. மூவாயிரத்து ஐநூறு ரூபா தான் சம்பளம் என்று முடிவாகக் கூறிவிட்டார். கொழும்பில் ஓர் அறை எடுத்து, மூன்று நேரமும் வெளியே சாப்பிட்டால், ஊருக்கு ஒரு சதமும் அனுப்ப முடியாது. என்ன செய்வது? வேலையைப் பொறுப்பேற்பதா, இல்லையா? அவன் மனதில் ஒரு 'சொர சொரப்பு'.

முளையைப் போட்டு உருட்டினான். பிரட்டினான். திடீரென அரைகுறை எண்ணம் தோன்றுகிறது. சில தியாகங்களை - ஒரு நேரச் சாப்பாட்டை, அறையில் தங்கியிருக்கும் சொகுசை மறந்தால், 'பஸ்'ஸை மறந்து, நடையை நினைத்தால் மூவாயிரத்து ஐநூறில் ஆயிரத்து ஐநூறை ஊருக்கு அனுப்பலாம். முன்னையதையும், பின்னையதையும் நிறைவேற்றலாம். உடல் அயர்வு தான் ஏற்படும். ஆனால், அறையின் நிழலை இழக்கிறதென்றால்..... சேரிவாசியாக வேண்டும். அவனுக்கு அது பழக்கமில்லை. அவன் குடும்பத்தில் - அண்ணன், தம்பி, அத்தான் என்று எவரும் இப்படியான 'தொந்தரவான' இடங்களில் வாழ்ந்ததில்லை. அவன் வாழ்வதென்றால்.....? ஏசுவார்கள். கேலி செய்வார்கள். ஆனால், அவன் பிறரை நம்பாமல் வாழ வேண்டும். அவர்களை நம்பி வாழ்க்கையை அகட்டவோ, நீட்டவோ, நிமிர்த்தவோ, குறுக்கவோ அவனால் முடியாது. மனதை நிசப்தத்தில் ஆழ்த்தி, தீர்மானம் எடுப்பதில் தத்தளித்தவன், தர்மலிங்கத்தை எதேச்சையாக வழியில் சந்தித்தான். தர்மலிங்கம் அவனது ஊரைச் சேர்ந்தவன். பல ஆண்டுகளாக கொழும்பில் பணி புரிகிறான். இருவரும் குசலம் விசாரிக்கின்றனர்.

"கொழும்பில என்ன செய்யுறாய்?" தர்மலிங்கம் ஆர்வமாக விசாரிக்கிறான்.

ஊரில் இருந்து புறப்பட்டது முதல் வேலை கிடைக்கும் வரை நடந்தவற்றை கனகசபை சுருக்கமாக விபரித்தான்.

"வேலையை ஏற்றுக் கொண்டிட்டியோ?"

"இல்லை. கிடைக்கிற சம்பளத்தில மனுசிக்கும், பிள்ளையளுக்கும் காசு அனுப்புறதெண்டால் நான் எங்கையும் சேரிப்புறத்தில தான் தங்க வேணும். அதால திரும்பி ஊருக்கே போய் விடுவமோ எண்டு நினைக்கிறன்."

தர்மலிங்கம் கோபத்துடன் கனகசபையை நோக்கினான். "மடையன் மாதிரி கதைக்காதை. பேசாமல் வேலையை பொறுப்பெடு. வேலை தேடி கொழும்புக்கு வந்திருக்கிறாய். வேலையும் கிடைச்சிருக்குது. சேரிப்புறத்தில இருந்தால் தான் ஊருக்கு காசு அனுப்பலாம் எண்டால் இரன். யாழ்ப்பாணத்தில இப்ப இருக்கிற சூழ்நிலையில எத்தனையோ கஷ்டங்களுக்கிடையில போராட்டம் நடத்துற மாதிரி வாழ்க்கையை நீ நடத்த இல்லையா? அது மாதிரி இஞ்ச ஒரு போராட்டம் நடத்தி வாழப் பார்."

"அந்த சூழ்நிலை வேற. இந்த சூழ்நிலை வேற....."





தர்மலிங்கம் இடைமறித்தான். "எல்லாமே ஒண்டு தான். ஊரில முந்தி 'லைட்' இருந்தது. இப்ப இல்லை. அதுக்காக நீ செத்துப் போயிட்டியோ? அங்கை இருக்கிற சூழலில எங்கட பெடியள் எல்லாம் மெழுகுதிரி வெளிச்சத்தில படிச்சு 'பாஸ்' பண்ணி 'வாஸிட்டி'க்கு எடுபடவில்லையோ? சூழ்நிலைக்கு ஏற்ற மாதிரி 'அட்ஜஸ்ட்' பண்ண வேணும். அது தான் வாழ்க்கை."

நிரம்பிய யோசனையுடன் கனகசபை வீடு சென்றான். தர்மலிங்கம் தனது கண்களை திறந்து விட்டமாதிரி கனகசபைக்கு இருந்தது.

ஒரு நிதர்சனமான தீர்மானத்திற்கு வந்தான்.

கனகசபை ஒரு சேரிவாசியானான்.

*(இலங்கைச் சுற்றாடல் வெகுஜனத் தொடர்பாளர் பேரவை 'சனத்தொகை' என்ற தொனிப்பொருளில் 1994இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றது.)*

# முகவரியைத் தேடுகிறார்கள்

**தா**ய் மண்ணை மிதித்து சிறிது நேரத்தில், அளவாளவும் போது, நிதானமாக, தாழ்ந்த குரலில், ராகவன் சொன்னான்:

"அது எழுந்தமான முடிவல்ல. கன நாளா யோசிச்சு எடுத்த முடிவு. அதுக்கு நிறையவே எதிர்ப்பு இருக்கும் எண்டு எனக்குப் பரிபூரணமாகத் தெரியும். ஆனால், காதலை மதிச்சபடியால அந்த முடிவுக்கு வந்தன். ஒரு வேளை நான் சேற்றைப் பூசிக் கொண்டு விட்டேனோ என நீர் நினைப்பீர். அப்படி நீர் நினைச்சால் அது சரியாகவும் இருக்கலாம்."

ராகவன் ஆறுதலாகப் பெருமூச்சொன்றைவிட்டான். அவன் முகத்தில் இன்னமும் களைப்பு சாயம் பூசியிருந்தது. நீண்ட நேர விமானப் பயணத்தின் களைப்பு, நித்திரையின்மை அவனுள் அயர்ச்சியை தோற்றுவித்திருந்தது. போதாக்குறைக்கு தடிமலும், இருமலும் இடையிடையே அவனை வதைத்தக் கொண்டிருந்தன.

சுவிட்சர்லாந்திலிருந்து இருபத்தி இரண்டு வருடங்களின் பின்னர் தாய் மண்ணை மிதித்திருந்தான். கற்பனைகளை நிதர்சனமாக்குவதற்கு, எதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதற்கு வந்திருப்பதாக கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் உற்சாகத்துடன் சொன்னான். அவன் தமிழில் புரள்வு இல்லை. நிறையத் தெளிவு. இடையிடையே இலக்கணச் சுத்தமாகப் பேசினான்.

அவனை விமான நிலைத்தில் கண்ட போது என்னால் அவனை அடையாளம் கண்டு பிடிக்க முடியவில்லை. அவன் தான் முதலில் என்னைக் கண்டு கையசைத்தான். 'கோட்' அணிந்து, 'டை' கட்டி, 'கூலிங்கிளாஸ்' போட்ட ஒரு கனவானைத் தேடியதில் தான் என்னால் அவனை அடையாளம் காண முடியவில்லையோ? எளிமையாக, சாதாரணமாக அலுவலகம் செல்லும் நிலையில், 'கோட்', 'டை', 'கூலிங் கிளாஸ்' அற்ற நிலையில்......... இளைஞனாக, வாலிபத் துடிப்பில், பட்டதாரி என்ற அந்தஸ்தில் - தொழில் தேடிக்கொண்டிருந்த வேளையில் - வீதியில் யதேச்சையாகக் கண்டு குசலம் விசாரித்த பின்னர், இப்போது தான் காண்கிறேன். அவன் இளமை





அகன்றுவிட்டது. முதுமை சற்று அதிகமாகவே அரவணைத்திருந்தது. முகத்தில் சுருக்கங்கள் என்றவாறு.....

சுவிட்சர்லாந்திற்கு சென்ற பின் அவனுடனான தொடர்பு புத்தாண்டு வாழ்த்துக்களுடன் தொடர்ந்தது. இடைக்கிடை நாட்டு நடப்பு இலத்திரனியல் தபாலில் சிக்கிக்கொள்ளும். அவை நீண்டவையாக, நிறையவே அரசியலாக விளங்கும். மற்றும்படி சிறிய ஆங்கில வசனங்களுடன் குறுகிய மடல்கள். கடைசியாக வந்த மடலில் ஒரு சின்னக் கோரிக்கை.

"இலங்கை வரவிருக்கிறேன். உம்முடன் தங்க முடியுமா?" என்று அவன் குறிப்பிட, "அதற்கென்ன வாரும்" என பதில் அளித்தேன்.

ராகவன் நிறையவே படித்திருந்தான். பல்கலைக்கழகப் பட்டப்படிப்பு முடிந்த கையோடு அமெரிக்கா சென்றவன் ஒரு கலாநிதிப் பட்டத்தை அங்கு சுவீகரித்தான். இன்னொரு கலாநிதிப் பட்டத்தை சுவிட்சர்லாந்தில் பெற்றான். அங்கு செல்லும் வழியில் விமானத்தில் தான் அந்த சந்திப்பு.......... அச்சந்திப்பே அவனது வாழ்க்கையை நிறையவே மாற்றிவிட்டது. பல திருப்பங்கள்.......

போலின்! "அவளோட கதைக்கக்கிள்ளை....... திக்கித் திணறி அவள் இங்கிலிஷ் பேசக்கிள்ளை......... அந்த குறுகுறுத்த கண்கள்......... அதில தெரிஞ்ச ஈர்ப்புச்சக்தி.......... சின்னஞ்சிறிய உருவமைப்பில பதுங்கியிருந்த வடிவு......... சா! உண்மையிலையே நான் என்ர மனதை பறி கொடுத்திட்டன்........" இப்படியொரு வருணிப்பு ராகவனின் சொற்களில் வெளிப்பட்டது.

ராகவன் அவளில் கவரப்பட்டுவிட்டான்.

"அந்த நேரத்தில நான் சந்திச்ச தமிழ் பெடிச்சியளை விட, அமெரிக்காவில கண்ட வெள்ளைத் தோல்காரியளை விட அவள் சிறப்பா தெரிஞ்சாள். ஒரு தேவதை மாதிரி......... சிரிக்கிறீரா?"

ராகவன் தனது வயதை மறந்தவனாக, என் சிரிப்பை அமிழ்த்தியபடி, அட்டகாசமாகச் சிரித்தான். அச்சிரிப்பில் மகிழ்ச்சி இல்லை. வெற்றிக் களிப்பு போல.........

**ரா**கவனின் முகத்தில் ஒரு தெளிவு இருந்தது. தேனீரை ருசித்தான். என் துணைவி அவனிடம் 'கதை' பிடுங்கினாள்.

"இஞ்ச இருக்கிற பொம்பளையளை விட........ இனம், மதம், மொழி, கலாச்சாரம், தேசியம், தாய் நாடு எண்டு எல்லாத்தையும் மறந்திட்டு....... இங்கிலிஷையே கொச்சையாக கதைக்கிற ஒரு

பொம்பளையை கட்டுறதுக்கெண்டு எப்படி உங்களுக்கு மனம் வந்துது?"

சுகந்திக்கு பதிலாக மௌனம் தான் கிட்டியது. அவன் பதில் அளிக்க முயல்வதாகவும் தெரியவில்லை. வினாடிகள் நிமிடமொன்றைத் தொட, சுகந்தியின் முகத்தில் ஓர் ஆர்வம், தவிப்பு...... பொறுமையைக் கட்டுப்படுத்த சுகந்தியினால் முடியவில்லை. அவள் கேட்டுவிட்டாள். "காதலுக்கு கண் இல்லை எண்டு நினைச்சீங்களா? இல்லாட்டி காதல் தான் பெரிசு எண்டு நினைச்சீங்களா? இல்லாட்டி விரக்தியால ஒரு முடிவை அரைகுறையாக எடுத்தீங்களா."

ராகவனின் யோசனையில் முற்றுப்புள்ளி. சில வினாடிகளில் முகத்தில் கருமை படர்ந்தது. அவன் கண்களில் ஒரு சோகம் குடிபுகுந்தது. நீர்த்திவலைகள் எட்டிப் பார்த்தன. கண்களை துடைக்க வேண்டும் என்ற எண்ணமின்றி......... பார்வையில் இலக்கின்றி...........

"எங்கட சமுதாயத்தில புரையோடிக் கிடக்கிற சம்பிரதாயத்தால தான் இப்படி ஒரு முடிவை எடுத்திட்டனோ எண்டு நான் இடைக்கிடை நினைக்கிறனான்."

தெள்ளத் தெளிவாக வார்த்தைகள் அவனிடமிருந்து வெளிப்பட்டன. அவற்றில் ஏமாற்றத்தின் தொனி நிறைந்திருந்தது. எரிச்சல் கோடிட்டிருந்தது. துயரம் ஒரு மங்கலாக..........

சுகந்தி பதிலுக்கு அவசரப்படவில்லை. பொறுமை காத்தாள். அவனே பேசட்டும் என்று அவனை நோக்குவதும், நோக்காததுமாக............

ராகவன் இரண்டு, மூன்று தடவைகள் இருமினான். தொண்டையைச் செருமியபடி பேசலானான், ஒரு பிரசங்கம் போல.........

"எனக்கு ஒரு தங்கச்சி இருக்கிறா எண்டு உங்களுக்குத் தெரியும் தானே?........... அவவுக்கு நிறைய இடங்களில கலியாணம் பேச வேண்டி இருந்தது. சாதகம் பொருந்தினால் சீதனம் பொருந்தாது. சீதனம் பொருந்தினால் சாதகம் பொருந்தாது. ரண்டுமே பொருந்தினால் பொம்பிளை வடிவு இல்லையெண்டு........ இப்படி எத்தனை கோணல்கள்? எத்தனை அலைச்சல்......... நிறையவே மன உளைச்சல். ஆறு, ஏழு வருசமாக முழு மூச்சாக....... ஒரு தொழில் செய்யுற மாதிரி அவவுக்கு மாப்பிளை தேடித் திரியுற வேலை.......... கடைசியா கட்டினா........ நல்ல ஒரு மாப்பிளை. இப்ப ரண்டு பிள்ளையளோட கனடாவில......... அந்த ஆறு, ஏழு வருசத்துக்குள்ளை என்ர வயசும் ஏறி, தலையும் அரை வழுக்கையாகி....... என்ர படத்தைப் பார்த்த சில பெடிச்சியள் தாத்தாவுக்கு இந்த வயசில கல்யாணமா எண்டு





கேலி செய்திருக்கினமாம். நிறையப் பகிடிக் கதையள்....... கலியாணம் முடிக்காமல் அமெரிக்காவுக்கு கிளம்ப வேண்டி வந்திட்டுது. பிறகு நடந்தது எல்லாம் உங்களுக்குத் தெரியும் தானே! இது எல்லாத்துக்கும் என்ன காரணம்?"

சுகந்தியை ராகவன் கேள்விக்குறியோட பார்க்க, "விதியா?" என சுகந்தி நுனிப்புல் நிலையில் கேட்க, "இல்லை, இல்லை............ எங்கட சமூக அமைப்புத்தான் என்னை அந்த நிலைக்குத் தள்ளியது........" வார்த்தைகள் தடைப்பட்டன. பேசுவதை நிறுத்தினான்.

தொலைபேசி அழைப்பு வர அந்த சாட்டில் சுகந்தி அங்கிருந்து அகல, ராகவன் என்னைப் பார்த்ததன்.

"அது எழுந்தமான முடிவல்ல. கன நாளா யோசிச்சு எடுத்த முடிவு. அதுக்கு நிறையவே எதிர்ப்பு இருக்கும் எண்டு எனக்குப் பரிபூரணமாகத் தெரியும். ஆனால், காதலை மதிச்சபடியால அந்த முடிவுக்கு வந்தன். ஒரு வேளை நான் சேற்றைப் பூசிக்கொண்டுவிட்டேனோ என நீர் நினைப்பீர். அப்படி நீர் நினைச்சால் அது சரியாகவும் இருக்கலாம்."

ராகவனின் முகத்தில் இப்பொழுது ஒரு தெளிவு.

மதியம் வெளியில் சென்ற ராகவன் இரவு உற்சாகத்துடன் வீடு வந்து சேர்ந்தான். அவனுள் ஓர் ஆனந்தம், ஆச்சரியம், அதையும் மீறி ஓர் ஏமாற்றம்........

அவனின் இரு உறவினர்கள் வெள்ளவத்தையில் தொடர்மாடி வாசிகள். ஒருவர் மதிய போசனத்திற்கும், மற்றவர் இராப் போசனத்திற்கும் அழைப்பு விடுத்திருந்தனர்.

"எங்கடை ஆக்கள் நல்ல வசதியாகத்தான் இருக்கினம். நான் எதிர்பார்க்க இல்லை. சொந்த வீடு........ 'ஏர்கண்டிஷன்' அறை....... 'கேபிள் ரீ.வி'........ 'கிரனைட்' பதிச்ச நிலம்...... 'லக்ஷறி கிச்சன்'........... வெள்ளவத்தை ஒரு குட்டி சிங்கப்பூர் மாதிரி ஜொலிக்கிறது." ஆச்சரியம் மேலிட, பற்களை வெளிச்சமாக்கிச் சொன்னான்.

"உங்கட சுவிட்சர்லாந்தை விடவோ?" சுகந்தி குறுக்கிட்டாள்.

ராகவன் நேரடியாகப் பதிலளிக்கவில்லை. சில வினாடி மௌனத்தின் பின் பேசினான். "நான் இஞ்ச இருந்து எண்பத்திரண்டில போனனான். இந்த இருபத்திரண்டு வருஷத்தில எங்கடை ஆக்கள் நல்லாத்தான் முன்னேறி இருக்கினம். பருவதம் மாமியிட்ட ரண்டு 'வேன்'. ஒரு 'கார்'. 'வேன்' ரண்டும் 'எயார்போர்ட் ஹயர்' ஓடுதாம். நாலஞ்சு 'செல்போன்'. என்னை விட உயரமான '.·.பிரிஜ்'....."

"நீங்களும் எங்கடை இனத்துக்குள்ள கட்டி இருந்தால் இந்த மாதிரி குட்டி சிங்கப்பூரில, இந்த மாதிரி சௌகரியங்களோட வாழ்ந்திருக்கலாம். நீங்கள் படிச்ச படிப்புக்கு...... பெரிய வேலை செய்து......... பெரிய இடத்தில கட்டி.........." சுகந்தியின் வார்த்தைகளில் குத்தல் மலிந்திருந்தது. கண்களால் அவளை நான் எச்சரிக்க, அவள் முகம் கூம்பிவிட்டது.

ராகவனின் கண்கள் கலங்கிவிட்டன. சுகந்தி பேச வாயெடுக்க, "கொஞ்சம் பொறும்" என்று நான் எச்சரிக்க, ஒரு சின்ன மௌனம் விழுந்தது.

ராகவன் எழுந்தான். ஜன்னலுக்குச் சென்றான். பார்வையை வெளியில் விசிறினான். கம்மிய குரலில் தன் மனதைத் திறந்து விட்டான்.

"அமெரிக்காவில காசு உழைச்சு தங்கச்சியின்ர கல்யாணத்திற்கு வாங்கிய கடனை அடைச்சிட்டு இஞ்ச வரத்தான் தெண்டிச்சனான். நிறைய கனவுகள் என்ர அடிமனதில ஊறிக் கிடந்தது. ஒருவாறு கடனை அடைச்சு விட்டு நல்ல இடத்தில கட்டி 'செட்டில்' பண்ண வேணும் எண்டு ஒரு கனவு. யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில விரிவுரையாளராக சேர்ந்து எங்கடை பெடியளுக்கு படிப்பிக்க வேணும் எண்டு ஒரு சின்ன ஆசை........... எங்கட ஊர் ஆக்களின்ர பொருளாதாரத்தை மேம்படுத்த உதவி செய்ய வேணும் எண்டு இன்னொரு ஆசை............ சுமக்க முடியாத நிறைய சின்னச்சின்ன ஆசையள்...... ஆனா....... 'பட்'........ எல்லா ஆசையளும் ஒரு நாளில அழிஞ்சு போச்சுது....... ஊம். அந்த கரி நாளைத் தான் சொல்றன். 'பிளக் ஜூலை'.......... எண்பத்தி மூண்டு கலவரம்...... அது முடிஞ்சு இஞ்ச கால் வைச்சு, என்ர கனவுகள நிறைவேற்றலாம் எண்டால் என்னை வர வேண்டாம் எண்டு ஐயா, அம்மா 'லெட்டருக்கு' மேல 'லெட்டர்' போட..... முதுகெலும்பு இல்லாதவனாகிவிட்டன்."

சுகந்தி சாப்பிடக் கூப்பிட்டாள்.

**சு**கந்தி பிட்டுடன் முருங்கைக்காய்க் குழம்பும், கத்தரிக்காய் பொரியலும் செய்திருந்தாள். ராகவன் முருங்கைக்காய் குழம்பை ருசித்துச் சாப்பிட்டான். மூக்கால் நீரெல்லாம் வடிந்தது. நெற்றியில், வழுக்கைத் தலையில் முத்துக்களாக வியர்வைத் துளிகள்.

"எனக்காக சம்பலின்ர, குழம்பின்ர உறைப்பைக் குறைச்சிடா தேங்கோ........ உறைப்பின்ர ருசியை நான் அனுபவிக்க வேணும்" என்று வந்த மறுநாளே அன்புக் கட்டளையிட்டிருந்தான்.





சுவிட்சர்லாந்து புதினங்கள் நிறையவே பரிமாறப்பட்டன. ராகவன் ஆலாவர்ணத்துடன் ஆச்சரியங்களை முன்வைத்தான்.

"சுவிட்சர்லாந்தா, இலங்கையா பிடிச்சிருக்குது?" அகத்மாத்தாக கேட்டேன்.

"இது தாய் நாடு. இதில இருக்கிற உணர்வு அங்க இல்லை. அம்மான்ர மடியில படுக்கிற சுகம் இஞ்ச....."

"போலினைப் பற்றி சொல்லும்."

வெகுளியாகச் சிரித்தான்.

"என்னத்தைச் சொல்லுறது..... பதினேழு வருஷ கல்யாண வாழ்க்கை. எங்கட மொழி, கலாச்சாரம், மரபு, பழக்கவழக்கம், பண்பாடு தெரியாத, எங்கட மதம் இல்லாத, எங்கட நாட்டைச் சேராத ஒருத்தியை கட்டினால் அந்தக் கலியாணம் ஒரு கொஞ்ச வருஷத்துக்குத் தான் எண்டு அம்மா சொல்லுறவ. அதைப் பொய்ப்பித்துவிட்டன்."

ராகவன் வெற்றிக் களிப்புடன் சொன்னான்.

"இப்பவும் அவவுல விருப்பமாக இருக்கிறீரா?" கேட்கக்கூடாத கேள்வி. அவன் தனிப்பட்ட வாழ்க்கை சம்பந்தப்பட்ட கேள்வி. அதைக் கேட்பதற்கு எனக்கு உரித்து இல்லை. கேட்டுவிட்டேன். ஆனாலும், அவன் கோபப்படவில்லை, எரிச்சல் கொள்ளவில்லை. எவ்வித தயக்கமும், தடங்களும் இன்றி தன் மனதைத் திறந்து காட்டினான்.

"இருக்கிறதால தானே பதினேழு வருஷமா அவளோட வாழ்றன்......... எங்களுக்கு ஒரு மகனும், ஒரு மகளும். இங்க இருக்கிற பணக்காரர்களின் வாழ்க்கையுடன் ஒப்பிடக்கிள்ளை நாங்கள் அங்கை நல்லாத் தான் இருக்கிறம். ஆனால், அங்கை இருக்கிற ஆக்களின்ரை வாழ்க்கையோட ஒப்பிடக்கிள்ளை நடுத்தர வர்க்கத்தையும் விட கீழான வாழ்க்கையை வாழ்றம்."

"சொர்க்கத்தில் பிச்சைக்காரர் நிலை என்று சொல்லலாமா?" என ஆங்கிலத்தில் கேட்டேன்.

அவன் அதற்கு நேரிடையாகப் பதில் அளிக்கவில்லை. கேள்வி ஒன்றைத் தொடுத்தான். "நான் உம்மை ஒரு கேள்வி கேட்கட்டுமா?"

"கேளும்."

"நீர் உம்மட கலியாண வாழ்க்கை இருபத்தியாறு எண்டு சொல்லுறீரோ..... அதில முழு நிறைவு இருக்குதா?

"சுகந்தியைக் கட்டக்கிளை இருந்ததை விட இப்ப சந்தோஷமாக இருக்கிறன். எங்கட வாழ்க்கை அனுபவம் கூடக் கூட சந்தோஷமும் கூடிக்கொண்டே போகுது. ஏனெண்டால் எனக்கு அவவுடைய கோபம், சந்தோஷம், ஆசை, லட்சியம், கசப்பு, எதிர்பார்ப்பு, கற்பனை, கனவு எண்டு எல்லாத்தையும் இப்ப விளங்கிக் கொள்ளக்கூடியதாக இருக்குது. அதைப் போலை அவவுக்கும் என்ர உணர்ச்சியள் எல்லாத்தையும் இப்ப விளங்கிக்கொள்ள முடியுது. இதுக்குக் காரணம் இருவரின்ர மொழியும், கலாசாரமும், பழக்கவழக்கமும்........ சந்தோஷமான வாழ்க்கையை வாழ்றதுக்கான எல்லா விஷயமும் பொதுவாகத் தான் இருக்குது. உமக்கு தெரிஞ்ச சுவிஸ் மொழியில பேசி, போலினுடைய மனதில என்ன இருக்குது எண்டு எப்படி அறிகிறீர்? அதே போல அவவால உம்மட தமிழ் பற்றை எப்படிப் விளங்கிக் கொள்ள முடியுது? உங்கட வாழ்க்கையில ஒரு போலித்தனம் இருக்கிறதாகவே எனக்குப்படுது." நான் சற்று உணர்ச்சி வந்தவனாகப் பேசிவிட்டேன் என்று நினைக்கிறேன்.

ராகவன் திகைத்துவிட்டான். இவ்வாறான ஆழமான வார்த்தைகளை அவன் எதிர்பார்த்திருக்கமாட்டான். அதன் கனத்தினால் அவன் இடிந்திருக்க வேண்டும். நெற்றியை கையால் அழுத்தியபடி வந்து அமர்ந்தான்.

"தலையிடிக்குதா?"

"இல்லை....."

இரண்டு, மூன்று தடவைகள் செருமினான். "போலித்தனம் எண்டு சொல்ல ஏலாது. ஆனால், ஓர் இயந்திரத்தனம் தெரியுது. எனக்குள்ள கிடக்கிற உணர்ச்சியளை அவளால் சரிவர விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்குது. எங்கட குடும்பத்தைச் சுற்றி கிடக்கிற விஷயங்களோட ஒட்டியுள்ள உணர்ச்சியளை அவளால் விளங்கிக் கொள்ள முடியுது. ஆனால், பொதுவா என்ர சமூகத்தில, மொழியில, தாய் நாட்டில, மதத்தில எனக்கு இருக்கிற உணர்ச்சியளை அவளால் விளங்கிக் கொள்ள முடிய இல்லை. என்ர சமூக மக்களுக்காக நான் உதவி செய்ய வேணும் எண்டு சொன்னால் அவளுக்கு அதை விளங்கிக் கொள்ள முடிய இல்லை. இதே மாதிரி நீர் இப்ப சொன்ன மாதிரி, அவவுடைய கோபம், சந்தோஷம், ஆசை, லட்சியம், கசப்பு, எதிர்பார்ப்பு, கற்பனை, கனவு எண்டு எல்லாத்தையும் என்னால விளங்கிக் கொள்ள முடியாமல் இருக்குது. அதே நிலையில தான் அவவும் இருக்கிறா...... அதால நான் ஒரு முடிவுக்கு வந்திருக்கிறன்."

உணர்ச்சி வந்தவனாகப் பேசினான். அவன் நெஞ்சு மேலும், கீழும் பலமாக உயர்ந்து தாழ்ந்தது.





'படபடப்பு' அடங்க, தொடர்ந்தும் பேசினான்.

"இன்னும் பத்து வருஷத்தில நான் இஞ்ச வந்திடுவன். அதுக்கு பிறகு இஞ்சயே தங்கி விடுவன். அதற்கு ஒரு முன்னோட்டமாகத்தான் இப்ப இஞ்ச வந்தனான்."

என்னுள் ஒரு சின்ன திகைப்பு.

"போலினையும், பிள்ளையளையும் விட்டுட்டு இஞ்ச வாறதா உத்தேசம்?"

"இன்னும் பத்து வருஷத்தில பிள்ளையள் படிச்சு முடிச்சு வேலை செய்யுங்கள். கலியாணமும் முடிச்சிடுங்கள். போலின் வந்தால் அவவை என்னோட முடியுமெண்டால் கூட்டிக் கொண்டு வருவன். அவ வரமாட்டா எண்டு எனக்கு நிச்சயமாகத் தெரியும். ஆனா, எனக்கு இதைத் தவிர வேறை வழி இல்லை."

"இஞ்ச என்ன செய்யுறதா நோக்கம்."

"நான் நாளைக்கு யாழ்ப்பாணம் போறன். 'ஜ.்.ப்னா யூனிவர்ஸிட்டிக்கு' போனாத் தான் ஒரு முடிவை எடுக்கலாம்."

மறு நாள் காலை வேளை ராகவன் யாழ்ப்பாணம் பயணமானான்.

"எங்கடை ஆக்கள் வெளிநாட்டுக்குப் போய், வெள்ளைக்காரியளை கலியாணம் முடிச்சு தங்கட முகவரியை தொலைச்சுப் போடுகினம். அந்த மாதிரி ஆக்கள் முகவரியைத் தேடி இஞ்ச வருகினம். அதுக்கு உங்கட '.்.பிரெண்ட்' விதிவிலக்கல்ல" ராகவன் பஸ்சில் ஏறிய கையோடு சுகந்தி கூறினாள்

வீதியில் மண்டிக்கிடந்த இருளைக் கிழித்தவாறே அந்த 'லக்சரி மினி பஸ்' வடக்கு நோக்கி வேகமாகப் பயணித்துக் கொண்டிருந்தது.

சுகந்தி கூறியது என் நெஞ்சில் நீண்ட நேரம் தடம் பதித்திருந்தது.

*(2004இல் கொம்மாந்துறை கம்பர்மலை வித்தியாலய பழைய மாணவர் சங்க ஐக்கிய இராச்சியக் கிளை 'தினக்குரல்' பத்திரிகையுடன் இணைந்து நடத்திய உலகத் தமிழ் சிறுகதைப் போட்டியில் முதலாவது பரிசைப் பெற்றது.)*

# வாழ்வதற்காக சாவதா?

*(இக் கதையில் வரும் உரையாடல்கள் யாவும் சிங்களத்தில் நிகழ்த்தப்பட்டன என்பதை மனதில் இருத்திக் கொள்ளுங்கள)*

**உ**ச்சியில் நின்ற சூரியன், வெட்கையை அகோரமாகக் கக்கிக் கொண்டிருக்க, வடியாத வெள்ளமாக வியர்வை பொங்கியது...... போதாக்குறைக்கு அப்பிரதேசத்தை ஊடறுத்த காற்று, நெருப்புக் குவியல்களாக மேனியை முட்டி மோதிக் கொண்டு நழுவியது.

இடையிடையே, காற்றின் பிரசன்னம் ஓர் அசுர வேகத்தில் வெளிப்பட்டு, புழுதியைத் தாராளமாக அள்ளி வீசும் போதெல்லாம், அப்பிரதேசத்தில் அக்குதொக்காகக் கிடந்த 'பங்கர்'களை உறைவிடமாகவும், மறைவிடமாகவும் மாற்றியிருந்த இராணுவ வீரர்கள் பலரும், ஒருமித்து தும்மிவிடுவார்கள். அவர்களது உறுதியான தேகக்கட்டை மறைத்திருக்கும் கோலவுடையை, புழுதி அரவணைத்துச் செல்வதெல்லாம் வழமையான நிகழ்வு தான். அவர்களும் அதையிட்டு அலட்டிக் கொள்வதில்லை.

காற்று வீசும்போதெல்லாம் அவர்கள் தலையைக் குனிந்து, இயற்கையின் அரைகுறைச் சீற்றத்தின் தாக்கத்தைத் தவிர்க்க முற்படுகின்ற போதும், அது பிரயோசனத்திற்கு அர்த்தம் கற்பிக்க மறுத்து விடுகின்றது. அவர்கள் புழுதிக் குளியலுக்குள் அகப்பட்டே தீருவார்கள்.

எல்லா 'பங்கர்'களுக்கும் முன்னணியாக 'பங்கர்' ஒன்று. அதற்குள் ஐந்து இராணுவ வீரர்கள். 'பங்கரைச்' சுற்றி நிழல்தரு மரங்கள் இல்லை. புல் பூண்டுகள் இல்லை. ஒரே வெட்டவெளி. 'பங்கரின்' மேற்புறமாக 'காட்டுப் பச்சை' நிறத்திலான 'கன்வஸ் ஷீட்'. அது, நிழலின் ஆறுதல்தனத்தை ஓரளவாவது வழங்க பிரயத்தனப்படுகிறது.

அந்த தென் மாகாணத்து இராணுவ வீரர்களில் ஒருவன் பிரியந்த. 'ஹெல்மட்'டைக் கழற்றிவிட்டு, முகத்தைக் கைக் குட்டையினால் அழுத்தித் தொடைக்கிறான். விடிகாலையில் இருந்து 'பங்கருக்குள்' 'சிறைவாசம்'. உள்ளே புகுந்த பின், இன்னும் சிறுநீர் கழிக்கவில்லை. வெளியேறி, அந்த உபாதையை அடக்க முற்பட்ட போதெல்லாம், 'ஷெல்'லின் ஓங்கார ஒலி, அவன் செயலைத் தடுத்து விடுகிறது.





காலையில் அவித்த கடலையையும், ஒரு 'பணிஸையும்' நீட்டிவிட்டுச் சென்றார்கள். யானைப் பசிக்கு சோளப் பொரி போல..... பத்து மணிக்குள் பசி மீண்டும் தலைகாட்டியது. இனி ஒரு மணிக்குத் தான் - அவன் உயிருடன் இருந்தால் சாப்பாட்டில் கை வைக்கலாம். அது வரை வயிற்றை அடக்க வேண்டும். மற்ற நால்வரின் கதியும் அதுதான். ஐவரும் நிறையவே நீர் குடித்தார்கள்.

"நாட்டைக் காக்க வந்திருக்கிறோம். சாப்பிடாமலேயே கடமையைச் செய்ய வேண்டும்." சுனில், புன்னகைக்காமல் கூறியிருந்தான்.

"இப்போதைய நிலையில், என்னால் இந்தத் துப்பாக்கியைக் கூட தூக்க முடியாமல் இருக்கிறது. பசி, பசி....." பண்டாரவுக்கு கண்களில் நீர் முட்டுகிறது.

"நாலைந்து நாட்களாக இந்த 'பங்கருக்குள்' தான் கிடக்கிறேன். இன்னும் ஒன்றிரண்டு நாட்கள் இருந்தால், என் நிலையை என்னாலேயே விபரிக்க முடியாது." நிமாலின் வார்த்தைகளில் வெறுப்பு நிறைய மலிந்திருக்கிறது.

"எல்லாமே அவர்கள் நீட்டும் எட்டாயிரம் சொச்சத்துக்குத் தான்." சுனில் முணுமுணுத்தான்.

"வேலையற்ற பட்டதாரிகள் 'வேலை தா, வேலை தா' என்று போராடுகிறார்கள். வேலை செய்பவர்கள் சம்பளம் போதாது என்று போராடுகிறார்கள். எந்தப் பட்டமும், அனுபவமும் இல்லாத எங்களுக்கு எட்டாயிரம் சொச்சம் கிடைப்பதனால் நாங்கள் அரைவயிறும், கால்வயிறுமாக இந்த 'பங்கருக்குள்' கிடந்தால் என்ன? மூளையை ஒரு சதவீதமாவது உபயோகித்து, எமது நாட்டின் அபிவிருத்திக்காக சைபர், சைபர், சைபர் ஒரு சதவீதத்திற்காவது எமது பங்களிப்பைச் செய்கிறோமா? வெறும் கசாப்புக் கடைக்காரன் போல செயற்படு கிறோம். ஏன் இந்த முணுமுணுப்பு? அவசியமற்ற விமர்சனம்? எதிரிகள் இரண்டு, மூன்று பேர்களை வீழ்த்திவிட்டு, பதவியுயர்வைப் பெற்று, சம்பள உயர்வுக்கு வழி சமையுங்கள்." வார்த்தைகளுக்கு நிறைய அழுத்தம் கொடுத்து, விரிவுரையாளன் போல் சொல்லி முடித்தான் அமரக்கோன்.

ஏனையோர் அதற்கு எதிர்கருத்துக்கள் கூறி, தமது மன எழுச்சியைச் சொற்பிரயோகங்களில் வெளிப்படுத்தாமல், அதை அடக்கிவிட்டார்கள்.

அமரக்கோன் பெருமிதத்துடன் புன்னகைத்தான்.

வெயிலை, சூரியனை, அப்பிரதேசத்தை, காற்றை, மண்ணை என்று சகல சடப்பொருள்களையும் மனதினுள் திட்டித் தீர்த்து, அதில் களிப்பு அடைந்தனர். ஆனால், குமுறும் மனதை இலகுவில் அடக்க முடியாமல் பிரியந்த தத்தளித்தான், தவித்தான். துப்பாக்கியை, கோலவுடையை, 'பூட்ஸ்'களை தூக்கி எறிந்துவிட்டு, வெறும் மேலுடன் குளத்தினுள் அமிழ்ந்து விட வேண்டும் என்ற ஓர் ஆதங்கம், உத்வேகம்..... மரச்சோலைக்குள் புகுந்து ஒவ்வொரு மரமாகச் சுற்றி ஓடித் திரிய வேண்டும் என்ற ஒரு 'பசுமையான' வெறி.... தொலைக் காட்சியில் காட்டப்படும் விளம்பரத்துக்கு வலிமை ஊட்டுவது போல், 'ப்ரிஜ்'ஜில் இருந்து குளிர்பான போத்தலை எடுத்து, அப்படியே வாய்க்குள் 'கொள, கொள' என ஊற்ற வேண்டும் என்ற ஒரு 'குளிர்மையான' ஆசை..... எல்லாமே அந்த வெட்கையின் உபாதையினால் மனதினுள் கிளர்ந்தெழுந்த கற்பனையான ஆசைகள், ஆவல்கள்.....

துப்பாக்கியை எறியும் வேளை, அவன் எதிரியின் துப்பாக்கிக்கு இரையாகிவிடுவான். கோலவுடையை, 'பூட்ஸ்'களை தூக்கி எறிந்தால், 'பங்கருக்குள்' இயற்கையாக கிடைக்கும் சித்திரவதையை விட, செயற்கையான சித்திரவதைக்கு ஆளாகிவிடுவான். மரம் அற்ற அப்பிரதேசத்தில் மரச் சோலையா? ம்...... ம்...... பச்சைத் தண்ணீருக்கே தட்டுப்பாடு நிலவும் சூழ்நிலையில், 'ப்ரிஜ்'ஜில் இருந்து நேரடியாக அவன் வாய்க்குள் குளிர்பானத்தைக் கொட்ட முடியுமா? எல்லாமே கனவுக்குள் அடக்கப்பட வேண்டிய ஆசைகள். அடித்தளமற்ற கற்பனைக்கோட்டைகள். இளகிய அவாக்கள். அர்த்தமேயற்ற விருப்பார்வங்கள்.....

பிரியந்த வலைக்குள் சிக்கிவிட்டான். அதில் இருந்து அவனால் மீள முடியாது. 'வேலை வேண்டுமா? இதோ' என்று அரசாங்கம் வைத்த பொறிக்குள் ஆயிரமாயிரம் இளைஞர்கள் அகப்பட்டுவிட்டனர். அதில் ஒரு பொறி - பிரியந்தவின் ஏழ்மையை, அறியாமையை, இயலாமையை, வேலையில்லாத் திண்டாட்டத்தை சாதகமாக்கி விடுகின்றது.

"இது எந்த இடம்?" பிரியந்த ஓர் ஏகாந்த உணர்வுடன் பண்டாரவிடம் கேட்டிருந்தான்.

"அம்பாகமம் என்ற ஊராம். அவர்கள் சொல்கிறார்கள். நாங்கள் அப்படியே நம்புவோம்." பண்டாரவின் குரலில் உறுதியில்லை.

"மாங்குளம் இன்னும் எவ்வளவு தூரத்தில் உள்ளது?"

"இன்னும் சில கிலோ மீட்டர்களாம்."





"மாங்குளத்தைக் கைப்பற்றினால், ஊருக்குப் போக லீவு தருவார்களா?"

"அது வரை நீ உயிருடன் இருப்பாயா? எமது எதிரியின் ஒவ்வொரு 'ஷெல்'லும், துப்பாக்கி ரவையும் எங்களில் எத்தனையோ பேரை பலி கொண்டுவிட்டன என்று உனக்குத் தெரியாதா? உயிருடன் இருந்தால் ஊருக்குப் போவதைப் பற்றி யோசிப்போம். இப்பொழுது உனது வீரத்தைக் காட்டத் தயாராக இரு."

பண்டார புத்திமதியா சொன்னான்? இல்லாவிடில் வேதாந்தம் பேசுகிறானா? இல்லாவிடில் நடைமுறை அனுபவத்தை சிலேடையாகப் பகிர்கின்றானா?

தாயின் முகம் ஒரு கணம் பிரியந்தவின் மனதினுள் நிழலாடியது. தங்கையின், தம்பியின் முகங்கள் தொடருகின்றன.

பத்து மாதங்களின் முன் - இராணுவத்தின் 'வெற்றி நிச்சயம்' இராணுவ நடவடிக்கை வவுனியாவில் இருந்து ஆரம்பித்த போது, ஊரைவிட்டு வெளியேறுகையில் தாயின் முகத்தில் ஒரு பெருமை. அதை அமுக்கியபடி ஓர் ஏக்கம். தம்பியின் முகத்தில் உணர்ச்சி இல்லை. அக்கம் பக்கத்தவர்களின் முகங்களில் வேடிக்கை விநோதச் செயற்பாட்டின் பிரதிபலிப்புகள்.

பன்சாலை பிரதம குரு உபதேசம் செய்து, ஆசீர்வதிக்கிறார். "இந்த நாட்டைக் காப்பாற்றுவதற்கு உன்னைப் போன்ற இளைஞர்களின் வீரத்தியாகம், ஒரு போதும் வீண் போகாது. அது வெற்றிக்கு வழி வகுக்கும் என்பது நிச்சயம்....." பிரதம குரு சொல்லிக் கொண்டே போகிறார்.

ஆவல் வழிந்தோட, பிரியந்த கேட்டுவிடுகிறான். "மாங்குளத்தை எப்பொழுது அடைவோம்?"

சுனில் மெல்லப் புன்னகைத்தான். "வெகு சீக்கிரம் அடைந்து விடுவோம் என்கிறார் அமைச்சர்."

"இடைநடுவில் நிறுத்திவிடமாட்டார்களா?"

"இல்லை. நிச்சயமாக நிறுத்தவேமாட்டார்கள். இந்த 'ஒபரேஷனுக்கு' 'வெற்றி நிச்சயம்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். என்றபடியால் எப்படியும் வெற்றி பெற வேண்டும். இல்லாவிடில், சிங்கள மக்களின் அபிமானத்தை வெல்ல முடியாது. ஒகஸ்ட் மாதத்தில் மாகாண சபைத் தேர்தல் நடைபெறவிருக்கிறது. எமது வெற்றியில் தான், ஆளும் கட்சியின் வாக்குகளின் எண்ணிக்கை தங்கியிருக்கிறது."

"அப்படி என்றால் எதிரி ஒவ்வொருவரினதும் உயிர் எத்தனையோ வாக்குகளுக்குச் சமன் என்று சொல்கிறாயா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன்."

"எங்களைப் பகடைக் காய்களாக வைத்துத் தான் அரசியல் பிழைப்பு நடத்துகிறார்களா?"

"ஆம்! அப்படித்தான். அது மட்டுமா? இராணுவத்தினர் பலியாகும் எண்ணிக்கையைக் கூட, 'கிரிக்கெட்' போட்டியில் எமது அணி எடுக்கும் ஓட்டங்களினால் மூடி மறைத்தும் விடுகிறார்கள்."

"அது எப்படி?" என்று பிரியந்த கேட்க, பண்டார நமுட்டுச் சிரிப்பொன்றை உதிரவிட்டான். பதில் சொல்லவே இல்லை.

மாலையாகிக் கொண்டு வருகையில் வெட்கை தணிந்து விடுகிறது. மேகத்திலும் கருமை படர்ந்தது. ஒரு குளிர்மை உணர்வை ஏற்படுத்துகின்றது.

மாலை மூன்று வரை இடைக்கிடை துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்படும் சத்தங்கள் கேட்டன. 'ஷெல்'களும் இந்தப் பக்கம் வந்து விழுந்து வெடித்தன. இரண்டு பேருக்கு படுகாயம். சக வீரர்கள் தூக்கிக் கொண்டு போய்விட்டார்கள். ஒருவன் மரண ஒலி எழுப்பியபடியே உயிருக்கு ஊசலாடினான்.

இந்தப் பக்கம் இருந்து பதிலுக்கு சரமாரியாக 'ஷெல்'களை ஏவினார்கள். எதிர்ப்புறத்தின் பாதக நிலைமை இவர்களுக்குத் தெரிய வில்லை. வானொலியை ஒட்டுக்கேட்டும் விபரம் வெளிப்படுத்தப் படவில்லை.

மதியச் சாப்பாட்டுக்கு 'பங்கருக்குள்' கிடந்த பிரியந்தவும், அமரக்கோனும் வெளியே வர, மற்றவர்கள் உள்ளே கிடந்தனர்.

"கவனமாகப் போய் சாப்பிட்டுவிட்டு வாருங்கள். நீங்கள் வெளியில் இருக்கும் ஒவ்வொரு வினாடியும் எதிரிகளின் துப்பாக்கிக்கு நேரே நிற்கிறீர்கள் என்பதை ஞாபகத்தில் வைத்திருங்கள்." சுனில் இருவருக்கும் பொதுப்படையாகக் கூறியிருந்தான்.

சாப்பாட்டுப் பொதியைப் பிரித்துப் பார்க்க பிரியந்தவுக்கு ஏற்பட்டிருந்த அகோரப் பசி அடங்கிவிட்டது. சோறு, பருப்புக் கறி, ஒரு துண்டு பொரித்த கருவாடு..... கடந்த ஒரு வாரமாக இது தான் மதிய ஆகாரம். சோற்றுக்குள் கையை வைத்து பிசைய, அது பாதி வெந்திருக்கிறது.





அமரக்கோன் ஒரு யோசனையும் இன்றி 'அவுக், அவுக்' என்று சாப்பிட்டான்.

சாப்பாட்டுப் பொதியை பிரியந்த மூட எத்தனிக்க, "ஏன் சாப்பிட இல்லையா?" என அமரக்கோன் கேட்க, "இதை என்னென்று சாப்பிடுவது? ஒரே சாப்பாடு. ஒரே ருசி..... பாதி அவிந்த சோறு....." என்று பிரியந்தவின் குரலில் ஈரம் மலிந்திருக்கிறது.

"போராட்டம் நடத்தும் பட்டதாரிகள் வெறும் பச்சைத் தண்ணீரைக் குடித்துவிட்டு 'வேலை தா,' என்று கோஷமிடுகிறார்கள். எங்களுக்கு பணத்தை..... உடைகள், உறைவிடம், சாப்பாடு என்று எல்லாவற்றையும் தருகிறார்கள் என்பதை ஞாபகத்தில் வைத்திரு."

பிரியந்த சாப்பாட்டில் கை வைத்துவிடுகிறான்.

மீண்டும் 'பங்கர்' வாசம். சுனில் 'சிகரெட்' ஒன்றைப் பாதியாகப் பிரித்து பிரியந்தவிடம் நீட்டினான். பிரியந்த அதைப் பற்ற வைத்துவிட்டு, "இரண்டு நாட்களுக்குப் பின் இப்பொழுது தான் 'சிகரெட்' புகைக்கிறேன்" என்று நன்றியுணர்வுடன் சுனிலை நோக்கினான்.

"புகையை மெதுவாக வெளிவிடு. நிறைய வெளிவிட்டால் 'ஷெல்' வந்து விழும்." சுனில் சிரிக்கிறான்.

அகோரம் தணிந்த பின் உடலினுள் ஏற்பட்டிருந்த எரிவு ஆறிவிட்டது. சற்று புத்துணர்ச்சி ஏற்பட்டது. மனதுக்கும், உடலுக்கும் ஓய்வு வழங்கிய இராணுவ வீரர்கள் தமது பாடசாலை நாட்களை சிரிப்புடன் நினைவு கூர்ந்தார்கள். பிரியந்தவின் பாடசாலை வாழ்வில் நிறைய மறக்க முடியாத நிகழ்ச்சிகள் நடந்திருக்கின்றன. அவற்றை அவன் வெகுளி போல், நகைச்சுவை உணர்வுடன் கூறுகிறான். சுனில் அளவுக்கு மீறிச் சிரிக்கிறான். அவன் கண்களில் இருந்து நீரும் வழிந்தது.

இருளின் வரவேற்பின் போது 'திடுதிப்'பென 'ஷெல்' ஒன்று இவர்கள் முன்பாக வந்து விழுந்து வெடித்தது. அதைத் தொடர்ந்து துப்பாக்கி வேட்டுக்கள் சீறி வந்தன. 'ஷெல்'களும் மாறி, மாறி வந்து விழுந்தன.

'பங்கருக்குள்' கிடந்தவர்கள் யாவரும் உஷார் அடைந்தனர். "சுடு, சுடு" என்று, சுனில் கட்டளை பிறப்பித்தான்.

பிரியந்த தலையை மெதுவாக உயர்த்தி, துப்பாக்கியினால் குறி வைத்தான்.

"சுடு.... சுடு...."

பிரியந்தவின் துப்பாக்கியில் இருந்து ரவைகள் பறந்தன.

அந்த 'பங்கரைச்' சுற்றி இருந்த 'பங்கருக்குள்' கிடந்தவர்களும் சுடத் தொடங்கினார்கள்.

சற்றுப் பின்புறமாக, நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 'டாங்கி'யில் இருந்து குண்டுகள் பறந்தன.

எதிர்ப்புறம் இருந்து இடைவெளியின்றி 'ஷெல்'கள் வந்து விழுந்து, இடியோசையை எழுப்பின. 'ஐயோ அம்மா' என்று ஒரே கூக்குரல்.....

இந்தப் பக்கம் இருந்து 'ஷெல்'களும் வகை, தொகையின்றி ஏவப்பட்டன.

இடியோசை தொடர்ந்தும் அப் பிரதேசத்தைக் 'கிடு,கிடுக்க' வைத்தது. இராணுவ வீரர்கள் அங்கும், இங்கும் ஓடினார்கள். இடையிடையே துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன.

நிலத்தில் நிறைய பள்ளங்கள். மண் துணிக்கைகள் பறந்து, புழுதியைக் காற்றுடன் கலந்தன. எங்கும் - புழுதியுடன் கலந்து புகை மண்டலம் பரவியது.

'டாங்கி' ஒன்று தீப்பிடித்துக் கொண்டது. அதில் இருந்த இராணுவ வீரர்கள் வெளியில் பாய்ந்தார்கள். அவர்கள் மீது வேட்டுக்கள் தீர்க்கப்படுகின்றன. மூவர் கீழே சரிந்தார்கள்.

"அவர்கள் எங்களை நெருங்கி வருகிறார்கள்." 'யாரோ' கத்துகிறான்.

"சுடு..... சுடு....." கெட்ட வார்த்தைகளைக் கலந்து ஒருவன் பணிக்கின்றான்.

பிரியந்த வீரவேஷத்துடன் இயந்திரத் துப்பாக்கியை இயக்குகிறான்.

**வெ**யில் கலந்த ஒரு மந்தகாரச் சூழ்நிலை. இரு நாட்களாக நிலத்தில் படிந்திருந்த ஈரத்தன்மை, வெயிலின் பிரசவத்துடன் இறந்து விட்டது.

காலி சர்வதேச 'கிரிக்கெட்' மைதானத்தில் இலங்கை 'கிரிக்கெட்' அணியின் வீரர்கள் அபாரமாக வெற்றி நிச்சயம் என்ற நிறைந்த நம்பிக்கையுடன் விளையாடிக் கொண்டிருந்தார்கள். அவர்களை எதிர்த்து விளையாடிய நியுஸிலாந்து அணி 'இன்னிங்ஸினால்' தோற்கும் நிலையில் தடம் புரண்டது.





மைதானத்தின் சுற்று வட்டாரத்தில் ஆயிரக்கணக்கான பார்வையாளர்கள் பங்காளிகள் என்ற நிலையில் குழுமியிருந்து, நியுஸிலாந்து நாட்டுக்கு எதிராக யுத்தம் புரியப்படுகின்றது என்ற மனோநிலையில் தமது ஆதரவு அணிக்கு உற்சாகமளிக்கின்றார்கள். வெளியே போட்டியின் இறுதிக் கட்டங்களையாவது கண்டு களித்திட வேண்டும் என்ற ஆதங்கத்தில் சீட்டு வாங்குவதற்கு நூற்றுக் கணக்கானோர் வரிசையில் நிற்கின்றார்கள். அவர்கள் வெயிலைப் பொருட்படுத்தவில்லை. வீட்டில் சாய்வாக இருந்தபடியே, தொலைக் காட்சியில் பார்த்து ரசிக்கக்கூடிய அந்த 'அற்புதக் கட்டங்களை' நேரில் - வெயிலின் அகோரத்தை மலிவாக்கி, கண்டு மகிழ 'கிரிக்கெட்' ரசிகர்கள் என்னமாய் துடி துடித்துக் கொண்டிருந்தார்கள்!

காலையில் இருந்தே ரசிகர்களின் எண்ணத்திற்கு அடி பணியுமாப் போன்று 'விக்கெட்'கள் 'மள, மள' எனச் சரிகின்றன.

"'கமோன்' முரளி....."

"ஆளை விழுத்து....."

"'கமோன் ஸ்ரீ லங்கா'....."

பலவிதமான கோஷங்கள். எல்லாமே 'கிரிக்கெட்' வீரர்களை உற்சாகமூட்டும் வார்த்தை ஜாலங்கள்.

சங்கீத இசைக் குழுவொன்று சிங்கள 'பைலா' ஒன்றைப் பார்வையாளர்களின் தாளத்தோட, தமது தாளங்கள் மூலம் இசைக்கின்றது. நாலைந்து 'குடிப் பிரியர்கள்' முன்புறமாக உடம்பை நீட்டி, நிமிர்த்தி, வளைத்து, சரித்து, மழுக்கி மற்றவர்களைப் பரவசப்படுத்த முயல்கின்றனர்.

ஒரு 'விக்கெட்' விழுகிறது.

இசையின் ஒலி உச்சத்தை அடைகிறது. கூத்துனர்களின் அபிநயங்கள் உச்சமுறுகின்றன.

வெயிலின் அகோரம் மேலோங்குகின்றது. பச்சை வெயிலின் கீழே, நேரடியாக நின்றவர்களின் உடலில் இருந்து வியர்வை வழிகின்றது. பலரும் கைக்குட்டைகளினால் தமது முகங்களை, உடம்பை தொடைத்து, தம்மை ஆசுவாசப்படுத்தி 'அருட் காட்சி' களைக் கண்டு களிக்கிறார்கள்.

பண்டாரதிலக்க பந்தை லாவகமாக 'சுழலாக்கி', அதை எறிகிறார். பந்து சுழன்று போகிறது. நியுஸிலாந்து வீரர் அதை ஓங்கி அடிக்கிறார். பந்து மேலே செல்கிறது.

"அதைப் பிடி..... அதைப் பிடி" என்று களுவிதாரண கத்துகிறார்.

மஹேல ஜயவர்தன ஓடிச் சென்ற பந்தைப் பிடிக்க முயல்கிறார். அவர் அதை விட்டு விடுவாரா? பார்வையாளர்கள் வாயைப் பிளந்து கொண்டிருக்க..... மஹேல பந்தைப் பிடித்து விடுகிறார்.

கரகோஷம் சூழலை மாசுபடுத்த முற்படுகிறது. இசை மீண்டும் சுறுசுறுப்படைகிறது. கூத்துனர்களின் செய்கையிலும் அதே நெளிப்புக்கள், சுழிப்புக்கள், வளைப்புக்கள்..... ஹே!

இலங்கை வெற்றி வாகை சூடுகிறது. ஆட்டம் தொடங்கி நாற்பத்தைந்து நிமிடங்களில் ஆட்டம் முற்றுப்புள்ளி அடைந்துவிட்டது. இது சரித்திரத்தின் ஏட்டுக்கு உரித்தானதோ? வெளியே நின்ற பலருக்கு ஏமாற்றம். தொலைக்காட்சியில் இதைப் பார்த்திருக்கலாம் என்ற அங்கலாய்ப்பில் சிலர்.....

மஹேல ஜயவர்தன சிறந்த ஆட்டக்காரராகத் தெரிவு செய்யப்பட்டு, பரிசில் வழங்கப்படுகிறது.

ரசிகர்களின் உள்ளங்களில் நிறைந்த மகிழ்ச்சி!

'நியுஸிலாந்தை எமது 'கிரிக்கெட்' வீரர்கள் அடிபணிய வைத்து விட்டார்கள். புலிகள் இயக்கத்தை இராணுவ வீரர்கள் அடிபணிய வைப்பார்கள்' என்ற எண்ணமே அவர்களில் ஓங்கி இருந்தது.

ஈசல் வண்டுகளின் ரீங்காரம் மட்டுமே அந்த இரவின் அமைதிக்குப் பங்கம் விளைவித்தது. துப்பாக்கிகளின் வேட்டுக்கள், பீரங்கிகளின் 'ஷெல்'லடிகள் ஓய்ந்துவிட்டன.

இழப்புக்கள் பற்றிய கணக்கெடுப்பு நடந்து கொண்டிருந்தது.

இராணுவ முகாமின் மூலையில் அமைந்திருந்த 'தற்காலிக ஆஸ்பத்திரியில்' 'ஸ்ரெச்சர்' மீது பிரியந்த கிடந்தான். அவன் நெற்றியைச் சுற்றி 'பண்டேஜ்' சுற்றப்பட்டிருந்தது.

அவனுடன் 'பங்கருக்குள்' கிடந்த சகபாடிகள் பண்டார, சுனில், நிமால், அமரக்கோன் என்று எல்லோருமே கருகிவிட்டனர். 'ஷெல்' ஒன்று 'பங்கருக்குள்' நேரே வந்து விழுந்து வெடித்துவிட்டது. அத் தருணத்தில் இயற்கையின் உபாதையினால் துடித்த பிரியந்த, அதில் இருந்து சுதந்திரமடைய 'பங்கரை' விட்டு வெளியேற முற்படுகையில் "போகாதே, போகாதே" என சகபாடிகள் தடுக்கின்றனர்.

"ஆத்திரத்தை அடக்கலாம். மூத்திரத்தை அடக்க முடியாது" என்று சிரித்தபடியே வெளியேறிய பிரியந்த தவழ்ந்து, தவழ்ந்து





சென்று குந்திய நிலையில் தனது செயற்பாட்டை ஆரம்பித்த போதே 'ஷெல்' நேரே 'பங்கருக்குள்' வந்து விழுந்தது. உள்ளே இருந்தவர்களுக்கு மரண ஒலியைக் கூட வெளியிட முடியவில்லை.

'ஷெல்' வெடித்து வெளிப்படுத்திய மண் குவியலில் கிடந்த கல்லொன்று சிதறி வந்து பிரியந்தவின் நெற்றியைத் தாக்கியது. இரத்தம் வழிந்தது. பிரியந்த துள்ளிப் பாய்ந்தான். மீண்டும் ஒரு 'ஷெல்' சற்றுத் தூரத்தில் விழுந்து, வெடித்தது.

பிரியந்த நன்றாகப் பயந்துவிட்டான். அவன் உணர்வுகள் யாவும் மழுங்கிவிட்டன. சிந்தனா சக்தி அகன்றது.

சுய நினைவுக்குத் திரும்ப சிறிது நேரம் எடுத்தது. கண்களால் இருட்டைத் துழாவியபடி கிடந்தான். மனதைத் தழுவியபடி இருந்த பயம் அகன்றது.

இனியும் அங்கு நின்றால் தனது உயிருக்கு உத்தரவாதம் இல்லை என்று உள்ளுணர்வு உறுத்த, சுட்டு, சுட்டுக் கொண்டே பின்வாங்கினான்.

இருளின் போர்வை அவன் செயலுக்குத் தடங்கலாக விளங்குகின்றது.

ஒரே கூச்சல், அபயக் குரல்கள், ஓலங்கள், ஒப்பாரிகள்.....

இராணுவத்தினர் இருந்த திக்கில் இருந்து வேட்டுக்களின் ஒலி தணிந்துவிட்டது. எதிர்ப்பக்கம் இருந்தே ரவைகள், 'ஷெல்'கள் சீறி வந்தன.

பிரியந்த தட்டுத் தடுமாறி நடக்கிறான். 00990

'ஷெல்'லை ஏவும் பீரங்கி அனாதரவாகக் கிடக்கிறது. அதை இயக்கும் இருவரும் கீழே பிணமாகக் கிடக்கிறார்கள்.

பிரியந்த நின்றுவிடுகிறான். பீரங்கியைப் பார்க்கிறான். அவனுள் ஆவேசம் கிளர்ந்தெழுந்தது. அவனுக்கு அதை இயக்கிப் பழக்கமிருக்கிறது. தனது உடல் நிலையை மறந்தான். 'ஷெல்'லைத் தூக்கி பீரங்கியினுள் பொருத்தினான். அவன் திருப்தியடைந்தான். அதை இயக்க, வீச்சுடன் 'ஷெல்' பாய்ந்தது. அது தூரத்தில் போய் விழுந்து, வெடித்தது.

வேறொரு திசைக்கு பீரங்கியைத் திருப்பி மீண்டும் இயக்கினான். 'ஷெல்' தூரத்தில் விழுந்து வெடித்தது.

அவன் மனதில் உறுதி பாய்ந்தது. வீரத்தன்மை உச்ச நிலையில் அவனுள் ஆவேசத்தை உட்தள்ளியது.

தன்னந்தனியனாக அவன் பீரங்கியை இயக்கினான்.

எதிர்ப்புறத்தில் இருந்து 'ஷெல்'லடி நின்றுவிடுகிறது. துப்பாக்கி களும் அமைதி அடைந்துவிடுகின்றன.

பிரியந்த தனது செயலை நிறுத்தவில்லை. ஒவ்வொரு திசையாக பீரங்கியைத் திருப்பி, அதன் தயாரிப்பின் உன்மத்தங்களை நிரூபித்து கொண்டிருந்தான்.

நெற்றியில் இருந்து குருதி இன்னும் வழிந்தது.

அவன் உடல்பலம் படிப்படியாகத் தணிந்தது. பார்வையில் தெளிவின்மை தங்கியது. உணர்ச்சி நரம்புகளின் உயிர்ப்புக்கள் ஊனமுற்றன.

தனது உடலை அவனால் நிமிர்த்த முடியவில்லை. கண்கள் செருகின.

மீண்டும் கண்விழித்த போது 'ஹரிக்கேன்' விளக்கு ஒன்று ஒளியை உமிழ்வது தெரிகிறது. சுற்றும், முற்றும் பார்க்கிறான். இராணுவத்தினர் நிற்பது தெரிகிறது.

தனது படையின் அரவணைப்பில் கிடப்பது அவனுக்குப் புரிகிறது. கொஞ்சம், கொஞ்சமாக நினைவை விட்டு அகன்ற காட்சிப் பரப்புக்கள் மனதினில் சங்கமமாகின்றன. சகபாடிகள் யாவருமே நாட்டுக்காக 'அந்நிய' மண்ணில் உயிரை அர்ப்பணித்துவிட்டார்கள் என்று அவனுக்கு தெளிய..... அவன் தொண்டையில் சோகம் படிமமாகிறது. அவர்களுக்காக மனம் அழுது வடிந்தது.

அவனுடன் எல்லாமாக இருபது பேரளவில் அங்கு குற்றுயிரான நிலையில் கிடக்கிறார்கள். எல்லோருமே வலியினால் ஒவ்வொரு வித ஓசையை எழுப்புகிறார்கள்.

'கப்டன்' பெரேரா அங்கு வந்து அவன் தோளில் தட்டி, "உனது வீரத்தை மெச்சுகிறேன். நீ தன்னந்தனியனாகப் போராடியதை நான் கண்டேன்" என்று பாராட்டி விட்டுச் செல்கிறான்.

அந்த வார்த்தைகள் தனது உடலில் ஏற்பட்டிருந்த காயங் களுக்கு ஒத்தடம் போல விளங்குவதைப் பிரியந்த உணர்கின்றான்.

'யாரோ' ஓர் இராணுவ வீரன் அவனுக்கு உணவை ஊட்டினான்.





இரவு ஒன்பது மணியாகிறது.

அங்கு கிடந்த வானொலியில் செய்தி ஒலிபரப்பாகிறது.

அம்பாகமத்தில் நடந்த சமர் பற்றி ஒரு வரி கூட சொல்லப்பட வில்லை.

இலங்கை 'கிரிக்கெட்' அணி நியுஸிலாந்து 'கிரிக்கெட்' அணியை 'இன்னிங்ஸினால்' தோற்கடித்துவிட்டதாக செய்தி அறிவிப்பாளர் வெகு உற்சாகத்துடன் கூறுகிறார். சிறந்த ஆட்டக்காரராக மஹேல ஜயவர்தன தெரிவு செய்யப்பட்டுள்ளார் என்று அறிவிப்பாளர் சொல்லிக் கொண்டே போக.....

அங்கிருந்த இராணுவ வீரர்கள் யாவரும் கைதட்டி, மகிழ்ச்சி அடைகிறார்கள்.

"எமது 'கிரிக்கெட்' வீரர்கள் உண்மையிலேயே வீரர்கள் தான்." 'யாரோ' ஒருவன் கூறுவது கேட்கிறது.

"எங்கள் வீரதீரச் செயல்களைப் பற்றி ஒன்றுமே சொல்ல மாட்டார்களா?" அப்பாவி போல பிரியந்த தனக்குப் பக்கத்தில் கிடந்தவனிடம் கேட்கிறான்.

"இப்பொழுது செய்தித் தணிக்கை அமுலில் உள்ளது. அதனால் யுத்தம் பற்றிய செய்திகளைச் சொல்லமாட்டார்கள்."

பிரியந்தவின் முகத்தில் வேதனை உணர்வுகள் கோடுகளிட, மெல்லப் புன்னகைத்தான்.

"மற்றவர்கள் ஏதோ ஒரு விதத்தில் வாழ்வதற்காக நாம் சாவின் விளிம்பில் நிறுத்தப்பட்டிருக்கின்றோம். ஆயுத பலம், அறிவு, வீரம், விவேகம் ஆகிய தூண்களால் நாம் முட்டுக் கொடுக்கும் நிலைக்குள்ளாக்கப்பட்டிருக்கிறோம். சந்தர்ப்ப சூழ்நிலைகளினால் தூண்கள் நம்மை கைவிடும் போது, எமது கதையும் முற்றுப்புள்ளி அடைகின்றது" என்று பண்டார கூறிய வார்த்தைகள் பிரியந்தவின் காதுகளில் நீண்ட நேரமாக ஒலித்துக் கொண்டிருந்தன.

*(மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பாரிஸ் கிளை 1999இல் நடாத்திய பாவலர் துரையப்பாபிள்ளை அவர்களது போட்டியில் முதல் பரிசை வெற்றியீட்டியது.)*

# சேனாதீரவும், அந்தப் பெண்களும்

சேனாதீரவுக்கு என்னைப் பகிடி பண்ணுவதில், வசை பாடுவதில், எனக்கு எதிராக மேலதிகாரிகளிடம் கோள்மூட்டுவதில் அலாதியான பிரியம். நான் அசடு வழிவதை, என் முகம் சிவப்பதை, கோணலாவதை, சுருங்குவதை கண்டு அவன் அபூர்வமான மகிழ்ச்சியை அடைந்திருக்கிறான். இல்லாவிடில் அவன் இவ்வாறெல்லாம் நடக்கமாட்டான்.

அவன் செயல்களையிட்டு நான் எரிச்சலுற்றாலும், அதைப் பெரிதுபடுத்துவதில்லை. பகிடி பண்ணினால், நானும் பகிடி பண்ணுவேன். வசைபாடினால் அதையே நானும் திருப்பிச்செய்வேன். சினமூட்டினால் எரிந்து விழுவேன். கோள்மூட்டினால் மனதில் அவனைத் திட்டிவிட்டு, பேசாமல் இருந்து விடுவேன். சில வேளைகளில கடும் வார்த்தைகளால் அவனை அபிஷேகம் செய்வேன்.

எனது மறுதலை உணர்வுகளையிட்டு அவன் கவலையேபட வில்லை.

என்னை விதம் விதமாக விளிப்பான். 'மச்சான்' என்று உரிமையுடன் அழைப்பான். 'அடோ' என்று அதட்டுவான். 'நல்ல தம்பி' என அன்பொழுக அழைப்பான். சில வேளைகளில் அவன் கோபத்தில் இருந்தாலும், சந்தோஷத்தில் மிதந்தாலும் 'கொட்டியா' என்று கூறிவிடுவான். அந்நேரத்தில் அவன் கோபத்தின், அல்லது சந்தோஷத்தின் எக்கட்டத்தில் கிடந்தாலும், எனக்கு கோபம் வந்து விடும். உடனே அவனைக் கண்டபடி ஏசிவிடுவேன். இரண்டொரு தமிழ் வசைமொழிகளையும் உதிர்த்துவிடுவேன். அதையிட்டு அவன் கவலைப்படமாட்டான். "நீ 'கொட்டியா' தான்" என்று சொல்லி, பற்களை காட்டுவான். நானும் சிரித்து விடுவேன்.

எனக்கும், சேனாதீரவிற்கும் இடையில் வருணிக்க முடியாத பிணைப்பொன்று இறுகியிருந்தது. நட்புறவின் அர்த்தம் மறைந்திருந்தது.

சேனாதீர ஓரளவு தமிழ் பேசுவான். ஆனால், என்னுடன் சிங்களத்திலேயே பேசினான். சில வேளைகளில் மற்றவர்கள் புரியக்கூடாது என்பதற்காக தமிழில் பேசுவான். அலுவலக விஷயமாக சிங்களம் தெரியாத பிறத்தியார் வந்தால், அவன் தமிழில் பேசுவான்.





"எனது அப்பா யாழ்ப்பாணத்தில் வேலை செய்தவர். நானும் அங்கு இருந்தேன். அதனால் தான் எனக்கும் தமிழ் தெரியும்" என்று அவன் அடிக்கடி கூறினாலும், அது முழுப்பொய். இதை அவனது முகமே தெளிவாகச் சொல்லும்.

அவனுக்கு யாழ்ப்பாணத்தின் நிறம் தெரியாது. அங்கு போக மூக்குமுட்ட விருப்பம் அவனிடம் மறைந்துள்ளது. ஆனால், பயம் அவன் ஆசையைப் புதைகுழி தோண்டி புதைத்துவிடும்.

பதவியில் நிரந்தரமாவதற்கே அவன் தமிழ் கற்றான் என்பதே உண்மை.

அலுவலகத்தில் எனது பிரிவில் பணிபுரிந்த பதினெட்டு பெரும்பான்மையினர்களில் சேனாதீர சற்று வித்தியாசமாக விளங்கினான். மற்றவர்கள் என் மீது துவேஷப் பார்வையைத் தணலாக விசிறிய போதெல்லாம், அவர்களை அவன் ஆசுவாசப்படுத்தி, என்னுள் அமிழ்ந்திருக்கும் ஆத்திரத்தை, வன்மத்தை, கிலேசத்தை போக்குவதற்கு முயன்றிருக்கிறான். அதற்காக அவன் துவேஷப் பார்வையை விசிறமாட்டான் என்று அர்த்தமல்ல. சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் தனது உளக்கிடக்கையை எவ்வித ஒளிவு மறைவின்றி வார்த்தைகளாக வெளியிடுவான்.

"தமிழர்களுக்கு நாம் நிறைய உரிமைகளைக் கொடுத்து விட்டோம். அதனால் தான் புத்தி பேதலித்துப் போய் அவர்கள் ஆடுகிறார்கள்" என்பான்.

"உங்களுக்கு இனியும் என்ன உரிமை வேண்டும்?" என்று ஆக்ரோஷத்துடன் வினவுவான்.

"உங்களை எல்லாம் ஒன்றாகச் சேர்த்து இந்து சமுத்திரத்திற்கு பலி கொடுக்க வேண்டும்" என படு 'சீரியஸாக' சொல்வான்.

இவற்றுக்கு வார்த்தைகளில் பதிலடி கொடுத்து, அவனுடன் வாக்குவாதப்படுவேன். அடிதடி நிலையில் கூட எமது வாக்குவாதம் நிறைவெய்திய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளன. ஆனால், எல்லாமே எமது பிரிவுக்குள் சமாதி அடைந்துவிடும். மேலதிகாரியின் கவனத்திற்கு போய்விடாது.

சேனாதீர பிரமச்சாரி. நாற்பது வயதைத் தாண்டிவிட்டான். தலையில், உடம்பில் நரைமயிர்கள் தலை நீட்டியிருந்தன.

ஒரு நாள் கேட்டேன்: "உனக்கு கலியாணம் செய்ய விருப்பம் இல்லையா?"

"இருக்கிறது. ஒரு தமிழ் பொம்பளையைச் செய்யத்தான் விருப்பம்" என்றான்.

"தமிழ் பொம்பளை?"

"ஆம். நான் சந்தோஷமாக வாழ வேண்டுமென்றால் ஒரு தமிழ் பொம்பளையைத் தான் கலியாணம் செய்ய வேண்டும்."

"ஏன் தமிழ் பொம்பளை என்றால் அடக்கி ஆளலாம் என்று நினைக்கிறாயா?"

அவன் முகத்தில் சினம் கிளை பிரிகின்றது. "போடா 'கொட்டியா'" என்று கத்தினான்.

இன்னொரு நாள் கேட்டேன்: "எனது மனைவியின் நண்பி ஒருத்திக்கு நாற்பது வயதாகிறது. உங்கள் இனம் தான். அவளுக்கு கலியாணம் பேசி, அவள் குடும்பத்தினருக்கு அலுத்துவிட்டதாம். நீ சம்மதித்தால் அவளை உனக்கு கலியாணம் கட்டி வைக்கலாம். அவள் இங்கு கொழும்பில் தான் வேலை செய்கிறாள்."

சேனாதீர யோசனையுடன் புன்னகைத்தான். "எப்படி பொம்பளை? அழகா? பெயர் என்ன?"

"சுமாரான அழகியாம். ஓர் அரசாங்க திணைக்களத்தில் பணிபுரிகிறாள். ஆங்கிலமும் பேசுவாளாம். அவளைப் பார்த்தால் முப்பது வயது என்று தான் மதிக்க முடியுமாம். பெயர் தமாரா."

"கலியாணத்தைப் பற்றி இப்பொழுது தான் ஆழமாக யோசிக்கிறேன். அம்மாவும் கலியாணம் கட்டும்படி வற்புறத்துகிறாள். தமாராவைப் பற்றி அறியாமல் என்னென்று முடிவு எடுக்கிறது?"

"எனது மனைவி அவளைச் சிபார்சு செய்கிறாள். தங்கமான குணம் படைத்தவளாம்."

"நான் பித்தளை" என்றவன், ஒரு முடிவையும் சொல்லாமல் எதையோ முணுமுணுத்தபடி சென்று விட்டான்.

ஒரு வாரம் கழிய என்னிடம் சேனாதீர வந்தான்.

"தமாராவைப் பற்றி அம்மாவுடன் கலந்தாலோசித்தேன். உனது மனைவி சிபார்சு செய்கிறபடியால் அவளை நேரில் பார்த்து விட்டு எனது முடிவைச் சொல்லச் சொன்னாள். அவளை பார்க்கப் போவமா?" எனக் கேட்டான்.

"அதற்கென்ன" என்கிறேன்.





"எதற்கும் உனது மனைவியுடன் அவள் பற்றி விசாரிக்க வேண்டும். இந்த சனிக்கிழமை உனது வீட்டுக்கு வரட்டுமா?" என்று கேட்டான்.

மீண்டும் "அதற்கென்ன" என்றேன்.

ராசமலரிடம் இது பற்றிச் சொன்னேன்.

"'மிஸ்டர்' சேனாதீரவை இந்த சனிக்கிழமை 'லஞ்சுக்கு' கூப்பிடுங்கோவன். உங்களுக்கு இருக்கிற நல்ல 'ஃபிரெண்ட்' அவர். சாப்பிட்டுக் கொண்டே கதைக்கலாம்" என்றாள் ராசமலர்.

"என்ன சாப்பாடு குடுக்கப் போறீர். முருங்கைக்காய் கறியோ? இல்லாட்டி கோழிக் கறியோ?"

"கோழிக்கறி தான். நல்லா தூள் போட்டு, ருசியாக சமைச்சுக் குடுக்கிறன்."

ராசமலரின் விருப்பத்தைச் சேனாதீரவிடம் பரிமாறினேன்.

"சா! நீ உண்மையிலேயே நல்ல ஒரு 'கொட்டியா' தான்." சேனாதீர மகிழ்ச்சியுடன் கூறினான்.

**வ**ழமை போல் சனிக்கிழமை பிறந்தது.

பதினொரு மணிக்கு சேனாதீர வந்தான்.

எனது மகனும், மகளும் 'அனெக்ஸின்' விறாந்தையில் விளையாடிக் கொண்டிருந்தனர். பத்து வயதுக்குள் இருவரும் அடக்கம்.

சேனாதீர ஏதோ ஒரு சின்னப் 'பார்சலை' மகளிடம் நீட்டி விட்டு, "பேர் என்ன?" என்று தமிழில் கேட்டான்.

"நிலாந்தி" என்கிறாள் மகள்.

"சிங்களப் பேர் மாதிரி இருக்குதே!"

"இஞ்சதான் பிறந்தது." ராசமலர் நாணிக் கோணினாள்.

"மகனுக்குப் பெயர் என்ன?"

"நாராயணன்."

"ஓ! தமிழ் பெயர். 'ஜஃப்னா'விலையா பிறந்தது?"

"ஓமோம்." ராசமலர் வெள்ளையாகச் சிரிக்கிறாள்.

"நீங்கள் எல்லாரும் இடத்திற்கு ஏத்த மாதிரி பேரும் வைச்சிடுவீங்க" என்ற சேனாதீர அமர்ந்தான்.

சுற்றும், முற்றும் பார்த்தான். "எல்லாத்திற்கும் ஒரு அறை தான் இருக்குது போல..... 'திரி இன் வன்' மாதிரி....." சேனாதீர சிரிக்கிறான்.

"ஓமோம். சின்ன 'அனெக்ஸ்'."

"'ரெண்ட்' என்ன மாதிரி?"

"என்ர சம்பளத்தில முக்கால்வாசி வாடகைக்கு போகுது."

"அப்படி எண்டால் 'கொட்டி ஃபண்ட்'டுக்கு எங்க இருந்து சல்லி வாறது?"

நான் சிரித்து அவன் கேள்விக்கு விடையாக மௌனத்தை அளித்தேன். ராசமலரின் முகத்தில் தவிப்பு தென்படுகிறது.

"ஏன்ட சம்பளத்தில முக்கால்வாசி கடைச் சாப்பாட்டுக்கு போகுது." சேனாதீர இயல்பாகச் சொல்லிவிட்டு, நமுட்டுச் சிரிப்பொன்றை இளக்கினான்.

நாம் ஒன்றும் கூறவில்லை.

"நீங்க எல்லாரும் இங்க நிம்மதியாக இருக்கிறீங்க. நாங்க 'ஜஃப்னாவுக்கு' போய் இப்படி நிம்மதியாக இருக்க முடியுமா? உண்மையை சொன்னால் எங்களை விட ஒங்களுக்குத் தான் ஸ்ரீ லங்கா மிச்சம் சொந்தம்." அர்த்தபுஷ்டியுடன் சேனாதீர கூறினான்.

என் நரம்புகள் புடைத்தெழுந்தன. "இதைப் பத்தி உங்கட அரசியல்வாதியளோட கதை. என்னோட கதையாதை" என்று சூடாகச் சொன்னேன்.

"ஏன் 'பொலிற்றிஷனை' கேக்க வேணும். நீ சொல்லு." சேனாதீர கூச்சல் போட்டான்.

நாராயணனும், நிலாந்தியும் பயந்துவிட்டனர்.

"இந்த மாதிரியான சூழ்நிலையை உருவாக்கினது அரசியல் வாதியள் தான். தமிழ் ஆக்களும், சிங்கள ஆக்களும் எவ்வளவு ஒற்றுமையாக இருந்தினம். குறுகிய அரசியல் லாபத்துக்காக அரசியல்வாதியள் தான் ரண்டு இனத்தையும் ஒண்டு சேர்க்கிறம் எண்டு சொல்லி குறுகி இருந்த இடைவெளியை இன்னும் அகட்டுகினம்" என்று வார்த்தைகளைப் பொரிந்து தள்ளினேன்.

சேனாதீர பலமாகச் சிரித்தானே தவிர, ஒன்றும் கூறவில்லை.

"இஞ்சருங்கோ, இஞ்ச அரசியல் கதையாதேங்கோ. 'மிஸ்டர்' சேனாதீர இஞ்ச சாப்பிடத்தான் வந்தவர்."





ராசமலர் சமரசபாணியில் பேசினாள்.

"சரி, சரி..... அந்த உளுத்துப் போன கதை நமக்கு என்னத்துக்கு..... 'மிஸிஸ்' நல்லதம்பி நீங்க குளிச்சிட்டு வாங்க..... நாங்க சாப்பிட்டுக் கொண்டே தமாராவை பற்றி கதைப்பம்." சேனாதீர சமாளித்தான்.

ராசமலர் அங்கிருந்து மகிழ்வுடன் வெளியேறிவிடுகிறாள்.

"'ஜஃப்னா'வில 'லஞ்சுக்கு' வந்தால் கள்ளு குடிக்கலாம். இஞ்ச அப்படி செய்ய ஏலாது. எப்பதான் நிலமை திருந்தப் போகுதோ" என சேனாதீர ஏக்கப் பெருமூச்சொன்றை வெளிவிட்டான்.

சவர்க்கார வாசனையை முன்னே தள்ளியபடியே ராசமலர் குளித்துவிட்டு வந்தாள். அவள் நெற்றியில் பார்வையைக் கவர்வது போன்று குங்குமப் பொட்டு பளிச்சிட்டது. அதை சேனாதீர அவதானித்துவிட்டான்.

"'மிஸிஸ்' நல்லதம்பி, நீங்க ஏன் குங்குமப் பொட்டு போடுறீங்க?" என சேனாதீர வினயத்துடன் கேட்டான்.

"குங்குமம் ஒரு மங்கலமான பொருள். கலியாணத்து அண்டைக்கு தன்ர வருங்காலத்துக்கு பெஞ்சாதியின்ர நெற்றியில குங்குமப் பொட்டை இட்டு புருஷன் அவளை தன்ர பெஞ்சாதி யாக்கிறான். அந்தச் சின்னம் தான் அவள் கலியாணம் முடிச்சிட்டாளா, இல்லையா எண்டு மற்ற ஆக்களுக்கு எடுத்துக் காட்டுது. இது ஓரளவுக்கு அவளுக்கு ஒரு பாதுகாப்பாகவும் இருக்குது" என்று ராசமலர் ஒரு விளக்கத்தை அளித்தாள்.

"என்ன மாதிரி?"

"ஒரு பொம்பளை கலியாணம் முடிச்சிட்டாளா, இல்லையா எண்டு மற்ற ஆம்பிளையள் எங்கட நெற்றியில கிடக்கிற குங்குமப் பொட்டைப் பார்த்துத்தான் முடிவுசெய்கினம். குங்குமப் பொட்டு இட்டிருந்தால் 'ஓ, கலியாணம் முடிச்ச பொம்பளை' எண்டு தெரிஞ்சு ஒதுங்கிவிடுவினம். மரியாதை தருவினம். சேட்டை விடத் தயங்குவினம். அதால நாங்கள் குங்குமப் பொட்டை புனிதமான பொருளாக நினைக்கிறம். கடவுளுக்கு முன்னால குங்குமச் சிமிழை வைக்கிறம்."

"அதாவது இந்த குங்குமப் பொட்டு உங்களை மற்ற ஆம்பிளைங்க கிட்டே இருந்து காப்பாத்துது. அப்படித்தானே?"

"ஓமோம்."

அவர்கள் சம்பாஷனையில் நான் குறுக்கிட்டேன். "சேனா, நானும் குங்குமப் பொட்டு போட்ட பொம்பளையளை கண்டால் மரியாதை குடுக்கிறனான்."

சேனாதீர நிறையவே யோசித்தான்.

"நம்மட ஆக்கள் இந்த மாதிரி செய்தால் எவ்வளவு நல்லா இருக்கும்? நான் கலியாணம் முடிச்ச பிறகு தமாராவுக்கும் குங்குமப் பொட்டு போடச் சொல்லப் போறன்."

"தமாராவை கலியாணம் முடிக்கிறது எண்டு முடிவு எடுத்திட்டீங்களா?" ராசமலர் ஆர்வத்துடன் கேட்டாள்.

"இல்லை, இல்லை. சும்மா ஒரு உதாரணத்துக்குத் தான் சொன்னனான்."

தமாரா பற்றி ராசமலரிடம் சேனாதீர துருவித் துருவி ஆராய்ந்தான். அவனுக்குப் பதில் சொல்லியே அவளுக்கு அலுத்து விட்டது. மூன்று வருடங்களுக்கு முன் எடுக்கப்பட்ட தமாராவின் புகைப்படத்தையும் ராசமலர் நீட்டினாள்.

இரண்டு மணிக்கு மதிய போசனை விருந்து முடிந்தது.

சேனாதீர வயிறு புடைக்கச் சாப்பிட்டான். "சா! நல்ல சாப்பாடு. தமாராவிற்கு இப்படி சமைக்கத் தெரியுமா?"

"இதை விட நல்லா சமைக்கத் தெரியுமாம்." ராசமலர் நமுட்டுச் சிரிப்புடன் சொன்னாள்.

"அப்படி எண்டால் நாளைக்கு அவளைப் போய் பார்ப்பம்."

சேனாதீர போய்விட்டான்.

மறுநாள் அவன் மகிழ்ச்சியுடன் காணப்பட்டான். அடிக்கடி வந்து 'கொட்டியா' என்று சொல்லி விட்டு சென்றான்.

மாலையில் தமாராவின் காரியாலயத்தை நோக்கிச் சென்றோம்.

வழியில் 'பஸ்' நிலையத்திற்கு அருகில் நாலைந்து இளம் பெண்கள் ஒவ்வொரு கோணத்தில் நெளிந்து, வளைந்து நிற்கிறார்கள். அவர்களின் உடைகள், நின்ற விதம், கண்களில் தெரிந்த கலவரம், கால்களில் தெரிந்த சொரிகள்..... அவர்கள் யார் என்பதை எமக்கு உணர்த்தி விட்டது.

"இந்த குட்டிகளால 'எயிட்ஸ்' எல்லாம் பரவப்போகுது" என்று சொன்ன சேனாதீர, திடீரென நின்றான். அவர்களில் ஒருத்தியை





அவன் நோக்கினான். அந்த ஒருத்தி குங்குமப் பொட்டுடன், மேனியில் முக்கால்வாசி வெளியில் தெரிய நிற்கிறாள்.

சேனாதீரவின் முகத்தில் ஒரு சலனம் ஏற்படுவதை அவதானித்தேன். அதில் கோபம் குடியேறுகிறது. என்னை விட்டு விலகியவன், அவளை அடைகிறான். நான் சற்றேனும் எதிர்பார்க்க வில்லை. அவன் தூஷண வார்த்தைகளை உபயோகித்து அவளை ஏசினான். "குங்குமம் ஒரு மங்கலப் பொருள். அதன் புனிதத் தன்மையையே கெடுத்துவிட்டாய்" என்று சேனாதீர கத்தினான்.

அவள் முகத்தில் நிறைய அலட்சியம். எதையும் கவனிக்காதவள போல நின்றாள். மற்றப் பெண்கள் 'மாத்தையாட்ட லூஸ்' என்று சொன்ன மாதிரி எனக்கு கேட்டது.

தமாராவின் காரியாலயத்தை அடையும் வரை சேனாதீரவின் செயலையிட்டு என்னுள் நிறைந்திருந்த ஆச்சரியம் அடங்கவே இல்லை.

*(கனடாவில் இருந்து வெளிவரும் 'உதயன்' பத்திரிகை 1999இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாவது பரிசு பெற்றது.)*

# நியாயம், தர்மம்.....

நிறைய புழுதியை வாரி இறைத்தபடி 'ஜீப்' ஒன்று அந்தப் பழங்காலத்து வீட்டின் முன்பாக வந்து நின்றது. அதன் பின்னால், 'அந்தப் புழுதி போதாது, அதைவிடப் புழுதியை என்னால் கிளப்ப முடியும்' என்ற தோரணையில் ஓர் இராணுவ 'ட்ரக்'..... பாதசாரிகள் பலரும் நிறையவே தும்மியபடி..... கைக்குட்டையினால் மூக்கைப் பொத்தி.....

'ஜீப்'பில் இருந்த 'கப்டன்' பொன்சேகா கீழே குதித்தான். அவன் முகத்தில் பரபரப்பு. அதே வேளை, 'ட்ரக்'கில் இருந்து இராணுவ வீரர்கள் வெளியே பாய்ந்தார்கள்.

"ஊம், வீட்டை உடனடியாக சுற்றி வளையுங்கள்" என்று பொன்சேகா கட்டளையிட, இராணுவ வீரர்கள்- இருபதுக்குள் அடக்கம்- அந்த வீட்டைச் சுற்றி வளைத்து, நிலையெடுத்து நின்றனர். எல்லாம் ஒரு சில வினாடிக்குள் நிறைவேறிய செயற்பாடுகள்.

பாதசாரிகளில் சிலருக்கும், அக்கம் பக்கத்தில் வாழும் பலருக்கும் 'விடுப்பு எண்ணம்' மேலோங்க, வீட்டின் முன்னால் கூடிவிடுகின்றனர். 'என்ன, ஏது' என்று அவர்கள் கண்மணிகளைப் பிரட்ட..... வயதான ஒருவர் பொன்சேகாவை நோக்கி, "மகன், புலி வேட்டையா?" என நகைச்சுவை உணர்வுடன் கேட்கிறார்.

பொன்சேகா ஒன்றும் கூறவில்லை. முகத்தை அளவுக்கதிகம் சுளித்தான். அவன் பார்வை அவ்வீட்டின் முன்பாக முற்றுப்புள்ளி யிட்டிருந்தது.

வயதானவர் வாயைப் பொத்திவிட்டார்.

வீட்டின் முன் கதவு திறக்கப்பட்டது. நடுத்தர வயதானவர் ஒருவர் நிறையக் கேள்விக்குறிகளுடன் வாசலுக்கு வந்தார். முன்புறமாக நின்ற இராணுவ வீரர்கள் துப்பாக்கியின் குதிரையில் விரலைப்பதித்து உஷார் அடைந்தார்கள். இராணுவத்தினரைக் கண்டு அந்த மனிதர் 'வெலவெல'த்துப் போனார். அவரைப் பயம் கெட்டியாக அணைத்தது. வெளியே நிலவிய சூழ்நிலை அவருக்கு நிலைமையைப் புரியவைத்துவிட்டது. எவ்வித கட்டளையும் இன்றி பொன்சேகாவை நோக்கி வந்தார்.





"கெதியில் வாருங்கள்" என்று பொன்சேகா ஆங்கிலத்தில் கட்டளையிட்டான்.

அவர் விரைந்து வந்து பொன்சேகாவின் முன்னால் நின்றார். அவரினுள் பயம் நிறையவே ஒட்டிவிட்டது. கைவிரல்கள் நடுங்கின.

"உங்களுக்குப் பெயர்........" பொன்சேகா வார்த்தைகளை அரைகுறையில் நிறுத்தினான்.

"சி...சி... சிவநாதன்.."

"ஓ.... சிவநாதன்..... உங்கள் மகன் தானே குகன்?"

"ஆமாம்"

"மகள்.....?"

"தர்ஷிகா......"

"நல்ல பெயர்......." பொன்சேகாவின் முகத்தில் ஏளனம் மலிந்தது. "எல்லோரையும் கூப்பிடுங்கள். விசாரிக்க வேண்டும்."

சிவநாதனுக்கு விசாரணையின் அர்த்தம் புரிந்துவிடுகிறது. அவர் முகம் வெளுறி...... "நாங்கள் அப்பாவிகள். ஒரு தொந்தரவுக்கும் போகமாட்டோம். எங்களை விட்டுவிடுங்கள்." சிவநாதனின் கண்கள் கலங்கி..... குரல் நலிந்து.....

"எனக்கு எல்லாம் தெரியும். எனது வேலையில் குறுக்கிட வேண்டாம்" என அச்சுறுத்திய பொன்சேகா, தனது கண்களை முன்னால் நின்ற இராணுவ வீரனுக்குக் காட்ட, அவன் வீட்டை நோக்கி நடந்தான்.

அப்போது இருபது வயது மதிக்கத்தக்க வாலிபன் ஒருவன் வீட்டில் இருந்து வெளியே வந்தான். அவன் பின்னால் அவன் தாய், தங்கை.....

"எல்லோரும் கைகளை உயர்த்தியபடி இங்கு வாருங்கள்" என பொன்சேகா கட்டளையிட்டான்.

மூவரும் பொன்சேகாவை நோக்கி செல்கையில்..... சுசீலா விம்முகிறாள்.

"என்ர ராசா, உன்னையும் சந்தேகப்படுகிறாங்களே....."

தர்ஷிகாவின் கண்கள் கலங்குகின்றன. "சத்தம் போடாதேங்கோ அம்மா." மெல்லிய குரலில் அதட்டுகிறாள்.

பொன்சேகா கண்மணிகளை நாற்புறமும் சுழற்ற..... பெருவாரியான சனம் வீதியை மொய்த்துவிடுகிறது. பல ஊகங்களை அங்கிருந்தோர் தமக்குள் பரிமாறுகின்றனர். முன் வீட்டு கருணாரத்னவின் உள்ளத்தில் நிறைய மகிழ்ச்சி...... ஒரு சின்ன மொட்டைக்கடிதம் எவ்வளவு வேகமாக கருமமாற்றுகிறது என வியந்தார். 'சிவநாதன்...... ஐநூறு ரூபாய் தானே கடனாகக் கேட்டேன். தந்திருக்கலாமே...... தந்திருந்தால்...... நீ இப்படி மாட்டத் தேவையில்லையே......'

அந்தக் குடும்பத்தை 'ட்ரக்'கினுள் தூக்கிப் போட்டார்கள். குகனின் வயிற்றில் உதைத்தார்கள். தர்ஷிகாவின் தலைமயிரை இழுத்து..... சிவநாதனின் மூக்குக் கண்ணாடி பறந்தது.

'ட்ரக்'கும், 'ஜீப்'பும் சென்றுவிட்டன. புழுதியும் அடங்கி விட்டது.

விடுப்பு பார்க்க வந்தவர்களும் பல வியாக்கியானங்களுடன் சென்றுவிட்டார்கள். ஒரு சில சோம்பேறிகள் எஞ்சியிருந்தனர்.

"பாவம், அப்பாவிச் சனங்கள். எல்லோரையும் தேவையில்லாமல் அள்ளிக் கொண்டு போய்விட்டார்கள்." சிவநாதனின் வீட்டுக்குப் பக்கத்தில் உள்ள 'கராஜின்' உரிமையாளன் ஜினதாச வெதும்பினான்.

"அப்பாவிச் சனங்கள்? சிவநாதன் ஐயா பெரிய புலி, அவர் மகன் சின்னப் புலி. மகள்..... அவள் ஒரு தற்கொலைப் புலி. அவள் 'சல்வார் கமிஸ்' போட்டுக் கொண்டு போகும் போது நான் சந்தேகப்பட்டேன். அது இப்போது சரி என்று தெரிகிறது." கருணாரத்னவின் வார்த்தைகளில் நிறைய வஞ்சகம்.

ஜினதாச அர்த்தத்துடன் புன்னகைத்தான். "கருணாரத்ன ஐயாவுக்கு எந்நாளும் தமிழர்களில் ஒரு சந்தேகம். அது தான் இப்படிச் சொல்கிறார்." ஜினதாச தனது காவிப்பற்களைக் காட்டிச் சிரித்தான்.

"கொழும்பில் இருக்கும் எல்லாத் தமிழர்களுமே புலிகள் தான். இதில் எவ்வித சந்தேகமும் இல்லை. இது உறுதி. இதை எங்கு சொல்லவும் நான் தயார். அவர்களால் தான் இன்று இந்த கொழும்பு நகரம் முழுவதும் 'செக் பொயின்ட்' நிறையத் தோன்றியுள்ளது. தேவையில்லாமல் நாங்கள் எல்லோரும் 'செக் பொயின்டில்' இறங்கி......." கருணாரத்ன காறித் துப்புகிறார்.





"கருணாரத்ன ஐயா கூறுவதை நான் ஆதரிக்கிறேன்." 'கராஜின்' பின்புறமுள்ள வீட்டில் வாழும் ரூபவதி ஆமோதிக்கிறாள். "தமிழ் மக்களால் தான் இந்த நாடே இன்று சீர்குலைந்துள்ளது. சில தமிழ் இளைஞர்கள் தமது அதிருப்தியைத் தெரிவிப்பதற்காகத் தொடங்கிய இயக்கத்தினால் இன்று நாட்டின் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. சிங்கள மக்கள் நிம்மதியாக வாழமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது."

ரூபவதி பேசுவதை நிறுத்திவிட்டு, ஜினதாசவை நோக்க, 'நீயே பேசு' என்னுமாப் போல அவன் பார்க்க, "எந்நேரத்தில் எங்கு குண்டு வெடிக்கும் என்ற அச்சமே பலரைக் கொல்லாமல் கொல்கிறது. பாடசாலைகளுக்கு தமது பிள்ளைகளை அனுப்பிவிட்டு அவர்கள் வரும்வரை பெற்றோர் மனதில் உள்ள உளைச்சல்கள்..... பாதுகாப்புக் காரணத்திற்காக எத்தனை வீதிகள் மூடப்பட்டுள்ளன? இதனால் எத்தனை வீதிகளில் எவ்வளவு வாகன நெரிசல்.....? தமிழ் மக்களை படிப்படியாக அழித்தால் தான் எமது எதிர்கால சந்ததியாவது நிம்மதியாக வாழக்கூடிய நிலைமை ஏற்படும்" என்கிறாள்.

இதைக் கேட்டு ஜினதாச சிரித்தான். "ஓர் இனத்தை அழிக்கப் போகிறீர்களா? அது அவ்வளவு இலேசு இல்லை..... ஏன் ஓர் இனத்தை அழிக்கவேண்டும்? களவெடுத்த குற்றத்திற்கு மரணதண்டனையா? அரசியல்ரீதியில் தீர்க்கவேண்டிய பிரச்சனை இது." ஜினதாச அர்த்தத்துடன் கருணாரத்னவைப் பார்த்தான்.

"அரசியல் தீர்வு? இது பயங்கரவாதப் பிரச்சனை. இதற்கு இராணுவத் தீர்வு தான் ஒரே முடிவு" என்கிறார் கருணாரத்ன.

ஜினதாச தலையைக் கைவிரல்களால் சொரிந்தான். "அப்படி என்றால் அதிகாரப் பரவலாக்கம் பற்றி பேசுகிறார்களே....."

"பேசுகிறார்கள், பேசட்டும். அதிகாரப் பரவலாக்கம் என்றால் அதிகாரத்தைப் பரவலாக்க வேண்டும். ஆனால், அதிகாரம் தமிழர்களின் கைக்கு மாறுவதைப் பெரும்பான்மையான சிங்களவர்கள் விரும்பமாட்டார்கள். அதைவிட இராணுவத் தீர்வு என்றால் சலுகைகளை உரிமைகளாகக் கொடுத்து, தீர்வைக் கண்டுவிடலாம் என்று அவர்கள் எண்ணுகிறார்கள்."

ஜினதாச நமுட்டுப் புன்னகை ஒன்றை வெளியிட்டான். "உரிமைக்காகத் தான் அவர்கள் போரிடுகிறார்கள். சலுகைக்காக அல்ல. நூறு ரூபாய் சம்பள உயர்வு கேட்பவனுக்கு இருபத்தைந்து ரூபாய் கொடுத்தால் அவன் ஏற்றுக்கொள்வானா? ஆகக் குறைந்தது

எழுபத்தைந்து ரூபாயாவது கொடுக்கவேண்டும். அது தான் நியாயம், நேர்மை, தர்மம், சத்தியம்....."

கருணாரத்னவின் முகத்தில் ஏளனம் சாயலிட்டது. "எழுபத்தைந்து ரூபாய்? வெறும் எலும்புத் துண்டுகளை நீட்டிவிட்டு முடிக்கிற பிரச்சனைக்கு ஏன் இறைச்சியைப் பற்றிக் கதைக்க வேண்டும்?"

"எலும்புத் துண்டுகளுக்கு நாக்கை நீட்டிய காலம் எப்பொழுதோ மலை ஏறிவிட்டது. இப்போது எமது இறைச்சியை அவர்கள் சாப்பிடுவதற்கான ஒரு சூழ்நிலையை நாம் உருவாக்கிவிட்டோம்."

"எமது இறைச்சியை அவர்கள் சாப்பிடுவது அவ்வளவு இலேசு அல்ல. அதுக்கு முன் நாம் அவர்களை ஒரேயடியாக விழுங்கி விட வேண்டும். யாழ்ப்பாணத்தின் மீது குண்டு போட்டு, அங்குள்ள சகல மக்களும் அழிக்கப்படும் நன்னாளை நான் ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்."

ஜினதாசவுக்கு கோபம் வந்துவிட்டது. "கருணாரத்ன ஐயா, இப்படி இனத்துவேஷத்துடன் பேசாதீர்கள். இப்படி எண்ணுவதே பாவம். அவர்களுக்கும் எங்களைப் போலத்தான் இரத்தம் ஓடுகிறது. நாம் அவர்களை அணைத்து, எங்கள் இரு இனங்களுக்கு இடையில் நிலவும் விரிசலை அகற்ற வேண்டும். அப்போதுதான் இனப்பிரச்சனை தீரும். இந்த நாடு செழிப்படையும். அபிவிருத்தியின் அர்த்தத்தை உணரமுடியும்."

கருணாரத்ன கேலியாகச் சிரித்தார். "குண்டுடன் தான் அவர்கள் எம்மை அணைப்பார்கள். நாம் அவர்கள் மீது அன்பு சொரிய, அதை தமக்குச் சாதகமாக்கும் அவர்கள் குண்டை வெடிக்கச் செய்வார்கள். அதைத் தான் இப்போது கொஞ்சம், கொஞ்சமாக நிறைவேற்றுகிறார்கள்."

"உங்களுக்கு அவர்கள் மீது காரணமில்லாமல் சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. அச்சந்தேகம் அடிப்படையற்றது. அவர்கள் எங்களுடன் இணைந்து வாழவே விரும்புகிறார்கள். இது எனது அனுபவம்."

"அப்படி என்றால் அவர்கள் ஏன் எங்களுக்கு எதிராக துப்பாக்கி ஏந்துகிறார்கள்?" இவ்வளவு நேரமும் அமைதியாக இருந்த ரூபவதி கேட்டாள்.

"அவர்கள் என்று நீ யாரைக் குறிப்பிடுகிறாய்?"

"தமிழ் மக்களை."





"தமிழ் மக்கள் என்றுமே துப்பாக்கியை ஏந்துவோம் என்று நினைத்திருக்கமாட்டார்கள். ஆனால், அப்படியானதொரு நிலையை நாம் உருவாக்கிவிட்டோம். காலாதி காலமாக அடக்குமுறைக்கு பணிந்து, தலை உயர்த்த முடியாத நிலை ஏற்பட்ட போதுதான் ஒரு சில தமிழ் இளைஞர்கள் துப்பாக்கியை ஏந்தினார்கள். அதற்கான காரணத்தை அந்நேரம் அறிந்து பரிகாரம் கண்டிருந்தால் நிலைமை இந்தளவு விசுவரூபமெடுத்திருக்காது. தலையிடிக்கு சத்திரச்சிகிச்சை செய்யப்போய் அது புற்று நோயாக வளர்ந்துவிட்டது. இன்று ஒரு கோடியே எண்பது இலட்சம் மக்கள் யுத்தத்தில் நேரடியாகவும், மறைமுகமாகவும் பங்கெடுக்கிறார்கள்."

"ஆம், அரச இயந்திரம் சரிவரச் செயற்படாததினால் தான் சகல மக்களும் யுத்தத்தின் கோரப்பிடிக்குள் சிக்கிவிட்டனர். அதில் இருந்து வெளியேறுவதற்கு வழி தெரியாமல் திண்டாடுகின்றனர். வெளிச்சம் எங்கே தெரிகிறது என்று எல்லோருமே தேடுகிறார்கள். அன்பால், ஆதரவால், சகோதரத்துவத்தால், விட்டுக்கொடுக்கும் மனப்பான்மையால், அஹிம்சை வழியால் பிரச்சனைக்கு பரிகாரம் தேடும் நிலை இருக்கும் போது, சீனாக்காரனின் துப்பாக்கியிலும், இஸ்ரேலிய குண்டு வீச்சு விமானங்களிலும் நம்பிக்கை வைக்கிறார்கள். எமது நாட்டின் சொத்தை நாமே அழிக்கிறோம். எமது வருங்காலச் சந்ததியை 'ஏதோ' ஒரு சக்திக்கு அடகு வைத்து ஓர் இனத்தின் உரிமையை அநாகரீகமாக நசுக்குகிறோம். அப்பாவிகளைப் பயங்கர வாதிகள் எனக் குற்றஞ்சாட்டி கூண்டில் அடைக்கிறோம். உண்மை களைச் சாகடிக்கிறோம்."

"மடையன் மாதிரிக் கதைக்காதே. சிவநாதன் ஐயாவின் மகன், மகள் அப்பாவிகள் என்று சொல்கிறாயா? அவர்கள் அப்பாவிகள் போல நடிக்கிறார்கள். முழுக் குடும்பத்தினரும் புலி இயக்கத்தினர். கொழும்பில் குண்டு போடத்தான் அவர்கள் அப்பாவிகள் போல நடித்து உன்னை ஏமாற்றுகிறார்கள்."

ஜினதாச ஒன்றும் கூறவில்லை. அங்கிருந்து போய்விட்டான்.

இரவாகிவிட்டது.

அப்பிரதேசத்தை புழுக்கம் தன் கோரப்பிடிக்குள் சிக்க வைத்திருந்தது.

'கராஜின்' முன்பாக ஜினதாச துவாயினால் விசிறியபடி அப்படியும், இப்படியுமாக நடந்து கொண்டிருந்தான். அவன் பார்வை அடிக்கடி சிவநாதனின் வீட்டை மேய்ந்தது. மாலை வேளை இராணுவத்தினர் சிவநாதன் குடும்பத்தை விசாரணைக்கென

கூட்டிச்செல்லும் போது, "ஐயா, அவர்கள் அப்பாவிகள். அவர்களை ஒன்றும் செய்து விடாதீர்கள்" என்று அவன் பொன்சேகாவிடம் கூறிய போது, பொன்சேகாவின் முகத்தில் கோபம் கொப்பளித்தது. "உங்களைப் போன்ற ஆட்களால் தான் புலிகள் இயக்கம் வளர்கிறது. உன்னைப் போல இரண்டு பேர்களை இவர்களோட அடைத்தால் தான் மற்றவர்கள் வாயை மூடிக்கொண்டு இருப்பார்கள். நீ ஒரு உண்மையான சிங்களவன் இல்லை" என்று ஆக்ரோஷத்துடன் சொன்னான்.

சிவநாதன் குடும்பத்தினருக்காக ஜினதாச மனவேதனை அடைந்தான். கௌரவத்துடன் வாழ்ந்த அவர்களைக் கட்டாக்காலி நாய்களை ஏற்றுவது போல ஏற்றிக் கொண்டு போய்விட்டார்களே! ஒரு சில நிமிடங்களில் இவ்வளவு காலமும் கட்டிக் காத்த கௌரவத்தை இழந்துவிட்டார்களே என்றெல்லாம் கவலைப்பட்டான்.

கருணாரத்ன பூரிப்புடன் வந்தார். "சிவநாதன் குடும்பத்தை இன்னும் விடவில்லை போல..... அப்படி என்றால் அவர்கள் பயங்கர வாதிகள் தான்..... அது நிச்சயம்."

"இல்லை." ஜினதாச அதை மறுத்தான். "எனக்கு சிவநாதன் குடும்பத்தை ஆறு வருடங்களாக தெரியும். அவர்கள் அப்படிப்பட்டவர்கள் அல்லர். யாரோ ஒரு திருட்டு நாய் தான் பொய்யான தகவலைக் கொடுத்து அவர்களை கைது செய்ய வைத்திருக்கிறது. அந்த நாய் எனது கைக்குக் கிடைத்தால்....." ஜினதாசவின் முகம் இறுகிக் கொண்டு வந்தது.

கருணாரத்ன ஒன்றும் கூறாமல், முகத்தை வேறு பக்கம் திருப்பிவிட்டார்.

அங்கு சில வினாடிகள் மௌனம் நிலவியது.

"பயங்கரவாதிகளை அரசாங்கம் அடியோட அழித்தால் தான் இந்த நாடு உருப்படும். நாம் நிம்மதியாக வாழமுடியும். அல்லது, பயங்கர குண்டுகளுக்கு மத்தியில் தான் வாழவேண்டிவரும்" என கருணாரத்ன பொதுப்படையாக, தாழ்ந்த குரலில் கூறினார்.

ஜினதாச நக்கலாகச் சிரித்தான். "ஆரம்பத்தில் சொற்ப தொகையினர் இருக்கும் போதே அவர்களை ஒழிக்க ஜே.ஆரின் அரசாங்கத்தினால் முடியவில்லை. இன்று அவர்கள் உள்ள நிலையில் அவர்களை அழிக்கமுடியுமா? அவர்கள் உலகம் பூராவும் கிளைகளை அமைத்து, இயக்கத்தை வளர்க்கிறார்கள். அவர்களிடம் கப்பல்கள் இருக்கின்றன. அரசாங்கப் படையினரிடம் இல்லாத அதிநவீன ஆயுதங்கள் உள்ளன. ஆயுதப்படையினரை விட குறைந்தளவு தொகையினராக அவர்கள் இருந்தாலும், பலம்மிக்க





வர்களாக விளங்குகிறார்கள். சிறந்த பயிற்சியைப் பெற்று இருக்கிறார்கள். மதிநுட்பம் கொண்டவர்கள். அதே வேளை, குறிக்கோள் ஒன்றை அடைவதற்காக உயிரையும் தியாகம் செய்வதற்கும் தயங்கமாட்டார்கள். சில ஆயிரம் உறுப்பினர்களைக் கொண்ட கூட்டம் ஓர் அரசாங்கத்திற்கும், அதன் சகல படைகளுக்கும், சில தமிழ் இயக்கங்களுக்கும், எதிர்ப்பு காட்டும் மக்களுக்கும் எதிராகப் போராடுவது இலகுவான காரியம் அல்ல. புலிகள் இயக்கம் இன்று மாபெரும் இயந்திரம் போல செயற்படுகிறது. இந்த இயக்கத்தை தோற்கடிப்பது என்பது ஒரு கனவாகத் தான் முடியும்."

"அப்படி என்றால் அவர்களுக்கு நாட்டைப் பிரித்துக் கொடுப்பதா?"

"அது அரசாங்கத்தை, மக்களை, பௌத்த குருமார்களை, இனத்துவேஷப் பத்திரிகையாளர்களை, எதிர்க்கட்சியினரைப் பொறுத்தது. ஒன்றில் சமாதானத்திற்கு கரத்தை நீட்ட வேண்டும். அல்லது இந்நாட்டைப் பிரித்துக் கொடுக்கவேண்டும். இரண்டில் ஒன்றைச் செய்யாவிட்டால் சிங்கள அப்பாவிகளும், தமிழ் அப்பாவிகளும் அநியாயமாக, நாய்களைப் போல, அழுவதற்கு கூட பிரேதம் இல்லாத நிலையில் பலியாவதை யாருமே தடுத்து நிறுத்த முடியாத நிலை ஏற்படும்."

"ஆறறிவு உள்ள எந்த ஒரு சிங்களவனும் நாட்டைப் பிரிக்க சம்மதிக்கமாட்டான். சமாதானத்திற்காக நாம் எமது கரங்களை நீட்டத் தேவையில்லை. ஏனெனில் அவர்கள் தான் துப்பாக்கியை ஏந்திய வர்கள்."

"உண்மை தான். ஆனால், அதற்கான களத்தை அமைத்துக் கொடுத்தவர்கள் நாங்கள் தான்."

"அரசாங்கமும், எமது ஆயுதப்படையும் திட்டமிட்டுச் செயற்பட்டு, புலிகள் இயக்கத்தை அழித்தொழித்தால் பிரச்சனை தீர்ந்துவிடும். அப்படித் தானே?"

"கருணாரத்ன ஐயா, உலக சரித்திரத்தில் எந்தவொரு கெரில்லா இயக்கமும் தோற்கடிக்கப்பட்டதாக சரித்திரம் இல்லை." இவ்வாறு கூறிய ஜினதாச சில வினாடிகள் கருணாரத்னவின் முகத்தை உற்று நோக்கினான். கருணாரத்ன மௌனமாக விளங்க, தொடர்ந்தும் பேசினான். "இதில் இருந்து என்ன தெரிகிறது? ஓர் அரசாங்கமும், கெரில்லா இயக்கமும் சமபலத்தை கொண்டுள்ளன என்பது தெளிவாகின்றது. இங்கும் அதே நிலைதான். அரசாங்கத் தினால் புலிகள் இயக்கத்தை வெல்லமுடியாது. அதே போல புலிகளினால் அரசாங்கத்தை வெல்லமுடியாது. ஆகவே, பேச்சு

வார்த்தை மூலம் நீதியான அரசியல் தீர்வை அரசாங்கம் முன் வைக்கவேண்டும். சுதந்திரத்தின் பின் தமிழர்கள் பெருமளவில் நசுக்கப்பட்டுவிட்டார்கள். அதுவும் ஆயிரத்திதொள்ளாயிரத்து எண்பத்து மூன்றின் பின் அவர்கள் பிச்சைக்காரரை விட கேவலமான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டார்கள். இலட்சக்கணக்கானோர் அகதி அந்தஸ்தைப் அடைந்துவிட்டார்கள். இவை யாவற்றுக்கும் பிராயச்சித்தமாக அவர்களுக்கு அதிகாரப் பரவலாக்கம் மூலம் நியாயமான, தர்மமான, அவர்களே ஏற்றுக்கொள்ளக்கூடிய உரிமைகளை வழங்க வேண்டும். அவர்கள் எமது நாட்டு மக்கள். அவர்களுக்கு இப்பொழுதை விட அதிகமான உரிமைகளை வழங்குவதனால் ஏதும் பாதகமில்லை."

கருணாரத்ன வாய்விட்டு சிரித்தார். "ஜினதாச தம்பி, தமிழர் களுக்கு வரம்பு மீறிய அதிகாரத்தை வழங்கினால், அவர்கள் அதை வைத்துக் கொண்டே தனிநாடு அமைக்க முயற்சி செய்வார்கள்."

"தமிழர்கள் என்றால் ஏன் அவர்கள் மீது சந்தேகம் கொள்கிறீர்கள்?"

"புலிகள் இயக்கம் எத்தனையோ தடவைகள் ஒப்பந்தங்களை முறித்துள்ளதால் நாம் தமிழர்கள் மீது சந்தேகம் கொள்கிறோம்."

"எங்களுடைய தலைவர்கள், அதுவும் நாட்டை அரசாட்சி செய்த தலைவர்கள் தமிழர்களுடன் செய்த ஒப்பந்தங்களை கிழித்தெறியவில்லையா?"

"தமிழர்கள் சார்பில் தான் நீ உன் கருத்துக்களை வெளிப்படுத்துகிறாய், ஜினதாச தம்பி."

"இல்லை, நியாயத்தைத் தான் நான் எடுத்துரைக்கிறேன், கருணாரத்ன ஐயா, தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை, உரிய காலத்தில் வழங்கியிருந்தால் இந்நிலைமை ஏற்பட்டிருக்காது."

"அப்படி வழங்கியிருந்தால் அவர்கள் வட மேல் மாகாணத்தையும் அடக்கி தமிழ் ஈழப் போராட்டத்தை நடத்துவார்கள். எமது தேசபிதா டி.எஸ். சேனநாயக்காவின் முன்யோசனையால் தான் இன்று வடக்கையும், கிழக்கையும் இணைத்து புலிகள் இயக்கத்தால் போராட்டம் நடத்த முடியாமல் இருக்கிறது. வெலி ஓய என்ற ஒரு பகுதி உருவாக்கப்பட்டிருக்காவிட்டால், புலிகள் கைகள் இன்னும் ஓங்கியிருக்கும்."

"இப்படியே நீங்கள் எல்லோரும் பேசினால் இந் நாட்டில் சமாதானம் ஏற்படப்போவதில்லை. அடுத்த நூற்றாண்டிலும் இரத்த ஆறு ஓடத் தான் போகிறது."





"அப்படியானால் எமக்கு விமோசனம் இல்லையா?"

"இருக்கிறது. முதலாவதாக சிங்கள மக்கள் தமது குறுகிய, குரோத, இனத்துவேஷ மனப்பான்மையை ஒழிக்க வேண்டும். பெரும்பான்மை, சிறுபான்மை என்ற வார்த்தைப் பிரயோகங்களை மறக்க வேண்டும். சீரிய தொலைநோக்கைக் கொண்டிருக்க வேண்டும். எல்லா சிங்கள மக்களும் ஒருமித்த குரலில் தமிழர்களுக்கு உரிமையைக் கொடுங்கள் என்று கோஷம் எழுப்ப வேண்டும். அந்த கோஷத்தைத் தனது எதிர்கால சந்ததியின் நன்மையைக் கருதி அரசாங்கம் செவிசாய்க்க வேண்டும். அப்பொழுது தான் தமிழர்கள் தாங்கள் ஏந்திய ஆயுதங்களை கீழே வைப்பார்கள். இதன் மூலம் எமது நாட்டிற்கு விமோசனம் ஏற்படும். நாம் பொருளாதாரரீதியில் முன்னேறலாம். எமது நாட்டில் சாந்தி, சமாதானம் நிலவும். இனங்களுக்கிடையில் ஒற்றுமை, ஐக்கியம் ஏற்படும். இவ்வாறு கோஷம் எழுப்ப சிங்களவர்கள் முன்வருவார்களா?" எனக் கேட்ட ஜினதாச, ஆர்வத்துடன் கருணாரத்னவை நோக்கினான்.

கருணாரத்ன எக்காளமிட்டு சிரித்தார். "சிவநாதன் ஐயா உன் மூளையை நன்றாக சலவை செய்திருக்கிறார். அது தான் அவர்களை அப்பாவிகள் என்று சொல்கிறாய். அவர்களுக்கு சார்பாக எழுந்தமானக் கதையெல்லாம் சொல்கிறாய். நீ ஒரு முட்டாள். ஒரு சிங்களத் துரோகி."

"இந்த நாட்டில் சமாதானம் ஏற்பட தேவையில்லை என்று சொல்கிறீர்கள். ஆனால், அதன் தாற்பரியத்தை இன்னும் ஒரு தசாப்தத்திற்குள் நீங்கள் உணர்வீர்கள். இந்த தசாப்தத்திற்குள் எமது இளைஞர்கள் யுத்தபூமியில் தமது சாவை அணைக்கப் போகிறார்கள். நாம் எல்லோருமே எமது தம்பிமாரை, மகன்மாரை, பேரன்களை, அல்லது பூட்டன்களை நாளாந்தம் இழக்கப் போகிறோம். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு நாளும் ஓர் இளைஞனின் மரணச்சடங்கு நடக்கத்தான் போகிறது. அதுவும் பிரேதம் அற்ற மரணச்சடங்கு."

"நாட்டின் இறைமையைக் காப்பாற்ற, நாடு பிரிவதைத் தடுக்க எமது இளைஞர்கள் தமது உயிர்களைத் தாரை வார்ப்பதில் தவறில்லை. அது மாபெரும் தியாகம்."

"உங்கள் முடிவையிட்டு என்றோ ஒரு நாள் நீங்கள் வருந்துவீர்கள்."

திடீரென 'ஜீப்' ஒன்று வந்து நிற்கும் சத்தம் கேட்கிறது. ஜினதாசவும், கருணாரத்னவும் 'ஜீப்'பை நோக்க, அதில் இருந்து

இரு இராணுவ வீரர்கள் இறங்கி, கருணாரத்னவின் வீட்டை நோக்கிச் சென்றார்கள்.

"கருணாரத்ன ஐயா, உங்கள் வீட்டுக்குத்தான் செல்கிறார்கள்" என்று ஜினதாச கூற, கருணாரத்ன ஓட்டமும், நடையுமாக தனது வீட்டுக்குச் சென்றார்.

இராணுவ வீரர்களைக் கருணாரத்ன நெருங்கி, "என்ன விஷயம்?" என்று அவசரத்துடன் கேட்க, "கருணாரத்ன ஐயாவைச் சந்திக்க வேண்டும்" என்கிறான் ஓர் இராணுவ வீரன்.

"நான் தான் கருணாரத்ன....."

"ஐயா, உங்கள் மகன் கெமுனு தனது தாய்நாட்டுக்காக தனது உயிரைக் கிளிநொச்சியில் அர்ப்பணித்துவிட்டார்" என்று ஒரு வீரன் சொல்ல, "எனது தங்கமான மகனே" என கருணாரத்ன புலம்ப, ஜினதாச அங்கு ஓடோடி வருகின்றான்.

இரவு முழுவதும் கருணாரத்னவின் வீட்டில் ஒப்பாரியும், புலம்பலும், அழுகையும் மாறி, மாறிக் கேட்டன.

விடிய, விடிய இறுதிக் கிரியைகளுக்கான கருமங்களைச் செய்வதில் ஜினதாச ஈடுபட்டிருந்தான்.

அவன் அங்கிருந்து புறப்படும் போது, கருணாரத்ன அவனை நெருங்கினார். "நீ சொன்னவற்றை எல்லாம் நான் இப்பொழுது அசை போடுகிறேன்" என்றார் கருணாரத்ன.

ஜினதாச ஒரு புன்முறுவலுடன் சென்றுவிட்டான்.

*(அமைச்சுக்களுக்கிடையிலான உத்தியோகத்தர்கள் மத்தியில் கலாசார, சமய அலுவல்கள் அமைச்சு 1998இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் முதற் பரிசு பெற்றது.)*



# புதிய வீட்டில்

அந்த வீடு, அதன் சூழல் - அக்கம் பக்கத்தில் கிடந்த சேரிகள், அவற்றில் வாழ்ந்த மக்கள் பிரதிநிதிகள், பகல் வேளைகளில் வீடு முழுவதும் பரம்பிக் கிடந்த ஈக்கள், மாலை வேளைகளில் ஊசிகளாக குத்த ஆரம்பிக்கும் நுளம்புகள், மூலத்தைக் கண்டுபிடிக்க முடியாத இடத்தில் இருந்து கிளம்பும் துர்நாற்றம் என்று வாழ்வின் உன்மத்தங்களுக்கு சவாலாக விளங்கிய பல பிரதிகூலமான அம்சங்கள் அம்மாவின் நாளாந்த முணுமுணுப்புகளில் அடங்கியிருந்தன. அவள் முகத்தில் எந்நேரமும் கடுகடுப்பு பரிணமிப்பதைக் கண்டிருக்கிறேன். அப்பாவுடன் பல முறைப்பாடுகளை முன்வைத்து வாதிட்ட போதெல்லாம் மௌன சாட்சியாக விளங்கியிருக்கிறேன்.

"என்ர சம்பளத்திற்கு இந்த வீட்டை விட்டு எங்கையும் போக ஏலாது. நீர் நினைக்கிற மாதிரி ஒரு பெரிய வீட்டுக்கு நாங்கள் இடம் மாறுறது எண்டால் என்ர சம்பளம் காணாது. உம்மட உணர்ச்சியளை, புலன்களை அடக்கிக் கொண்டு இரும்."

ஒரு நாள் - கோபம் உச்சந்தலைக்கு ஏறிய நிலையில் - இது எனது அனுமானம் - அப்பா உச்சஸ்தாயில் கத்தினார்.

அம்மா பயந்துவிடவில்லை. வாயையும் அடக்கவில்லை. "இந்த வீட்டில இன்னும் கொஞ்ச காலத்துக்கு இருந்தால் எனக்கு விசர் தான் பிடிக்கும். ஒண்டில் ஒரு வீட்டை வாடகைக்கு எங்காவது நல்ல இடத்தில எடுங்கோ. இல்லாட்டி ஒரு வீட்டை வாங்கிறதுக்கு கெதிப் பண்ணுங்கோ." அழுத்தம் திருத்தமாக அம்மா சொல்லிவிட்டு, கனல் பறக்கும் விழிகளுடன் சென்றுவிட்டாள்.

அப்பா மலைத்துவிட்டார்.

கனவு என்பார்களே, அது போலத்தான் ஊரில் குண்டுத் தாக்குதலுக்கு 'பங்கரையும்' உறைவிடமாகக் கொண்டிருந்த நாட்களில் ஒரு நாள் அப்பா வீடு வந்திருந்தார். அவர் முகத்தில் நிறைய வியர்வைத்துளிகள்.

"வவுனியாவில இருந்து இஞ்ச வாறதுக்கு ஆறு நாள் எடுத்திட்டுது. சே! இனி என்னால இப்படி வந்து போக ஏலாது. நாங்கள் எல்லாரும் ஒண்டாக இருக்கிறது தான் நல்லது" என்கிறார்.

அம்மாவின் முகத்தில் சிறிய சலனம். அப்பாவின் கருத்துக்கு சார்பாகவோ, மறுப்பாகவோ ஒரு வார்த்தையை அவள் வெளியிட வில்லை.

மறு நாள் காலை, “நான் ஒரு முடிவுக்கு வந்திட்டன். இனியும் நீரும், முரளியும் இஞ்ச இருக்கிறது சரிவராது. இந்த முறையே என்னோட கொழும்புக்கு வாங்கோ. அதுக்கு ஏற்ற மாதிரி ஒழுங்கு களைச் செய்யும். ஒதுக்க வேண்டிய சாமான்களை ஒதுக்கிவிட்டு, மிச்சத்தை கொண்டு போவம்” என்று சொன்னார்.

இப்போது அம்மாவின் முகத்தில் நிறைந்த சலனம். கண்களின் கீழே கிடந்த நரம்புகள் துடிப்பதையும் அவதானிக்கிறேன்.

“கொழும்புக்கோ? ஒரு மாதிரி சமாளிப்பம். இந்த வீட்டை விட்டு எப்படிப் போறது?” அம்மா மெலிந்த குரலில் கேட்கிறாள்.

“வீட்டைக் கட்டிப் பிடிச்சுக் கொண்டிருந்தால் ஒரு நாளைக்கு ரண்டு பேரும் கருகின விறகுக் கட்டை மாதிரிக் கிடக்கக்கிள்ளை தான் நான் இஞ்ச வருவன்.”

அப்பாவின் தாக்கமான வார்த்தைகளை கேட்டு அம்மா திடுக்கிட்டுவிட்டாள். அப்பா நிறைய வாதங்களை முன்வைத்தார். அம்மா என்னைத்தான் பார்த்துக் கொண்டிருந்தாள்.

நான் வாயைத் திறக்கவில்லை. எனக்கு அப்போது வயது பன்னிரண்டு. சூழ்நிலையின் தாக்கத்தை துலாம்பரமாக பிரித்து, பகுத்தறியக்கூடிய பக்குவம் அரிதாகவே மனதில் புதையுண்டிருந்தது.

இரு நாட்களாக இது பற்றித்தான் பேச்சு. இறுதியில் அம்மா தலைசாய்த்தாள். அவளுக்குச் சம்மதம்.

பல இரத்த உறவுக்காரர்களை, அவர்களை மிஞ்சிய நண்பர் களை விட்டுப் பிரிவதில் எனக்கு மனமில்லை. அம்மாவும் என் நிலையிலேயே திகழ்ந்தாள். எமது உணர்ச்சிகளின் ஆழத்தைப் பற்றியெல்லாம் அப்பாவிடம் சொல்லி, அவர் மனதை மாற்ற முடியாது. பல எதிர்மறையான நிகழ்வுகளுக்கு அது அடிகோலிவிடும். அப்பா முன்கோபக்காரர், தனது முடிவுகளுக்கு கட்டுப்படவேண்டும் என்ற நியாயத்திற்கு கட்டுப்பட்டவர்.

“சரி கொழும்புக்குப் போவம்.” அம்மா சொல்லிவிடுகிறாள்.

அடுத்த இரு நாட்களும் ஓர் அரைகுறை களிப்பு எமது வீட்டில் உலாவியது. அப்பாவின் செயல்களில் சுறுசுறுப்பு மிஞ்சியது. அம்மா சோர்வாகக் காணப்பட்டாள்.





ஊரில் இருந்து புறப்பட்டோம். வழிவழியே எத்தனையோ இடைஞ்சல்கள், பிரச்சனைகள், தடைகள். யாவற்றையும் சமாளித்து மூன்று நாட்களைக் காட்டிலும் கழித்துவிட்டு, கொழும்பு வந்து விடுகிறோம்.

கொழும்பில் ஏதோ ஒரு மூலையில் மூன்றாந்தர ‘லொட்ஜில்’ இரு வார வாழ்க்கை. அதில் களிப்பு இருந்தது. கசப்பும் இருந்தது. விதம் விதமான ‘ஹொட்டேல்களில்’ இருந்து அப்பா சாப்பாடு கொண்டு வருவார். எல்லோரும் ஒன்றாக நிலத்தில் வட்டமாக இருந்து சாப்பிடுவோம்.

அப்பா அங்கிருந்தபடியே காரியாலயத்திற்கு சென்று வந்தார். என்னைப் பள்ளிக்கூடத்தில் சேர்க்கவில்லை. கொழும்பின் இடம், வலம் தெரியாதபடியால், “நீ கொஞ்ச நாளைக்கு பள்ளிக்கூடத்தை மற. ஒரு வீட்டுக்கு போனாப் பிறகு போ” என்கிறார் அப்பா.

அம்மா எந்த மறுப்பும் கூறவில்லை.

எனக்கு கொழும்பின் நிறத்தை மனதில் பதித்த பின்னரே பள்ளிக்கூடத்திற்கு போக விருப்பமாக இருந்தது.

‘லொட்ஜுக்கு’ இரவில் ‘பொலிஸ்காரர்கள்’ வருவார்கள். எங்களை எண்ணிவிட்டு செல்வார்கள். அப்பா அரசாங்கத் திணைக்களத்தில் பணிபுரிந்தபடியால் மரியாதையாக எண்ணுவார்கள். என் மீது நிறைய சந்தேகப் பார்வையை விசிறுவார்கள்.

பகல் வேளைகளில் குழம்பிய தேனீக்களாக மக்கள் பிரகிருதிகள் திக்குத்திக்காக சென்றுவிடுவார்கள். போக முடியாத பெண் வர்க்கத்தினர் எமது அறையை முற்றுகையிடுவார்கள். என்னைப் பற்றி கவலைப்படமாட்டார்கள். ஊர் வம்பில் இருந்து அரசியல் வரை, சினிமா உட்பட பல விஷயதானங்களை பட்டிமன்ற ‘ஸ்டைலில்’ விளாசித் தள்ளுவார்கள். பேச்சை விடத் தலையை ஆட்டுவதே அம்மாவின் செயற்பாடாக விளங்கும்.

இரு வாரங்கள் கழிய அப்பா பெருமிதமான முகத்துடன் வந்தார். அதில் களிப்பும் அடங்கியிருந்தது.

“ஒரு வீட்டை வாடகைக்கு எடுத்திட்டன். நாளைக்குக் காலமை அங்கை பால் காய்ச்ச வேணும்” என்கிறார் அப்பா.

அம்மாவின் முகத்தில் மகிழ்ச்சி. “எப்படி வசதியான வீடோ?”

“வசதிக்குக் குறைச்சல் இல்லை. ஆனால்......” அப்பா ஒன்றும் கூறவில்லை. அந்த ‘ஆனால்’ வார்த்தைக்குப் பின் பல ஆழமான

விடயங்கள் அடங்கியிருக்கவேண்டும். அம்மா அதை துருவித்துருவி கேட்கவில்லை.

மறு நாள் சனிக்கிழமை என்று ஞாபகம். 'லொட்ஜில்' இருந்து மூட்டை முடிச்சுகளுடன் பயணமானோம். அங்கிருந்த அரட்டைப் பிரியர்களுக்கு ஒரு சிறு கவலை.

'வேன்' பல வீதிகளையும், சந்திகளையும் தாண்டி குறுகலான வீதி ஒன்றின் ஊடாக, நிறைய புழுதியைக் கிளப்பிச் சென்று ஒரு வீட்டின் முன்பாக நின்றது. அம்மா பார்வையை மேலோட்டமாக விசிறினாள்.

அது ஒரு சேரிப்புறம். மிகவும் தாழ் மட்டத்தினாலான வீடுகள் நூறு அளவில் இருக்கும் அங்கு செறிந்து கிடக்கின்றன. அந்தக் குடியிருப்புக்களைச் சுற்றி, வீதிகளில் அழுக்கான மனிதர்கள். சேரிப்புறத்திற்கு வரைவிலக்கணம் கூறும் சூழ்நிலை அங்கு நிதர்சனமாகி இருந்தது. பலவிதமான ஒலிகள். வானொலியின் இரைச்சல்கள், சிறுவர்களின் கூக்குரல்கள்..... சொரி நாய்கள் அங்கும் இங்கும் ஓடுகின்றன..... இளைஞர் வீதியில் 'கிரிக்கெட்' விளையாடு கிறார்கள்.

அங்கு கூடி நின்றவர்கள் எல்லோருமே எம்மை விசித்திரமாக, ஏதோ ஒரு கபட எண்ணத்துடன் நோக்குவது போன்ற பிரமை.

அந்த சேரிப்புறத்திற்கு எதிர்ப்புறமாக சில பழங்காலத்து வீடுகள் அழுக்குச் சுவர்களுடன், உடைந்து போன பீலிகளுடன் தென்படுகின்றன. அவற்றில் உயரம் குறைந்த வீடு ஒன்றை அப்பா எங்களிடம் காட்டுகிறார். "அது தான் வீடு."

"அது?" அம்மாவின் பார்வையில் சினம், கலக்கம்.

"ஓமோம். வெளியிலை பார்க்கக்கிள்ளை இந்த இடமும், வீடும் ஏதோ மாதிரியாக இருக்குது. எண்டாலும் வசதியானது. ரண்டு அறை, ஒரு சின்ன 'ஹோல்', தனியான 'பாத்ரூம்' எண்டு இருக்குது. முரளிக்கு ஒரு அறை, எங்களுக்கு ஒரு அறை. காணும் தானே?" அப்பா எதுவித தடங்கலும் இன்றி கூறுகிறார்.

"இதை விட வேறை வீடு கொழும்பில இல்லையோ?"

"ஏன் இதில என்ன குறைச்சல்?"

"குறைச்சல்? எனக்கு இஞ்ச நிக்கவே கூசுது."

"கொஞ்ச நாளைக்கு இருந்தால் பழகிடும். எங்கட 'எக்கவுண்டன்' பரமசாமி இந்த வீட்டில தான் முந்தி இருந்தவராம்.





'லக்கி' வீடாம். அவர் இப்ப கனடாவில. வாடகை என்ர சம்பளத்திற்கு கட்டுப்படியாகுது. எண்டபடியாலதான் எடுத்தனான்."

'வேனில்' இருந்து கீழே இறங்க அம்மா தயக்கம் காட்டினாள். அப்பா தனது கண்களால் அவளை மிரட்டி, கீழே இறக்கிவிட்டார்.

அம்மாவும், நானும் வீட்டின் உள்ளே சென்றோம். வெளியில் இருந்த சூழலுக்கு சற்று எதிர்மாறானதாக, வீடு சற்று அழகாக, சௌகரியத்தை வெளிப்படுத்தியபடி காட்சியளித்தது. ஓரளவு நவீன வீடு போல் தோற்றமளித்தது. அம்மாவின் முகத்தில் ஒரு தெளிவு பிறக்கிறது.

அப்பா நிம்மதியாகப் பெருமூச்சுவிட்டார்.

சில வாரங்களில் அந்த இடம் எமக்குப் பழக்கப்பட்டது. பயங்கரத் தோற்றமளித்த அயல் சினேகபூர்வமாக மாறியது. அயலில் உள்ள பெண்கள் அம்மாவை பார்த்துப் புன்னகைத்தனர். ஒட்டுதல் இல்லாவிட்டாலும் ஓர் ஒட்டுதலின் நிழல் அங்கு படிந்தது.

அம்மா வழமையான காரியங்களுக்குள் தன்னை ஐக்கியப் படுத்தினாள். அப்பா என்னை அருகில் இருந்த பாடசாலையில் சேர்த்துவிட்டார்.

ஆனால், வெசாக் வர 'லிஸ்ட்டுடன்' பலர் வீட்டுக்குப் படை யெடுத்தனர். கடன் கேட்டு சிலர் கதவைத் தட்டினார்கள். குடித்து விட்டு வீட்டின் முன்னால் ரகளை புரிந்தார்கள். குழாயடிச் சண்டை தினந்தோறும் நடந்தது. மழையின் வருகையின் பின்னர் நுளம்புகளின் படையெடுப்பு மிகைப்பட்டது. ஈக்களும் எங்கிருந்தோ பறந்து வந்தன. கரப்பொத்தான்கள் வீட்டினுள் சுதந்திரமாகப் பறந்து திரிந்தன. அயலில் இருந்து பல துர்நாற்றங்கள் வெளிப்பட்டன. இரவு பன்னிரண்டு மணி வரை ஒரே இரைச்சல், கூச்சல்..... 'சுவீப்' வேன் ஒன்று தினந்தோறும் வீட்டின் முன்னால் நின்று பல பிரசார நடவடிக்கைகளை ஒலிபெருக்கியின் உதவியுடன் மேற்கொண்டது. சாப்பிட்ட பின் மதியம் தூங்கமுடியாது. யாராவது ஒருவர் தூக்கத்தை கலைத்து விடுவார்.

இவற்றின் தாற்பாரியத்தினால் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையில் நிறைய வாக்குவாதங்கள், ரகளைகள்.....

"இந்த வீட்டில என்னால இருக்க ஏலாது."

"ஒரு புது வீட்டைப் பாருங்கோ."

"ஒரு அறை வீடு என்றாலும் பரவாயில்லை. நல்ல இடத்தில பாருங்கோ."

அம்மாவின் கோரிக்கைகளை தனது வார்த்தைச் சாமர்த்தியத்தினால் அப்பா நசுக்கினார். ஆனால், அம்மா விடாப்பிடியாக நின்றாள். அப்பாவை எந்நேரமும் நச்சரித்தாள். அப்பாவுக்கு சினம், எரிச்சல், கோபம் என்று பல்வகை உணர்ச்சிகள் தாறுமாறாக ஏற்பட்டன. அம்மாவை அப்பா கண்டபடி ஏசினார். தொடர்ச்சியாக சில நாட்கள் வரை அவர்களுக்குள் பேச்சும் நின்றது.

பிரச்சனை என்றால் யாரோ ஒருவர் விட்டுக் கொடுக்க வேண்டும் என்பது நியதி.

அப்பா அந்த நியதியைக் கடைப்பிடித்தார்.

ஒரு நாள் ஒரு தீர்மானத்துடன் அப்பா வந்தார். "சரி இந்த வீட்டில இருந்து போவம்" என்று அப்பா சொல்ல, அம்மா முகத்தில் சுளைசுளையாக மகிழ்ச்சி! அன்று இரவு முழுவதும் அம்மாவுக்கு திருநாள்தான். நானும் இன்பக் கனவுகளில் நள்ளிரவு வரை மிதந்தேன். அடுத்த நாள் முதல் அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையில் அந்நியோன்னியம் முளைத்திருந்ததை உணர்ந்தேன். அவர்கள் சிரித்துக் கதைத்தார்கள். வாக்குவாதங்கள் நின்றன. சாப்பாடு சுவையுடன் பரிமாறப்பட்டது. எனக்குள் தலைகால் புரியாத மகிழ்ச்சி.

அப்பா காரியாலயத்திற்கு சென்ற பின்னரும் அம்மாவின் செயல்களில் நிறைவு.

"அப்பா ஒரு வீட்டை வாங்கப் போறாராம்." அம்மா என்னிடம் சொல்கிறாள்.

"எங்கையாம்?"

"வெள்ளவத்தையில."

"ஆ! அது நல்ல இடம். எனக்கு பள்ளிக்கூடத்துக்கும் கிட்ட. நடந்தே போயிடலாம்."

அம்மா என் கன்னத்தில் கிள்ளுகிறாள்.

என்னுள் ஒரு சந்தேகம். "வீடு வாங்க அப்பாட்ட எங்க காசு? மாசச் சம்பளம் இருபது நாளைக்கே போதாது எண்டு அப்பா கத்துவார்."

"என்ர சீதனக் காசு வட்டியும், குட்டியும் போட்டு இப்ப எட்டு லட்சமாகிட்டுது."





"அந்த காசு முழுவதையும் வீட்டுக்குள்ள போட்டால் கடைசியில எங்களிட்ட ஒண்டுமே இருக்காதே."

"உண்மைதான்டா. ஆனால், வீடு என்ட ஒண்டு வேணுமே. எத்தனை நாளைக்கு வாடகை வீட்டில இருக்கிறது? எங்களுக்கெண்டு சொந்தமான ஒரு வீடு வேண்டாமா?"

"வேணும் தான். எல்லாமாக எவ்வளவு செலவழிக்கப் போகிறாராம்?"

"பதினாறு லட்சம்."

"மீதி எட்டு லட்சத்துக்கு எங்கை போறது?"

"'லோன்' எடுக்க வேணும். அதுக்குத் தான் அங்கை, இங்கை எண்டு ஓடித் திரியுறார்."

அம்மாவின் கருத்தின் ஆழமான அர்த்தம் எனக்குப் புரிய வில்லையோ என்னவோ, நான் வாயை அடக்கிவிட்டேன்.

இரு நாட்கள் கழிய, அப்பா இல்லாத நேரம் மீண்டும் புதிய வீடு பற்றி பேச்சு எழும்பியது.

"அப்பாவுக்குத் தெரிஞ்ச ஒருத்தர் வெள்ளவத்தையில காணி வாங்கி ஒரு '.'பிளட்' கட்டுறாராம். எல்லாமா நாற்பது வீடுகள்..... அதில ஒண்டைத்தான் அப்பா எடுக்கப் போறாராம்."

"எப்ப புது வீட்டுக்குப் போகலாம்?"

"ஆறு மாசமாவது எடுக்கும். இப்ப அரைவாசி கட்டிப் போட்டினம். எல்லாத்தையும் கட்டி முடிக்க ஆறு மாசமாவது எடுக்கும்."

ஆறு மாதங்கள் பொறுத்திருக்க வேண்டுமே என்ற ஆதங்கம் நெஞ்சை உறைத்த போதும், ஏதோ ஒரு விடிவு ஏற்பட்ட உணர்வில் மிதந்தேன். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையில் நிகழும் சச்சரவுகள ஒரு முடிவுக்கு வந்துவிடும் என்ற நம்பிக்கை என்னுள் ஆலவிருட்சமாக படர்ந்திருந்தது.

அதன் பின் அம்மா அமைதியின் அர்த்தமாக விளங்கினாள். அயலில் இருந்து வரும் மூக்கை உருட்டும் நாற்றங்களைச் சகித்தாள். ஈக்களின், நுளம்புகளின் உபாதைகளைத் தாங்கினாள். நாளாந்த வாழ்க்கைக்கு ஊறுவிளைவிக்கும் அமைதியின்மை, கூச்சல்கள், கூப்பாடுகள், அலறல்கள் இத்தியாதி, இத்தியாதிகளை அசட்டை செய்தாள்.

தினக் 'கலண்டரை' எந்நேரமும் நோக்கினாள்.

ஆறு மாதங்களின் நிறைவு மிகவும் வேகத்துடன் முழுமை அடைந்துவிட்டதாகவே எனக்குத் தோன்றியது. அம்மாவுக்கு எப்படியோ?

அப்பா சொன்னார்: “இன்னும் ஒரு மாசம் பொறுக்க வேணுமாம்.”

“ஏனாம்?” அம்மா கேட்டாள்.

“வீடு இன்னும் கட்டி முடிய இல்லையாம். ‘ஃபொரினில’ இருந்து ‘பாத்ரூம் ஃபிட்டிங்ஸ்’ வர வேணுமாம்.”

அம்மா எதையோ சொல்லி நாளெல்லாம் முணுமுணுத்ததை அவதானித்தேன்.

ஒரு மாதம் கழிய ஒரு மாலைப்பொழுது அப்பா மகிழ்ச்சியுடன் வந்தார்.

“வீட்டைக் கட்டிப் போட்டினம். நல்ல நாள் பார்த்து குடிபூரலை வைக்கலாம்” என்கிறார்.

அம்மா பஞ்சாங்கத்தை இரண்டு நாட்களாகப் புரட்டினாள். மிக விரைவிலேயே குடிபூரலை வைப்பதற்கு நல்ல நாள் இருக்க வில்லை. அம்மாவுக்கு புதிய வீட்டுக்கு சீக்கிரமே போய்விடவேண்டும் என்ற நிரம்பிய ஆசை, ஆர்வம். நல்ல நாள் என்றால் இரண்டு மாதங்கள் பொறுக்க வேண்டும். அதற்கு ஏற்ற மனோநிலை அவளிடம் இல்லை. பொது நாள் ஒன்றை நல்ல நாளாக நிர்ணயித்தாள்.

அப்பா குடிபூரலின் முன் வீட்டுக்கு கூட்டிக் கொண்டு போனார்.

கடற்கரையோரமாக நான்கு மாடிகளைக் கொண்ட குடியிருப்புத் தொகுதி அது. ஒவ்வொரு தளமும் பத்து வீடுகளை அடக்கியிருந்தது. கீழே வாகனத் தரிப்பிடமும் காணப்பட்டது.

எமது வீடு நான்காவது மாடியில் இருந்தது. ஒவ்வொரு படியாக ஏறும் போது வாழ்க்கையின் ஏதோ உச்சியை அடையப் போகிறோம் என்ற உணர்வே தலை நீட்டியிருந்தது.

அம்மாவுக்கு மேல் மூச்சும், கீழ் மூச்சும் வாங்கியது. நெற்றியில் வியர்த்துக் கொட்டியது. அவளுக்கு சற்றுப் பெருத்த சரீரம். அப்பா எவ்வித களைப்புமின்றி ஏறிவிடுகிறார். இரண்டு படிகளுக்கு ஒரு கால் என்ற கணக்குப் படி ஏறிவிடுகிறேன்.





அப்பா கதவைத் திறந்தார். கண்களை உட்செலுத்த அந்தச் சுவர்களின் நிறம், நிலத்தின் ‘மொஸைக்’ தளம், ஜன்னல்களின் சாம்பல் நிறக் கண்ணாடிகள், தொங்கிக் கொண்டிருந்த வர்ண மின்விளக்குகள்..... சகல சடப்பொருட்களுமே எமது கண்களுக்கு விருந்து படைக்கின்றன.

“இது ‘ஹோல்’..... அது ‘மாஸ்டர் பெட்ரூம்’..... இது இன்னொரு ‘பெட்ரூம்’..... அங்கால இருக்கிறது குசினி..... அது ‘பாத்ரூம்’.... இதில உடுப்பு காயப்போடலாம்..... குப்பையை இதுக்குள்ளால போட வேணும்...... இந்தப் பக்கம் இருக்கிற ஜன்னலை திறந்தால் காற்று ஜில் எண்டு வீசும்.....” அப்பா சொல்லிக் கொண்டு போக, அம்மா முகத்தில் பூரிப்பு!

ஜன்னலினூடாக வெளியே பார்க்க மிக அமைதியாகக் கிடக்கும் கடல், நீலத்தை மெலிதாகப் பூசியிருப்பது தெரிகிறது. காற்றுக்கு தென்னை மரங்கள் சலசலக்கின்றன. ‘ரயில் ஒன்று ‘விருட்’டென்று பறக்கிறது. மற்ற ஜன்னலினூடாக வெளியே பார்வையைச் செலுத்த பள்ளிவாசல் ஒன்று தெரிகிறது. அதைச் சுற்றி வீடுகள். இன்னொரு ஜன்னலினூடாக நோக்க, காலி வீதி தெரிகிறது. வாகனங்கள் நிரையாக ஊர்ந்து செல்கின்றன. என்னுள் இன்ப அலைகள் மோதி, என்னைத் திக்கு முக்காட வைக்கின்றன.

முன் கதவைத் திறந்து வெளியே பார்க்கிறேன். எதிர்ப்புறம் கதவு திறந்து கிடக்கிறது. உள்ளே பார்க்கிறேன். ஓர் அழகிய பெண்! வயது முப்பதுக்குள் அடங்கும். ‘ஜீன்ஸ்’டன்’, மிக கவர்ச்சியாக நிற்கிறாள்.

என்னைக் கண்டவள், புன்னகைக்கிறாள். கண்களால் அழைப்ப விடுக்கிறாள். செல்கிறேன்.

“நீங்களா இந்த வீட்டுக்கு வரப்போறீங்க?” குரலில் மென்மை.

‘ஓமோம்’ என்று தலையாட்டுகிறேன். அவளிடம் இருந்து நறுமணம் வெளிப்படுகிறது.

“அப்பாவுக்கு பெயர் என்ன?”

சொல்கிறேன்.

“உங்கட குடும்பத்தில எத்தனை பேர்?” என்று ஆரம்பித்து நிறைய விசாரணைகள். எல்லாவற்றுக்கும் பதில் அளிக்கிறேன்.

அவளுக்கு பெயர் மாலினி. துணைக்கு ஒரு வேலைக்காரி மட்டுமே இருந்தாள். ஆண் துணை அறவே இல்லை என்பதை பேச்சுவாக்கில் புரிந்துகொண்டேன்.

புதிய வீட்டில் குடிபுகுந்துவிட்டோம்.

குடிபூரலுக்கு அப்பாவின் அலுவலக நண்பர்கள், எமது கிட்டிய உறவுக்காரர் என்று ஐம்பது பேர் அளவில் வருகை தந்திருந்தனர். ஆளாளுக்கு பரிசுப் பொருட்களை நீட்டினர். சின்னதொரு விருந்தை அப்பா படைத்தார். எல்லோருமே வீட்டையும், வீடு இருந்த சூழலையும் புகழ்ந்து விட்டுச் சென்றனர்.

முன் வீட்டு மாலினி 'அன்ரிக்கு' அழைப்பு விடுக்கப்படவில்லை. ஆனால், அவள் அடிக்கடி எங்கள் வீட்டில் பார்வையைப் பதித்திருந்தாள்.

நாட்கள் நகர சில மரத்தளபாடங்கள் வந்து இறங்கின. அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றக்கூடியதாக இருந்தது.

அம்மாவின் சில காரியங்களிலும் சுறுசுறுப்பு. முகத்தில் களை பரவி இருந்தது. எங்களுடன் சிரித்துச் சிரித்துக் கதைத்தாள். அப்பாவுக்கும், அம்மாவுக்கும் இடையில் சச்சரவுகள் இடம்பெறவில்லை. ஒரு சுமூகமான சூழ்நிலை அங்கு நிலவியது.

அப்பா இல்லாத வேளை கீழ் மாடியிலிருந்து அன்னபூரணம் 'அன்ரி', பக்கத்தில் வாழ்ந்த வாயில் பெயர் புகாத 'அன்ரி' என்று நிறையப் பேர் வீட்டுக்கு வந்து அம்மாவுடன் கதைப்பார்கள். அம்மா தனது யாழ்ப்பாண அனுபவங்களை அவர்களுக்கு விபரிப்பாள். அவர்கள் நிறைய நகைச்சுவைச் சமாச்சாரங்களை அவிழ்த்து விடுவார்கள். ஒரே சிரிப்பும், கும்மாளமும் தான்.

எனக்கு அவர்களது கதை பிடிக்காது அந்நேரங்களில் மாலினி 'அன்ரி'யின் வீட்டுக்குப் போய் விடுவேன். 'டேய்', 'கண்ணா', 'கள்ளா' என்ற வார்த்தைப் பிரயோகங்களைக் கபடமில்லாது உபயோகித்து, என்னை விளிப்பாள். என் முதுகில் குத்துவாள். தொடையில் கிள்ளுவாள். ஒரு முறை கிள்ளிய போது வலிக்கவே, 'போடி' என்று சொல்லி விடுகிறேன். அவள் கோபப்படவில்லை.

அவள் அந்த வீட்டில் தனியாக இருந்தது தான் எனக்கு புதுமையான விடயமாகத் தோன்றியது. அதுவும் அந்த வேலைக்காரி என்னைக் கண்டால் குசினிக்குள் போய் முடங்கிவிடுவாள். ஒரு நாள் என்னால் பொறுக்க முடியவில்லை. "உங்களுக்கு 'அங்கிள்' இல்லையா?" எனக் கேட்கிறேன்.

அவள் புன்னகைக்கிறாள். பதில் அளிக்கவில்லை.

"சொல்லுங்க 'அன்ரி'....."





"இருந்தார். இப்ப இல்லை....."

"எங்க போயிட்டார்? கனடா? ஒஸ்திரேலியா?"

"ஒரு இடமும் இல்லை. என்னை விட்டுட்டு ஓடிட்டார்."

ஓ.....! நான் மேலும் ஒன்றும் கேட்கவில்லை.

மாலினி 'அன்ரியைத்' தேடி பலர் வருவதை நான் அவதானித்துள்ளேன். ஒவ்வொருவரும் ஒவ்வொரு தினுசானவர்கள். விருந்தினர் யாராவது வந்தால் மாலினி 'அன்ரி' என்னை அன்புடன் துரத்திவிடுவாள். "போகமாட்டன்" என்று அடம்பிடித்தால், 'ப்ரிஜ்ஜில்' இருந்து 'எதையாவது' எடுத்துத் தந்து அனுப்பிவிடுவாள். அதன் பின் முன் கதவு மூடப்பட்டிருக்கும். மணியை அடித்தாலும் வந்து திறக்கமாட்டாள்.

அவளைத் தேடி வருபவர்கள் யார்? அவள் ஏன் என்னைத் துரத்துகிறாள்? ஏன் கதவு மூடப்படுகிறது?

இரவு வேளைகளில் நித்திரையை பின்போட்டு விட்டு, விடையை அறிய முயல்வேன். ஆனால், அந்த விடலைப் பருவத்தில் என்னால் துலாம்பரமான ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. அது அப்படித்தான் என்று என்னை நானே சமாதானப்படுத்தினேன்.

என்றோ ஒரு நாள் மதியம் வேளை அம்மா தூங்கிக் கொண்டிருந்தாள். எனக்குத் தூக்கம் வரவில்லை. செய்வதற்கு ஒன்றும் இருக்கவில்லை. மாலினி 'அன்ரியின்' வீட்டுக்குப் போனால் என்ன என்று யோசிக்கிறேன். இரண்டு நாட்களாக அவளைச் சந்திக்க வில்லை. ஏதோ ஒரு சாகசக் கதையை சொல்லிக் கொண்டிருக்கும் பொழுது, யாரோ ஓர் அன்னியர் வர, அவள் என்னை 'சொக்கிலேட்' நீட்டி அனுப்பிவிட்டாள். அந்தக் கதையின் மீதியைக் கேட்க வேண்டும் என்ற ஆர்வம் கிளர்ந்தெழ, முன் கதவைச் சாத்திவிட்டு வெளியே செல்கிறேன்.

மாலினி 'அன்ரியின்' வீட்டு முன் கதவு மூடப்பட்டிருந்தது. தள்ளிப் பார்க்கிறேன். திறந்து விடுகிறது. எதிர்பார்க்கவில்லை. உள்ளே செல்கிறேன். முதலில் தெரிந்த அறையில் அவள் இல்லை. அடுத்த அறைக்குச் செல்ல, அங்கே நான் கண்ட காட்சி..... கட்டிலில் அப்பாவும், மாலினி 'அன்ரியும்'.....

என் அடி வயிறு பகீரென்றது. காதுகளில் அறைந்தது போன்ற உணர்ச்சி. என்னால் அங்கு நிற்க முடியவில்லை. அங்கிருந்து விலகி விடுகிறேன். இருவருமே என்னை அவதானிக்கவில்லை.

எனது அறைக்கு வந்துவிடுகிறேன். அந்தக் காட்சி திரும்பவும், திரும்பவும் என் மனத்திரைக்குள் காட்சி தருகின்றது. அது என்ன, எப்படி, ஏன் என்று நிறையக் கேள்விகள்.

அம்மாவிடம் செல்கிறேன். அவள் சுகமாகப் படுத்திருக்கிறாள். உதடுகளில் சிறிய புன்னகை. அந்த முகத்தில் தான் எத்தனை சாந்தம்!

மாலினியின் வீட்டில் கண்டதை அம்மாவிடம் எடுத்துரைப்பதா? அதை அப்படியே வெளியிட்டால் ஒரு பூகம்பமே வெடிக்கும். இருவருக்கும் இடையில் சச்சரவு மூளும். தகராறு முற்றும். இருவரும் பிரியும் சூழ்நிலையும் உருவாகும். அம்மாவும், நானும் ஒரு பக்கம், அப்பா இன்னொரு பக்கம் என்ற மாதிரி..... அப்பா எங்களை விட்டுப் போய்விடலாம். நாம் தனித்து விடப்படுவோம். வாழ்க்கையின் செழுமையை உணர முடியாமல்..... அப்பாவின் பாசத்தை இழந்து ..... அக்கம் பக்கத்தில் உள்ளவர்களின் கேலிப்பேச்சுக்கு ஆளாகி..... அப்படி ஒரு நிலையில் வாழமுடியுமா? முடியாது, முடியவே முடியாது.

இதுக்கு மாற்று வழி என்ன? அந்த பிஞ்சு வயதில் எனக்கு ஒன்றுமே தோன்றவில்லை.

அதன் பின், அந்த வீட்டை விட, சேரிப்புறத்தில் இருந்த வீட்டில் வாழ்வதே உத்தமம் என்று எத்தனை நாட்கள் அம்மாவுடன் வாதிட்டிருப்பேன்!

*(அமைச்சுக்களுக்கிடையிலான உத்தியோகத்தர்கள் மத்தியில் கலாசார சமய அலுவல்கள் அமைச்சு 1999இல் நடத்திய சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது.)*



# மலர் வளையத்திற்கும் வாசமுண்டு

களுத்துறை சிறைச்சாலையில் இருந்து கனகசபையை விடுதலை செய்து விட்டார்கள்.

"உன்னை ஏன் தான் கைது செய்து யாழ்ப்பாணத்தில் இருந்து களுத்துறைக்கு கொண்டு வந்தார்களோ என்று தெரியவில்லை. அநியாயம், அக்கிரமம். அரசாங்கப் பணத்தில் சிறிதளவை ஏப்பம் விட்டுட்டாய்" என்று தலைமை அதிகாரி பிரேமரத்ன அவனைக் கேலி கலக்க தூஷித்த போது.........

கனகசபைக்கு கடும் கோபம். பிரேமரத்னவின் கழுத்தை நெரித்து விட வேண்டும் என்ற ஆழமற்ற கொலை வெறி. 'அடோ, ஏன்டா என்னைப் பிடிச்சு வந்தீங்கடா. என்ர விளைச்சல் பாழ். என்ர சமூக வாழ்வு பாழ். என்ர குடும்ப கௌரவம் பாழ். என்னையும், என்ர குடும்பத்தையும் அநியாயமாகப் பிரிச்சுப் போட்டீங்களடா' என்று பிரேமரத்னாவை ஏச வேண்டும் என ஆவேசம் அவனுள் கிளர்ந்தெழுந்த போதும், அதனால் ஒரு பிரயோசனமும் ஏற்படப் போவதில்லை என்று அவனுக்குப் புரிந்தது. வெறுமனே உணர்ச்சியற்ற புன்னகை ஒன்றை அவன் இலேசாக உதிர்க்க, அவன் உள்ளத்தினுள் கிடந்த அப்பாவித்தனத்தை தனது அனுபவத்தின் வாயிலாக அறிந்தவர் போல, அவன் முதுகில் பிரேமரத்ன தட்டிக் கொடுத்தார்.

"கவலைப்படாதே. உனக்கு இப்பொழுதாவது விடுதலை கிடைத்தது. அது நீ செய்த புண்ணியம். இங்கு எந்தவொரு விசாரணையும் இன்றி, உனது வயதை ஒத்தவர்கள் வருடக் கணக்காக கிடக்கிறார்கள். நீ அதிர்ஷ்டசாலி. இன்று போயா தினம். கொழும்புக்கு போகும் வழியில் களுத்துறை மகா போதியைக் காண்பாய். புத்த பெருமானை மனதாரவாவது வழிபடு."

கனகசபை மௌனத்தின் தற்குறியாக நின்றான். மங்களத்தின், பிள்ளைகளின் பரிதாப முகங்கள் தான் அவன் மனதை அரைத்தன. அவன் துணையின்றி, ஒரு வருமானமுமின்றி அவர்கள் என்ன பாடுபட்டிருப்பார்கள்?

கனகசபை கைது செய்யப்பட்ட போது, அவன் பயிர்கள் அறுவடைக்கு தயாராகி இருந்தன. வரணியில் மூன்று ஏக்கர் நிலத்தில் கனகசபை நெல் விதைத்திருந்தான். புதிய பூமி

செழித்திருந்தது. நல்ல விளைச்சல். மங்களம் பூரிப்பில் மிதந்தாள்.

"கொழும்பில, அந்த சேரிப்புறத்தில அரைவயிறும், கால்வயிறுமாகக் கிடந்து உழைக்கிறதை விட, இப்படி விளைச்சலைப் பெருக்கி, அதில வாற ஆதாயத்தில வாழ்றது எவ்வளவு சந்தோஷம்....." என்று காற்றின் வேகத்திற்கு வளைந்தும், நிமிர்ந்தும் கண்களுக்கு ரம்மியத்தை ஊட்டிய நெற்கதிர்களில் மனதைப் பறிகொடுத்தவண்ணம் மங்களம் கூற, கனகசபை வெள்ளையாகச் சிரிக்கிறான்.

"மாரி மழை சரியாகப் பெய்ய வேணும். நேர காலத்திற்கு விதைக்க வேணும். பயிரை கிருமி, பூச்சி தாக்காமல் இருக்க வேணும். தேவையான அளவு உரம், தேவையான நேரத்தில கிடைக்க வேணும். இடைநடுவில வரட்சி வரக்கூடாது. அப்பத் தான் நல்ல விளைச்சலை எதிர்பார்க்கலாம். ஏதாவது ஒண்டு பிழைச்சால்..... ஆதாயமும் இல்லை. போட்ட முதலும் இல்லை...... கொழும்பிலையே வேலை பார்க்கலாம் எண்ட நினைப்புத்தான் அப்ப வரும்" என்று புன்னகை மாறாமல், கனகசபை கூறுகிறான்.

"கொழும்பில வேலை? இஞ்சருங்கோ. இனியும் கொழும்புக்கு போறதை கனவிலையும் நினைச்சுப் பார்க்காதேங்கோ. ஒருக்கால் அங்க கிடந்து பட்ட பாட்டை நீங்கள் தான் சொன்னனீங்க. நுளம்பு ஒரு பக்கம், கொசு இன்னொரு பக்கம், நாத்தம் மற்றொரு பக்கம்..... விளைச்சல் எங்கட கையைச் சுடமாட்டாது எண்டு எனக்கு ஒரு நம்பிக்கை இருக்குது. நாங்கள் எல்லாரும் ஒரு இடத்தில இருக்கிறது தான் எனக்குச் சந்தோஷம்." மங்களம் நிறையவே வார்த்தைகளுக்கு அழுத்தம் கொடுத்திருந்தாள்.

"உம்மட நம்பிக்கை வீண் போகாது. கொஞ்சக் காலத்துக்கு கொழும்பை மறப்பம்."

இருட்டிக் கொண்டு வர, "போவமே?" என மங்களம் கேட்கிறாள்.

"சரி......"

மங்களத்தை 'சைக்கிளில் டபிள்' ஏற்றிக் கொண்டு கனகசபை வருகிறான். வழியில் - அந்த அரை இருளில் அவள் இடையில் கிள்ளுவதும், கீச்சு மூச்சுக் காட்டுவதும்....... மங்களம் அடக்க முடியாமல் பலமாகச் சிரிப்பதும்........

அன்றிரவு அவன் நெஞ்சில் அவள் தலை வைத்து படுத்திருக்கையில், வயலில் நடத்திய சம்பாஷணைக்கு உரமிடுகிறாள். அவள் கூற்றின் சாதக, பாதகங்களை அவன்





அலசவில்லை. அவன் வேறோர் உலகில் லயித்திருந்தான்.

நள்ளிரவான போது தான் இருவரும் தூக்கத்தை எட்டிப் பார்த்தார்கள்.

விடிகாலை அவள் 'பதைபதை'ப்புடன் கண் விழிக்கிறாள். கெட்ட கனவு ஒன்று அவள் தூக்கத்தைக் குழப்பிவிட்டது. அவள் நிமிர்ந்து சுற்றும், முற்றும் பார்க்கிறாள். அவன் விழித்து விடுகிறான். 'என்ன, ஏது' என்று விசாரிக்கிறான்.

"இஞ்சருங்கோ, ஒரு கெட்ட கனவு கண்டனான். நல்லா பயந்திட்டன்" என்றவள், அவனை மெலிதாக அணைக்கிறாள்.

"கெட்ட கனவோ? சொல்லுமன்."

அவள் சொல்லத் தயங்குகிறாள்.

"சொல்லுமன்........."

"உங்களை 'ஆமி'க்காரங்கள்......."

"சொல்லுமன்......"

"அதை என்னெண்டு இந்த வாயால சொல்லுவன்....." என்றவள் விம்முகிறாள்.

அந்த விம்மலின் அர்த்தம் அவனுக்குப் புரிகிறது. "பயப்படாதையும். அப்படி ஒண்டும் எனக்கு நடக்காது."

"எனக்கெண்டால் பயமாக இருக்குது."

"நான் அரைக் கிழவன். வயசு நாற்பதாகுது. என்னை ஒண்டும் செய்யமாட்டினம்."

கனகசபை உறங்கி விட்டான். மங்களத்தை தூக்கம் அரவணைக்கத் தவறியது. அவள் உள்ளம் வேதனையில் ஊறியிருந்தது.

விடிந்துவிட்டது. அக்கம், பக்கத்தில் உள்ள நாய்கள் விடாமல் குரைத்தன.

வீதியில் 'பூட்ஸ்'களின் ஒலி.......

கனகசபை எழும்பி, ஜன்னலினூடாக பார்வையை வெளியே ஓட விடுகின்றான்.

வீதியில் இராணுவத்தினரின் சிலமன் தென்படுகிறது.

கனகசபையின் நெஞ்சு 'திக்'கென்றது. மங்களம் கூறியவைகள் நினைவுக்கு வர, பயம் நீட்டி நிமிர்கிறது.

மங்களமும் எழுந்துவிடுகிறாள். வீதியில் நின்ற இராணுவ வீரர்களை அவள் காண்கிறாள். "'ஆமி'......" என்று கத்தியே விடுகிறாள்.

"சத்தம் போடதையும்....."

அவளுள் கலவரம் முளைத்துவிடுகிறது. கனகசபையின் கையை வாஞ்சையுடன் பற்றி, தன் பக்கம் இழுக்கிறாள்.

நான்கு இராணுவ வீரர்கள் இவர்களின் வீட்டினுள் பிரவேசிக்கிறார்கள். வீடு முழுவதையும் சுற்றிப் பார்த்தார்கள். இதற்கிடையில் மூத்தவள் தாரிணியும், இளையவள் சுமதியும் எழுந்து விட்டனர். இருவரையும் பத்து வயதுக்குள் அடக்கலாம். இராணுவ வீரன் ஒருவன் வெகு சுவாரஷ்யமாக அவர்களை நோக்கினான்.

இராணுவ வீரர்கள் கட்டில்களைப் புரட்டிப் புரட்டிப் பார்த்தார்கள். மேசை லாச்சிகளைத் துருவினார்கள். அலுமாரிகளில் கிடந்த உடுப்புக்களை வாரி இறைத்துப் போட்டார்கள்.

மங்களம் எல்லாவற்றையும் பதறிய நெஞ்சுடன் பார்த்தபடி நின்றாள். கனகசபை சினத்தின் உச்சியில்........

வீட்டைச் சோதனையிட்ட பின், கனகசபையை விசாரித்தார்கள். நிறைய கேள்வி கேட்டான் ஓர் இராணுவ வீரன். அவன் ஒரு 'சார்ஜன்ட் மேஜர்' என்பதைப் பிற்பாடு கனகசபை அறிந்தான்.

"கொழும்பில் எங்கு வேலை செய்தாய்?" ஒருமையில் விளித்து 'சார்ஜன்ட் மேஜர்' அவன் தாய்மொழியில் கேட்டான்.

தனியார் நிறுவனத்தின் பெயரைச் சொல்லி, அங்கு பணி புரிந்ததாகக் கூறுகிறான்.

"அங்கு எங்கு தங்கியிருந்தாய்?"

"கிராண்ட்பாஸில் சிறிபாலபுர என்று ஒரு சேரிப்புறம் இருக்கிறது. அங்கு தான்."

'சார்ஜன்ட் மேஜர்' வீட்டை ஒரு முறை அநாகரீகமாக நோட்டமிடுகிறான். "நீ ஒரு கௌரவமானவன் போல தோற்றமளிக்கிறாய். வீடும் வசதியாக இருக்கிறது. ஏன் அந்த சேரிப்புறத்தில் தங்கி இருந்தாய்?"

"உண்மைதான். இது வசதியான வீடு. நான் கௌரவமானவன் தான். ஆனால், எனக்கு கொழும்பில் கிடைத்த சம்பளத்தில் ஊருக்குப்





பணம் அனுப்புவதென்றால் என்னால் வசதியாக வாழமுடியாது. சேரிப்புறத்தில் வாழ்ந்தால் தான் பணத்தை அனுப்பலாம். அதனால் அங்கு வாழ்ந்தேன்."

"பொய், நான் நம்பமாட்டேன். நீ ஒரு ஒற்றன். இல்லாவிடில் 'குடு'காரரும், 'கஞ்சா'காரரும் வாழும் அந்த இடத்தில் தங்கியிருக்க மாட்டாய். பணத்தை மீதப்படுத்தி, ஊருக்கு அனுப்ப வேண்டும் என்பதற்காக உனது ஆத்ம கௌரவத்தை நீ இழக்க விரும்பமாட்டாய்."

தனது விதியை அந்த 'சார்ஜன்ட் மேஜர்' புதுவிதமாக நிர்ணயிக்கப் போகிறான் என்று கனகசபைக்குப் புரிகிறது. "'சேர்'" என்று விளித்து, தனது பக்க நியாயத்தை அவன் எடுத்துரைத்தான். ஆனால், 'சார்ஜன்ட் மேஜர்' அவற்றைக் கவனத்தில் எடுக்கத் தவறினான்.

**ம**ங்களம் விம்மி அழ, பிள்ளைகள் கண்ணீர் மல்க, இராணுவத்தினர் கனகசபையை 'ட்ரக்'கில் தூக்கிப் போட்டார்கள். "நான் அப்பாவி. எனக்கு ஒன்றும் தெரியாது" என்று கனகசபை வாதாடிய போதும், இராணுவத்தினரின் மனம் கரையவில்லை. அவனை மேல் விசாரணை என்று கூட்டிச் சென்றுவிட்டார்கள்.

பருத்தித்துறை முகாமில் விசாரித்தார்கள். அவர்கள் திருப்தி கொள்ளவில்லை. யாழ்ப்பாண நகரிலும் விசாரணை நடத்தினார்கள். அவர்களுக்கு பதில் சொல்லியே அவனுக்கு அலுத்துவிட்டது. இறுதியாக, "நீ பயங்கரவாதி தான்" என்ற நாமத்தை சூட்டியவர்கள், காங்கேசன்துறைக்கு கூட்டிச் சென்று, கப்பலில் ஏற்றிவிட்டனர்.

கப்பலில் நிறைய இளவயதினர். ஆண்கள், பெண்கள் என்ற பால்நிலை பாகுபாடு இல்லை. யாவரும் புலி சந்தேக நபர்களாம். கனகசபையை எல்லோரும் விசித்திரமாக நோக்கினார்கள். "அண்ணே பாவம்" என்று பலர் நக்கலும் செய்தார்கள்.

கனகசபை ஒரு வார்த்தை கூட ஒருவருடனும் அளவளாவவில்லை. வேதனையின், ஆத்திரத்தின் உச்சியில் நின்று அவதியுற்றான். அவனுள் பழி வாங்கும் உணர்ச்சி நிரம்பி வழிந்தது. ஆனால், அவ்வுணர்ச்சியை வெளிப்படுத்துவதனால் ஏற்படும் எதிர்மறையான நிகழ்வினை எண்ணி, அவன் மௌனத்தினுள் நுழைந்தான்.

இரு நாட்கள் கழிய கனகசபையும், இளைஞர்களும் களுத்துறை சிறைச்சாலையில் அடைக்கப்பட்டனர். எல்லோரையும் விட கனகசபையே அங்கு வேதனையில் திகழ்ந்தான். முதல் நாள் ஒருவருடனும் அவன் பேசவே இல்லை. இரண்டாம் நாள்தான் அவன்

வாலிபன் ஒருவனுடன் அளவளாவினான். அந்த வாலிபனும் கனகசபையின் ஊர்தான். 'ஏ.எல்' பரீட்சையை முடித்த பின், வேலை வெட்டி இன்றிக் கிடந்தான். இராணுவ வீரர்கள் கேட்ட கேள்விகளுக்கு அவனால் ஒழுங்காகப் பதில் அளிக்க முடியவில்லை. அவன் திக்குவாயன் என்பதே அதற்கான காரணமாகும். இராணுவத்தினருக்கு சந்தேகம் வந்துவிட்டது. சந்தேக நபர்களில் அவனையும் சேர்த்து விட்டனர்.

அவனுடன் அளவளாவிய போது கனகசபைக்கு அது ஒரு புது அனுபவமாக இருந்தது. திக்கித் திக்கி அவன் அளவளாவிய போது, பரிதாபமாகவும் இருந்தது.

மற்றைய இளைஞர்கள் இடையிடையே கனகசபையுடன் அளவளாவினார்கள். அரசியலையிட்டு கருத்துப் பரிமாறினார்கள். இயக்கங்களின் வரலாறுகளை அலசினார்கள். மனித உரிமைகள் பற்றி ஆராய்ந்தார்கள். இடையிடையே சினிமாவையும் கலந்தார்கள்.

இரவு வேளைகளில் கேட்கும் அலறல் சத்தங்கள் கனகசபையின் மனதினுள் அமைதியின்மையைத் திணித்துவிடும். அங்குள்ள இளைஞர்களில் சிலரை விசாரணைக்கென்று கூட்டிச் சென்று, அவர்களைச் சித்திரவதை செய்கிறார்கள் என்பதைக் கனகசபை புரிந்தான். இவ்வாறான ஓர் இழிநிலைக்கு தானும் முகம் கொடுக்க வேண்டுமா என்ற சஞ்சலமும் அவனுக்குள் நுழைந்து, அவன் மனதை உருட்டிப் பிரட்டியது.

மங்களத்தின், பிள்ளைகளின் நினைவுகள் அடிக்கடி கனகசபையின் மனத் திரையைத் தட்டி, அவன் உணர்ச்சிகளைக் கசக்கிப் பிழிந்தன. இனி அவர்களை எப்பொழுது காண்பேனோ என்றெல்லாம் உருகினான். தனது துணை இல்லாமல் அவர்கள் என்ன பாடுபடுகிறார்களோ எனக் கலங்கினான். வருமானம் ஒன்றும் இல்லாமல் ஒவ்வொரு நாட்களையும் கழிப்பதற்கு மங்களம் என்ன செய்வாள் என்றெல்லாம் எண்ணினான்.

ஒரு தடவை அவன் கொழும்பில் வேலை செய்த போது ஊருக்குப் பணத்தை அனுப்பச் சற்றுத் தாமதமாகிவிட்டது. அச்சமயத்தில் ஊரிலும் பணத்திற்குத் தட்டுப்பாடு. மங்களம் தனது காப்புக்களை அடகு வைத்து, பணத்தைப் புரட்ட முயன்றாள். ஆனால், எவருமே கடன் கொடுக்க மறுத்துவிட்டார்கள். இறுதியில் வேறு வழியின்றி காப்புக்களை விற்பதற்கு முடிவெடுத்திருந்தாள். நல்ல வேளையாக கனகசபை அனுப்பிய பணம் வந்து சேர, அவள் தனது தீர்மானத்தைக் கைவிட்டாள்.





இந்தத் தடவை அவனால் பணம் அனுப்ப இயலாது. அவனுக்கு ஒரு வருமானமும் இல்லை. அவன் இன்னும் அந்தச் சிறைக்கூடத்தில் எவ்வளவு காலம் இருக்கவேண்டும் என்று அவனுக்கே தெரியாது. அவனுக்கு விடுதலை கிடைத்து, மீண்டும் ஒரு தொழில் கிடைத்தால் தான் வருமானம் கிட்டும். அதில் ஒரு பகுதியைத் தான் மங்களத்திற்கு அனுப்பலாம்.

எப்பொழுது அவனுக்கு விடுதலை கிடைக்கும்? மூன்று மாதங்கள் கடந்த போதும் அவனுக்கு விடுதலை கிட்டவில்லை. 'விசாரணை முடிந்த பின் உன்னை அனுப்பிவிடுவோம்' என்று சிறைச்சாலை உத்தியோகத்தர் ஒருவர் சொன்னார். அவருக்கு சிறிதளவு தமிழ் தெரிந்திருந்தது. அவருடன் கனகசபை தமிழில் உரையாடினான். 'தர்மே மாத்தையா' என்று எல்லோரும் விளித்ததினால், கனகசபையும் அவ்வாறே அழைத்தான்.

அவர் தான் அவனுக்கு வெளியுலகில் நடக்கும் புதினங்களை வெளியிடுவார். உள்ளூர் புதினங்களை வடிகட்டாமல் சொல்வார். அங்கு தாக்குதல், இங்கு தாக்குதல், இத்தனை 'ஆமிக்காரர்' பலி, அத்தனை புலி இயக்கத்தினர் பலி என்ற தகவலை எல்லாம் எடுத்துரைப்பார்.

அவரிடம் ஒவ்வொரு தடவையும் கனகசபை கேட்கும் கேள்வி, "எப்ப எனக்கு 'ரிலீஸ்'?"

"அது அந்தக் கடவுளுக்குத் தான் வெளிச்சம்." தர்மே அலுக்காமல் கூறுவார்.

ஒரு நாள் மகிழ்ச்சியுடன் வந்தார்.

"உங்களை விடுதலை செய்யப் போகிறார்கள்" என்று அவர் சொல்ல, கனகசபைக்கு மட்டற்ற மகிழ்ச்சி! கண்களில் நீரெல்லாம் வந்துவிட்டது. அன்று முழுவதும் மங்களத்தின், பிள்ளைகளின் நினைவு அவன் மனதைவிட்டு அகலவே மறுத்தது.

ஒரு போயா தினம்.

கனகசபையை விடுதலை செய்துவிட்டார்கள். அங்கிருந்த போது அவனை விசாரிக்காதது தான் அவனுள் புகுந்திருந்த ஆச்சரியங்களில் ஒன்று.

களுத்துறை சிறையில் இருந்து கனகசபை வெளியேறுகிறான். காட்டில் கண்களை கட்டிவிட்ட நிலையில் அவன்.

எங்கு செல்வது?

அவன் கொழும்பில் முன்னர் வேலை செய்த பொழுது சிறிபாலபுர என்ற சேரிப்புறத்தில் ரண்மெனிக்கே என்பவளின் வீட்டில் குடியிருந்தான். அங்கு போவதென முடிவெடுக்கிறான். அங்கிருந்தபடி ஒரு தொழிலைத் தேடுவோம் என நினைக்கிறான். ஊருக்குப் போவதை அவன் விரும்பவில்லை. தொழில் கிடைக்கும் வரை அவனுக்கு சாப்பிடுவதற்கு பணம் தேவைப்படும். கைவிரலில் அணிந்திருக்கும் மோதிரத்தை அடகு வைக்கலாம்.

கொழும்பை அடைந்து சிறிபாலபுரவை அடைகிறான். ரண்மெனிக்கேயின் குடியிருப்பைத் தேடிச் செல்கிறான். தகர விரிப்பு, பலகை, 'ரயர்', 'பொலித்தீன்' உறை என்ற பெயரில் கிடந்த அவள் குடியிருப்பு உருமாறி இருக்கிறது. அது இப்பொழுது கல்வீடாகக் காட்சியளிக்க, அவனுள் ஆச்சரியம் விரிகிறது.

புதுமை உணர்வுடன் கனகசபை வீட்டை அடைகிறான். கதவைத் தட்டுகிறான். ரண்மெனிக்கே வந்தாள். ஆஜானுபாகுவான, கறுப்பு நிறத் தோற்றத்துடன், பார்க்கவே சகிக்க முடியாத கோலத்தில் கிடப்பவள், சற்று வெளிறி இருந்தாள்.

கனகசபையை அடையாளம் கண்டவள், அவனுக்கு வரவேற்பு கொடுக்கிறாள். ஆச்சரியம் கலையாத நிலையில் கனகசபை உள்ளே செல்கிறான்.

அந்தக் குடியிருப்பின் 'ஊத்தையான பண்டங்கள்' யாவும் 'மாயமாகி' இருந்தன. புத்தம் புதிய மரத்தளபாடங்கள், மின்சார உபகரணங்கள் அவனை ஈர்த்தெடுக்கின்றன. வறுமையின் நாற்றம் இல்லை. செல்வத்தின் வாசனையே நிறைய.

ரண்மெனிக்கேக்கு மூன்று புதல்விகள். சுனீதா, சுதர்மா, சுவர்ணசீலி.......

சுனீதா தொலைக்காட்சி நாடகம் ஒன்றில் தலையைக் காட்டி இருக்கிறாள். அவள் போக்கை கனகசபை துப்பறிய, அவள் ஒரு விலைமகள் என்பதை அறிந்துவிடுகிறான். இதெல்லாம் பழைய சங்கதி.

சுதர்மா மத்திய கிழக்கில் கால்களைப் பதித்து விட வேண்டும் என்று துடிப்பவள்.

சுவர்ணசீலி இராணுவத்தில் சேர வேண்டும் என்ற ஆசை கொண்டவள். இடையிடையே கனகசபையை எவ்வித கூச்சமும் இன்றி 'கொட்டியா' என்று பழிப்பாள்.

"'மாத்தையா', என்ன இந்தப் பக்கம்?" ரண்மெனிக்கே குசலம் விசாரிக்கிறாள்.





நடந்தவற்றை எவ்வித ஒளிவுமறைவின்றி சொல்கிறான் கனகசபை. அவன் பேச்சில் அவள் அரைகுறை கவனத்தையே செலுத்தி இருந்தாள். 'யாரோ' ஒரு நடுத்தர வயது மனிதன் வர, அவரை உள்ளே அழைத்துச் சென்றாள். பின்னர் பணத் தாள்களை எண்ணியபடி அவனிடம் வந்தாள்.

"சரி, உங்களுக்கு இப்பொழுது என்ன வேண்டும்" என இறுதியில் கேட்டாள்.

"இங்கு தங்குவதற்கு இடம் வேண்டும்."

"இங்கு?"

"ஆம்"

"ஏன்?"

"உன்னைத்தான் எனக்கு நன்றாகத் தெரியும்."

அவள் கண்மணிகளைப் போட்டு உருட்டுகிறாள். பின், "சரி, இங்கேயே தங்கலாம்" என்கிறாள்.

முன் அறையில் நிறைய தட்டு முட்டுச் சாமான்கள் கிடந்தன. அந்த அறையில் தங்கலாம் என்கிறாள் அவள்.

சுதர்மா வந்தாள். சற்றுப் பெருத்திருந்தாள். அவளிடம் இருந்து செயற்கை வாசமும் வந்தது. கவர்ச்சியான அரைகுறைப் புன்னகையை உதிர்த்தாள். நான்கு சொற்களைக் கொட்டிவிட்டு சென்றாள். நாகரீகத்தின் ஏதோ ஒரு படிக்கட்டில் அவள் நின்றாள்.

சுவர்ணசீலி "'அடோ கொட்டியா'" என்று கத்திக் கொண்டே வந்தாள்.

"உனக்கு இராணுவத்தில் வேலை கிடைக்கவில்லையா?" எனக் கேட்டான் கனகசபை.

"இல்லை. அப்படிக் கிடைத்தால் முதலில் உங்களைத் தான் சுடுவேன்" என்று காட்டமாகச் சொல்லி விட்டுச் சென்றாள்.

"சுதர்மா எங்கே?" கனகசபை கண்களை திசைதிருப்ப, "அவள் மத்திய கிழக்குக்கு போய்விட்டாள்" என்கிறாள் ரண்மெனிக்கே.

"பணம் அனுப்புகிறாளா?"

"இல்லை. ஒரு மாதம் மட்டும் அனுப்பினாள். இப்போது ஒரு சாரதியைக் கலியாணம் முடித்திருப்பதால், எங்களை மறந்து விட்டாள்."

ரண்மெனிக்கேயின் குரலில் சிறிதளவும் வருத்தம் இல்லை.

இரவு பிறக்கத் துடித்தது.

கனகசபைக்கு பசித்தது. அடகுக் கடை ஒன்றுக்குச் சென்று மோதிரத்தை அடகு வைத்து, அதில் கிடைத்த பணத்தில் வயிற்றை நிரப்பிவிட்டு, வீடு வந்தான்.

விறாந்தையில் இரு இளம் பராயத்தினர் அமர்ந்திருந்தனர். அவனை ஒரு தினுசாக நோக்கினர். கனகசபைக்கு அவர்களின் பார்வையின் அர்த்தம் புரியவில்லை. ரண்மெனிக்கே ஓர் இளைஞனை உள்ளே கூட்டிச் சென்றாள்.

கனகசபை தனது அறைக்குச் சென்றான். பழைய, ஊத்தையான கட்டில் ஒன்று கிடந்தது. அதில் சரிந்தான்.

நுளம்புகள் அவனைத் தாராளமாக வட்டமிட்டன. ஒன்றிரண்டு பதம் பார்த்தன. கரப்பொத்தான்கள் பறந்து திரிந்தன.

ஜன்னல் இல்லாத அறை. காற்று இல்லை. வியர்வை உடலெல்லாம் வழிந்தது. முழு உடம்பும் அரிப்பெடுத்தது.

தூக்கம் வர மறுத்தது.

மட்டையை விசிறியாக்கியும் பிரயோசனம் இல்லை.

தாகம் அடிக்கடி எழுந்தது. வெளியே வர நிறைந்த தயக்கம். குகைக்குள் புகுந்துவிட்ட உணர்வு.

இரவெல்லாம் நித்திரை இல்லை. முன் கதவு அடிக்கடி தட்டப்பட்டது. கதவு திறக்கப்படும் சத்தம், மூடப்படும் சத்தம், வரவேற்பளிக்கும் ரண்மெனிக்கேயின் குரல், புதிய குரல்கள்....... 'இருக்கிறாளா', 'எவ்வளவு' என்ற சொற்பதங்கள்......

விடியற்காலை தான் கனகசபை சிறிது தூங்கினான். மீண்டும் கண்விழிக்க ஒன்பது மணியாகிவிட்டது.

வேலை தேடி கொழும்பைச் சுற்றினான். அவன் முயற்சி பயனளிக்கவில்லை.

'செத்த நிலை'யில் வீடு திரும்பினான். மீண்டும் அதே நித்திரையற்ற இரவு.

நள்ளிரவு வேளை 'படபட'வென்று முன் கதவு தட்டப்படும் சத்தம். ரண்மெனிக்கே அலறும் சத்தம். "அடிக்காதீங்க, அடிக்காதீங்க."





"வாடி இங்கே" என்று 'யாரோ' அதட்டுகிறார்கள்.

கனகசபை தலையை வெளியே நீட்டிப் பார்க்கிறான். 'பொலிசார்'! அவனுக்குப் 'பக'ரென்றது.

"டேய்! நீ யாரடா?" என 'இன்ஸ்பெக்டர்' கேட்க, இவன் 'பேந்தப் பேந்த' முழிக்கிறான். பேச்சு தொண்டைக்குள் இறுகிவிட்டது.

எல்லோரையும் 'ஜீப்'புக்குள் ஏற்றினார்கள்.

"டேய்! நீயா இவர்களுக்கு 'மாமா'?" என்று 'இன்ஸ்பெக்டர்' அடிக்கடி கேட்டார்.

கனகசபையையும், வீட்டில் கிடந்த ஒரு வாலிபனையும் ஒரு கூண்டில் அடைத்தார்கள். ரண்மெனிக்கே, சுனீதா, சுவர்ணசீலி ஆகியோரை இன்னொரு கூண்டில் அடைத்தார்கள்.

இரவு இரவாக நுளம்புக் கடி. கரப்பொத்தானின் தாராள வலம் வருகைகள். ஒரே வெட்கை. சிறுநீரின் நாற்றம்.

களுத்துறை சிறைச்சாலையில் இதைவிட சற்று சொகுசாக இருக்கலாம். இனிய தமிழ் வார்த்தைகளைக் கேட்கலாம். திக்குவாய் இளைஞன் தடக்கி தடக்கிப் பேசுவதை சுவாரஷ்யமாக கேட்கலாம்.

ஏன் எனக்கு களுத்துறை சிறையில் இருந்து விடுதலை கிடைத்தது?

கனகசபை ஒரு முறை விம்மி, விம்மி அழுதான்.

•

*(இலங்கைத் தேசிய ஒருமைப்பாட்டுச் செயற்றிட்டப் பணியகமும், "அமுது" சஞ்சிகையும் இணைந்து நடத்திய படைப்பாற்றல் சிறுகதைப் போட்டியில் ஆறுதல் பரிசைப் பெற்றது.)*

# பெண்மையின் மென்மை

'நைட்டி டியூட்டி' முடித்து விட்டு, வீடு திரும்பிய வசந்தனின் உடலும், மனமும் களைத்துவிட்டன.

உடல் உழைப்பைப் பன்னிரண்டு மணித்தியாலங்கள் வரை அந்த இராட்சத இயந்திரங்களுக்கு அர்ப்பணித்திருந்தான். அதிகாலை வேளை, இயந்திரத்தில் சிறிய தவறு ஏற்பட, பத்து மீட்டர் துணி கழிவாகிவிட்டது. அதை 'நைட் சுப்பவைசர்' கண்டுவிட்டான். எவ்வளவு 'பிளாடிகளை' உபயோகித்து வசந்தனை ஏசினான்? வசந்தன் ஒரு வார்த்தை கூட எதிர்த்துப் பேசவில்லை. தலை குனிந்தவன், ஏச்சுக்களைச் செவிமடுத்தபடி மனதினுள் பொருமினான்.

தளர்ந்த நடையுடன் வீடு வந்தவன், முன் கதவைத் தட்டினான். அது திறபடவில்லை. நேரத்தைப் பார்க்க, எட்டு எனக் காட்டியது.

ஜானகி வேலைக்குப் போயிருப்பாள். வழமையாக இந்த நேரத்தில் அவள் வீட்டை விட்டு வெளியேறுவாள். மாற்றுச் சாவியை உபயோகித்து கதவைத் திறந்தான். நேரே சமையல் அறைக்குச் சென்றான். 'பிளாஸ்க்கை' எடுத்து தேநீரை கோப்பையில் ஊற்ற முற்பட, 'பிளாஸ்க்' வெறுமையாகக் கிடக்கிறது.

அவனைச் சினம் பற்றியது. எரிச்சலும் வந்தது. மனதினுள் ஜானகியைத் திட்டியபடி, கேத்தலில் நீரை நிரப்பி, 'காஸ் குக்கரில்' வைத்தான்.

மேசையைக் கண்களால் அலசினான். மூலையில் ஒரு 'ஷொப்பிங் பாக்' கில் அரை இறாத்தல் பாண் தெரிந்தது. ஜானகி வைத்து விட்டுப் போயிருக்கிறாள். கறியைத் தேடினான். மேசையின் மீது எதுவுமே தெரியவில்லை. 'ப்ரிஜ்ஜைத்' திறந்து பார்த்தான். அது வெறுமையாகக் கிடந்தது.

சே! என அலுத்தவனின் கண்களை 'ப்ரிஜ்ஜில்' ஒட்டப்பட்டிருந்த 'நோட்' கவர்ந்தது. 'இண்டைக்கு மத்தியான சாப்பாட்டை ஹொட்டேலில் சாப்பிடுங்கோ. மாலையில் சந்திப்போம், ஜானகி' என்று 'நோட்டில்' எழுதப்பட்டிருந்து.

அதை வாசித்து முடிக்க, மனதினுள் உருவகித்திருந்த சினமும், எரிச்சலும் ஒரு படி மேலேறியது. கோபத்தின் தடயம் மனதினுள் பதிந்தது.





'சமைச்சு வைக்காமல் போயிருக்கிறாளே! பின்னேரம் வரட்டும். ஒரு கை பார்க்கிறன்'. மனதினுள் கறுவியபடி, முட்டை ஒன்றை எடுத்து பொரித்தெடுத்தான்.

தண்ணீர் கொதித்தது. தேநீரைக் கலக்குவோம் என்று முற்படுகையில் கதவு தட்டப்பட்டது. ஆவலுடன் சென்று கதவைத் திறக்க, வெளியே அறிமுகம் இல்லாத ஓர் இளம் பெண், தன் உடல் அழகையும், அழகிய வர்ணங்களையும் பரப்பியவண்ணம் நின்றாள். அவன் கண்களில் ஆனந்தமான வியப்பு, சுவாரஷ்யம், ஒரு வித 'பரபரப்பு'.....

"'மிஸிஸ்' பொன்சேகாவின் வீடு எங்கு இருக்கிறது?" அப்பெண் ஆங்கிலத்தில் கேட்கிறாள்.

பக்கத்து வீட்டைக் காட்டினான் வசந்தன்.

அவள் அசையவில்லை. "நாய் இருக்கிறதா?" எனக் கேட்டாள்.

"இல்லை." அவள் அழகை அவன் அநாகரீகத்துடன் மேய்கிறான்.

'மிஸிஸ்' பொன்சேகா பற்றிய சில தகவல்களைப் பரிசீலித்தாள். காலநிலையையிட்டு குறைப்பட்டாள். அரசியலை அரை குறையாகப் பரிமாறினாள்.

வசந்தனின் மனதினுள் இறுகி இருந்த சினம், எரிச்சல், கோபம் என்று எல்லாமே கரைந்துவிட்டன. அவளிடம் நயத்துடன், நளினத்துடன் தன் கருத்துக்களை வெளியிடுகிறான். அளவுக்கு மீறிச் சிரிக்கிறான். கண்களின் மேய்ச்சலை முன்னேற்றுகிறான்.

வீட்டின் முன்புறத்தில் குடியிருக்கும் 'மிஸிஸ்' சாம்பசிவம் இரு தடவைகள் ஜன்னல் திரைச்சீலையை விலக்கி, வசந்தனைப் பார்த்து கண்மணிகளைச் சுழற்றினாள். அதை வசந்தன் அவதானித்த போதும், தன் செயலுக்கு முற்றுப்புள்ளியிடவில்லை அதைத் தொடர்ந்தான்.

இளம் பெண் மறைந்து விடுகிறாள். அவளை மீண்டும் பார்க்க வேண்டும் என்ற துடிப்பு.......

சோர்வுடன் சமையல் அறைக்குள் பிரவேசிக்க, 'காஸ் குக்கரில்' இருந்த கேத்தல் பொசுங்கிக் கிடந்தது.

'பிளாடி ஷிட்' என்று கத்தியவன், நிலத்தை இரண்டு மூன்று தடவைகள் உதைத்தான். மேசையில் ஓங்கி ஒரு குத்தும்விட்டான்.

ஆத்திரம் அடங்க மறுத்தது. அது எக்காளமிடத் தவித்தது. வாய்கிழிய ஜானகியை ஏச வேண்டும் என்ற வெறி மனதினுள்

துளிர்விட்டு, படிப்படியாக விகாரமடைந்தது. தூய சிந்தனை தடைப்பட்டது. வீட்டைப் பூட்டிவிட்டு, 'விறு விறு' என்று நடந்து சென்று, 'டெலிபோன் பூத்'தை அடைந்தான். ஜானகியுடன் தொடர்பு கொண்டான்.

அவள் 'ஹலோ' என்று சொல்ல சற்றுத் தாமதிக்க ஆத்திரத்தை எல்லாம் கொட்டி ஏசினான். "இவ்வளவு நேரமாக என்ன செய்தீர்?' 'ஏன் மத்தியான சாப்பாட்டை சமைக்க இல்லை?' 'உமக்கு திமிரா?' என்றெல்லாம் கேட்டு மிரட்டினான். அவள் பதில் அளிக்க முற்பட்ட போதெல்லாம், அவனே தொடர்ந்தும் பேசினான். அவளுக்கு விளக்கம் அளிக்கச் சந்தர்ப்பம் கிட்டவில்லை. 'ரிஸீவரை' 'பொத்'தென்று வைத்து விட்டு அவன் வெளியேற, பின்னால் நின்ற பறங்கிக் கிழவி அவனை ஒரு தினுசாக நோக்கினாள்.

வீடு வந்தவன் குளித்தான். பாணைச் சாப்பிட்டான். நித்திரை கண்களைச் சுழற்ற, படுத்துவிட்டான். மீண்டும் கண்களைத் திறக்க, மூன்று மணியாகிவிட்டது.

பசி வயிற்றைப் பிராண்டியது. ஏதாவது 'ஹொட்டேலுக்கு' சென்று பசியை அடக்க சோம்பலாக இருந்தது. காலையில் மீதம் வைத்திருந்த இரு துண்டுப் பாணை விழுங்கிவிட்டு, மீண்டும் படுத்துவிட்டான்.

தூக்கம் தழுவ மறுத்தது. வயிறு புகைந்தது. 'பிரிஜ்ஜை' திறந்து 'ஐஸ் வோட்டரை' வாய்க்குள் ஊற்றினான். வயிறு நிரம்பியது. ஆனால், அரை மணித்தியாலம் கழிய மீண்டும் பசித்தது. ஜானகி மீது அளவுக்கு மீறிய கோபமும், ஆத்திரமும் மீண்டும் ஏற்பட்டு, அவன் இரத்த நாளங்களைப் புடைக்க வைத்தன.

**கா**ரியாலயத்தில் ஜானகியின் மேசை மீதிருந்து 'இன்ட்ரே'யில் நிறைய 'பைல்'கள் கிடந்தன.

"'மிஸிஸ்' வசந்தன், முப்பத்திரண்டாம் 'நம்பர் எக்ஸ்போர்ட் பைலை' எப்படியாவது 'கிளியர்' பண்ணிவிட்டுத்தான் இண்டைக்கு வீட்டுக்கு போகவேணும்" என்று காலையில் 'எக்கவுண்டன்' கனகசபை கண்டிப்பான உத்தரவைப் போட்டுவிட்டார்.

அந்த 'பைலில்' மூழ்கினால், மாலைக்குள் கணக்கைச் சரி பார்க்க முடியாது. ஆனால், அவரது உத்தரவை நிறைவேற்றாவிட்டால் நேரே 'எம்.டி.'யிடம் போய் முறைப்பாடு செய்வார். 'எம்.டி.' அதை 'ஜி.எம்.'மிடம் விட்டுவிடுவார். 'ஜி.எம்.' ஒரு முசுறு. அவள் பெண் என்று சற்றேனும் சிந்திக்காமல், தரக் குறைவான வார்த்தைகளை எல்லாம் கொட்டி ஏசிவிடுவார். அது அவர் சுபாவம்.





ஒரு முறை அவரிடம் சிக்கிவிட்டாள். முன் அனுமதி பெறாமல் லீவு எடுத்துவிட்டு காரியாலயம் சென்றவளை, 'ஜி.எம்' கூப்பிட்டு அனுப்பினார். போனாள். 'ஏன் வரவில்லை' என்று காரணத்தைக் கேட்காமல் அவளைத் தாறுமாறாக ஏசினார். தப்பான ஆங்கில வார்த்தைகள் இரண்டை உதிர்த்தார். ஜானகி அவமானத்தினால் கூசினாள். ஒரு வார்த்தை கூட உதிர்ப்பதற்குத் தயங்கினாள்.

ஐயாயிரம் ரூபா சொச்சத்தை உழைப்பதற்கு இவ்வாறு மரியாதையீனப்பட வேண்டுமா என எண்ணினாள். அன்றே ராஜினாமா செய்தால் என்ன என்று யோசித்தாள். ஆனால், வீட்டு வாடகை, 'லைட்', தண்ணி 'பில்', வீட்டுச் செலவுக்கு விரயமாகும் பணம்........ என்று யாவற்றையும் யோசித்த போது, மானம், மரியாதை, கௌரவம் ஆகியவற்றை இழக்க வேண்டிய நிலையில் தான், தான் நிறுத்தப் பட்டிருப்பதை அவள் உணர்ந்தாள். தன் மனதினில் புதைந்திருந்த எண்ணங்களைப் பொசுக்கினாள். சற்று சௌகரியமாக வாழ்வ தென்றால் இப்படியான அவமானங்களைச் சுமக்கத்தான் வேண்டும் என்ற முடிவுக்கு வந்தாள்.

ஜானகி 'எக்ஸ்போர்ட் பைலை' எடுத்தாள். நான்கு பக்கங்களைப் புரட்ட, 'என்ரியை' 'சப்ஜெக்ட் கிளார்க்' சரிவரச் செய்யவில்லை என்பதைக் கண்டு பிடித்தாள். அவனை அணுகி ஒவ்வொன்றாக விளக்கம் கேட்கும் போது, வயிறு உளைந்தது. அப்பொழுதே காலையில் சாப்பிடாதது ஞாபகத்தைத் தொட்டது. 'கன்ரீனுக்கு' போய் 'ரீ' குடிப்போம் என்று நினைக்கையில் வசந்தனிடம் இருந்து தொலைபேசி அழைப்பு வந்தது.

அவன் எடுத்த எடுப்பில் அவளை ஏசினான். அவள் விளக்கம் அளிக்க முற்படுகையில் 'ஷட் அப், ஷட் அப்' என்று கத்தி, தனது ஏச்சைத் தொடர்ந்தான். பின் தொடர்பைத் துண்டித்துவிட்டான்.

ஜானகி திகைத்துப் போய்விட்டாள். அவமானம் அவளை அழுத்தமாகத் தழுவிவிட்டது. ஏன், எதற்காக இப்படி அவதூறு செய்யும் வகையில் ஏசினான் என எண்ணினாள். அவளுக்கு காரணம் புரியவில்லை.

சில நிமிடங்கள் வரை இயல்பு நிலைக்குத் திரும்ப முடியவில்லை. வியப்பு மாறி ஆத்திரம், கோபம் என்று பல்வகை உணர்ச்சிகள் அவளுள் வட்டமிட்டன. வசந்தனின் கர்ணகடூர வார்த்தைகள் மீண்டும், மீண்டும் காதுகளில் எதிரொலித்தன.

அவன் இவ்வாறு எரிமலை நிலையில் செயல்பட்டதற்கு என்ன காரணம் என மூளையைப் போட்டுக் குழப்பினாள். மதியச் சாப்பாடு சமைத்து வைக்கவில்லை.

ஒரு நேரச் சாப்பாடு - வழமை போல் மேசையில் வைத்து விட்டு வராததிற்கு இப்படி கோபப்பட வேண்டுமா? அவன் செய்கை அவளைப் பொறுத்தளவில் அளவுக்கு மீறியதாகத் தென்பட்டது.

அவள் சமைக்காததிற்கு நியாயமான காரணம் இருந்தது. கடந்த ஒரு வாரமாக காலையில் தலைச்சுற்று. ஒரு தடவை வாந்தியும் எடுத்தாள். இன்று காலையில் எழுந்த நேரம் தொடக்கம் தலையை நிமிர்த்த முடியவில்லை. பற்களைக் கடித்தபடி சமையலை ஆரம்பிக்க முற்பட்ட போதும், முடியவில்லை. ஏழரை மணிக்கு தலையை ஓரளவு தூக்க முடியவே, முன் கடையில் அரை இறாத்தல் பாணை வாங்கி வைத்துவிட்டு, வீட்டை விட்டு வெளியேறி இருந்தாள்.

எல்லாவற்றையும் மனதினுள் அலசி, ஆராய துயரம், அவள் மனதைக் கௌவியது. கண்கள் கலங்கின. கைலேஞ்சியை எடுத்து கண்களைத் துடைத்தாள்.

அவள் நிலை மஞ்சுளாவிற்கு புரிந்திருக்க வேண்டும். "'ஹஸ்பண்ட்' ஏசினாரா?" என நேரிடையாகவே கேட்டாள்.

ஜானகி வெறுமனே தலையாட்டினாள்.

காரணத்தைக் கேட்டாள் மஞ்சுளா. ஒரு வரியில் அதைச் சொன்னாள் ஜானகி.

"ப்பூ இதுதானா?" மஞ்சுளா சிரித்தாள். "இதுக்கு இப்படி ஏசுறதோ? நல்ல மனிசன் தான்."

ஜானகி ஒன்றும் கூறவில்லை.

"நீரும் அவரைப் போலத்தானே வேலை பார்க்கிறீர்? ஒரு நாளைக்கு சமைச்சு சாப்பாடு வைக்காட்டால் இப்படி ஏசுறதோ? என்ர மனிசன் இப்படி ஏசி இருந்தால், அவரின்ர தொண்டையை கிழிச்சிருப்பன். நீர் உம்மட மனிசனுக்கு நிறைய செல்லம் குடுத்திருக்கிறீர். அது தான் இப்படி உம்மில குற்றம், குறை பார்க்கிறார். ஒரு கிழமைக்கு சமைக்காமல் அவரை கடையில சாப்பிடச் சொன்னால் தான் அவற்றை கொழுப்பு கரையும்."

"அப்படி செய்யுறது சரி இல்லை. அவர் பாவம்."

"நீர் அவரில பாவம் பார்க்கிறீர். அவர் உம்மில பாவம் பார்க்கிறாரோ? நீர் 'டே டியூட்டி' செய்யுறீர். அவர் 'நைட் டியூட்டி' செய்யுறார். நீர் காலமை, மத்தியான சாப்பாட்டை கவனிக்கிற மாதிரி அவர் இரவுச் சாப்பாட்டைக் கவனிக்கிறாரோ? நீர் தான் வீட்டுக்குப் போய் இரவுச் சாப்பாட்டையும் சமைச்சு அவருக்கு குடுக்கிறீர்."

"மஞ்சு, அவருக்கு சமைக்கத் தெரியாது."





"ஓ! அப்படியோ? இந்த ஆம்பிளையளுக்கு இது ஒரு சாட்டு. பொம்பளையளின்ரை தலையில சமையலைப் போட்டு விடுவினம். ஆனால், அந்தப் பொம்பளை தன்னைப் போல வேலைக்குப் போறாளே, சமையலையும், வேலையையும் செய்யுறது கஷ்டம். எண்டபடியால நானும் கூடமாட சமையலில் உதவி செய்ய வேணுமே எண்டு நினைக்கிறதில்லை."

"நான் இதை ஒத்துக் கொள்ளமாட்டன். காலாதி காலமாக பொம்பளையள் தான் சமையலுக்குப் பொறுப்பு. ஆம்பிளையள் எண்டால் இப்படித்தான் இருக்க வேணும் எண்டு ஒரு வரைவிலக்கணம் இருக்குது. இதை இரண்டு சாராரும் மீறக்கூடாது."

"அப்படி எண்டால் நாங்கள் ஆம்பளையளுக்கு அடங்கி நடக்க வேணுமோ?"

"நான் அப்படி சொல்ல இல்லை. அவையளுக்கு நாங்கள் சரிசமம் எண்டாலும், பெண்மைக்கு உரிய பண்புகளை நாங்கள் மறக்கக்கூடாது. உதாரணமாக எங்கட பாதுகாப்புக்கெண்டு சமயம், கலாச்சாரம், ஒழுக்கம், பாரம்பரியம் எண்டு ஒரு சின்ன வேலி போடப்பட்டிருக்கிறது. நாங்கள் அதை உடைக்கக்கூடாது. அதோட சமூகப் பெறுமதியளையும் மதிச்சு நடக்க வேணும்."

"இதால தான் அவையள் நாங்கள் பலவீனமானவையள் எண்டு நினைச்சு எங்களை அடிமையாக நடத்தப் பார்க்கினம். நீர் கொஞ்சம் கடுமையாக நடந்தால் அவர் பெட்டிப் பாம்பாகிவிடுவார். அதுக்குப் பிறகு சமையலைக் கூட அவரின்ர தலையில கட்டிட்டு நீர் 'ஹாயாக' இருக்கலாம்."

"சம உரிமையை மீறச் சொல்லுறீரா? மஞ்சு, பாரம்பரியமாக பொம்பளையள் தான் சமையலைக் கவனிச்சு வருகினம். பொம்பளையள் வேலைக்குப் போனாலும் அவையள் தான் அதைச் செய்ய வேணும். ஆம்பிளையள் கூடமாட உதவி செய்யுறது அவையின்ர இஷ்டம்."

"நீர் எல்லாத்தையும் ஆம்பிளையளுக்கு விட்டுக் குடுத்திடுவீர் போல......"

"நீர் பிழையா விளங்கிக் கொள்ளுறீர். பொதுவாகப் பொம்பளையள் எண்டால் அவையள் மென்மையானவையள்; பொறுமைசாலியள். எண்டபடியால் நாங்கள் மென்மையாகவும், வலிமையாகவும் இருக்க வேணுமே தவிர முரட்டுத்தனமாகவும், நலிவாகவும் இருக்கக்கூடாது. நாங்கள் பிள்ளை பெறுகிற தொழிற்சாலை இல்லை எண்டு ஆம்பிளையள் நினைக்க வேணும். அதே மாதிரி, நாங்கள் தாய்மையை மறக்கிற ஜடங்களும் இல்லை எண்டதையும் அவையள் மறக்க வேணும்."

மஞ்சுளா ஒன்றும் கூறாமல் போய்விட்டாள். கொஞ்சம் கொஞ்சமாக ஜானகியின் மனதில் அமைதி பிறந்தது. வேலையைத் தொடர்ந்து மேற்கொண்டாள். 'எம்.டி.' கூப்பிட்டு அனுப்பினார்.

பக்குவமாக அவர் முன்னால் போய் நின்றாள்.

"இண்டைக்கு 'லஞ்ச்' கொண்டு வந்தீரா?"

'எம்.டி'யின் கேள்வி ஜானகியைப் பிரமிக்க வைத்தது. எந்த அர்த்தத்தில் கேட்கிறார்? நடந்தவற்றை மஞ்சுளா அவரிடம் ஒப்புவித்தாளா? "இல்லை" என்று உண்மையை வெளிப்படுத்தினாள்.

"'குட்'. இண்டைக்கு நான் பெரிய ஒரு 'பார்ட்டி'க்கு 'லஞ்ச்' குடுக்கிறன். கலதாரி 'ஹொட்டேலில'....... அவங்கட 'சைட்'டில ஒரு பொம்பளையும் வாறாவாம். 'ஸோ' நீர் வந்தால் அவவுக்கு ஒரு 'கொம்பனி'யாக இருக்கும். அதுதான் 'மெனேர்ஸ்.'"

'எம்.டி'யின் வேண்டுகோளுக்கு இணக்கம் தெரிவிக்க ஜானகி விரும்பவில்லை. அதன் எதிரொலியாக, நடந்தாலும் நடக்கக்கூடிய சம்பவங்களை எதிர்நோக்க அவள் தயாராக இருக்கவில்லை.

"'ஸொரி சேர்'. எனக்கு இண்டைக்கு ஒரே வயித்தக் குத்து. மத்தியானம் சாப்பிடாமல் விடலாம் எண்டு இருக்கிறன். அதோட 'எக்ஸ்போர்ட் பைலை' முடிச்சு பின்னேரம் 'எக்கவுண்டனிட்டை' குடுக்க வேணும்."

"'ஓ.கே., ஓ.கே', நான் றோஸ்மேரியை கூட்டிக் கொண்டு போறன். அவள் எனக்கும் 'கொம்பனி' தருவாள்." 'எம்.டி.' கண்சிமிட்ட, ஜானகி அவரை மனதினுள் ஏசியபடி வெளியேறினாள்.

'இந்த ஆம்பிளையள் பொம்பளையளை விற்பனை பண்டமாகத் தான் நினைக்கினம். இந்த நிலை எப்பத் தான் மாறுமோ' என்று எண்ணியபடி வந்தவளை, மஞ்சுளா கண்களால் அழைத்தாள். 'எம்.டி.'யின் அறைக்குப் போன காரணத்தை அவள் கேட்க, ஜானகி அதை விளக்கினாளள்.

"நல்ல ஒரு 'சான்ஸை' நீர் 'மிஸ்' பண்ணிட்டீர். உம்மில 'எம்.டி' வைச்சிருந்த அபிமானத்தை ஒரு நிமிஷத்தில சிதைச்சுப் போட்டீர்."

"உண்மைதான். ஆனால், 'ஹஸ்பண்டுக்கு' விருப்பம் இல்லாததை செய்ய விரும்ப இல்லை. அவர் கொஞ்சம் சந்தேகப் பேர் வழி. நான் 'எம்.டி' யோட ஒண்டாகப் போகக்கிள்ளை கண்டால் அவருக்கு என்னில சந்தேகம் வந்தாலும் வரும். அதுக்குப் பிறகு என்ர எல்லா நடமாட்டத்தையும் கவனிக்கத் தொடங்கிவிடுவார். நான் கதைக்கிற எல்லா ஆம்பிளையளும் அவரின்ர கண்ணுக்கு





என்ர 'போய் ஃபிரெண்ட்'டாகத் தான் தெரியும். அதால ஏன் வீணாக வம்பை விலைக்கு வாங்க வேணும்?"

"ஒரு ஆம்பிளையோட போனால் ஏன் தான் இந்த ஆம்பிளையளுக்கு சந்தேசம் வருதோ தெரிய இல்லை."

"பொதுவாக ஆம்பிளையள் வேறை பொம்பளையோட போகக்கிள்ளை தவறாக நடக்கினம். இல்லாட்டால் நடக்கப் பார்க்கினம். தங்கட பெஞ்சாதிமாரும் இப்படியான ஒரு சூழ்நிலைக்குள்ள கண்டறியாத சந்தேகம் வந்திடுது. எண்டபடியால் இந்த மாதிரி சந்தேகம் வராத மாதிரி நடந்திட்டால் ஒரு பிரச்சினையையும் எதிர்நோக்கத் தேவை இல்லைத் தானே?"

"நீர் உம்மட சுதந்திரத்தை வீணாக விட்டுக் குடுக்கிறீர். உம்மட 'ஹஸ்பண்ட்' ஒரு பொம்பளையோடை போறதைக் கண்டால் நீர் சந்தேகப்படுவீரோ?"

"அது சந்தர்ப்ப சூழ்நிலையைப் பொறுத்தது. ஆனால், வீணாகச் சந்தேகப்பட்டு எனக்கே படுகுழி பறிக்கமாட்டன்."

மாலையில் ஆறு மணிக்குத் தான் வேலையை முடிக்கக் கூடியதாக இருந்தது. கனகசபையிடம் 'எக்ஸ்போர்ட் பைலை' நீட்ட "செய்து முடிச்சிட்டீரா?" என்று கேட்டார்.

"ஓமோம்."

"இருட்டாகிக் கொண்டு வருது. உம்மை வீட்டில 'ட்ரொப்' பண்ணட்டுமா?"

"வேண்டாம்" என்று சொல்லி விட்டு அலுவலகத்தை விட்டு வெளியேறினாள்.

பஸ் தரிப்பிடத்தில் நிற்கிறாள். எதிரே கிருஷ்ணா 'லொட்ஜ்' தெரிய, அவள் உள்ளத்தில் மெல்லியதொரு ஆனந்தம் துளிர் விடுகிறது. 'சுவீட்ஸ்' வாங்கிக் கொண்டு போய் வசந்தனிடம் நீட்டி, அந்த 'இனிப்பான செய்தியை' சொன்னால் என்ன என்ற நினைப்பு நெஞ்சில் ஊறுகிறது.

திருமணமாகி இரண்டு வருடங்கள் கழிந்துவிட்டன. ஒரு மாதத்தின் முன் அவளைக் குழைவுடன் நோக்கி, "ஜானு, எனக்கு எப்ப 'புரமோஷன்' தரப்போறீர்" எனக் கேட்கிறான் வசந்தன்.

புரிந்தும் புரியாத மாதிரி, "என்ன 'புரமோஷன்'?" என கண்கள் துடிதுடிக்க கேட்கிறான்.

"அப்பாவாகிற 'புரமோஷன்'."

"என்ன அவசரம்?"

இப்போது அவள் தாய்மைப் பேற்றை அடைந்துவிட்டாள். அந்த உண்மையை அவனிடம் அவள் பரிமாறவில்லை. அதை உறுதிப்படுத்த விரும்பினாள். கடந்த ஒரு வாரமாக காலையில் அவளை நிலை தளும்ப வைத்த தலைச்சுற்று, வாந்தி அதை உறுதிப்படுத்தின. இனிச் சொல்லலாம். ஆனால், அவன் காலையில் நடந்த விதம்........ அவன் அவளுடன் சுமூக உறவு கொண்ட பின் தான் சொல்ல வேண்டும் என நினைக்கிறாள். ஆனால், சில வினாடிகளுக்குள் அதைச் சொல்ல வேண்டும் என்று 'ஏதோ' ஒன்று அவள் மனதை அழுத்த, அவள் ஒரு முடிவுக்கு வருகின்றாள்.

இதயத்தின் விரைவான ஓட்டத்துடன், வீதியைக் கடந்து சென்று கிருஷ்ணா 'லொட்ஜை' அடைகிறாள். சுசியம், லட்டு, அல்வா என்று இனிப்புப் பண்டங்களை வாங்கிக் கொண்டு 'பஸ்'சில் ஏறுகிறாள்.

வீட்டை அடைகிறாள். உள்ளே செல்ல வசந்தன் கோபத்தை முகத்தில் பரப்பியவண்ணம் நிற்கிறான்.

"வாரும், வாரும், உம்மைத் தான் பார்த்துக் கொண்டிருக்கிறன்" என்று அரம்பித்தவன், அவளைக் கண்டபடி ஏசினான்.

பொறுமையின் எல்லைக்கே போன போதும், அவள் பற்களைக் கடித்தபடி நின்றாள். வாயைத் திறந்து ஒரு வார்த்தை கூட பேசவில்லை. மனதில் சுமந்து கொண்டு வந்த மகிழ்ச்சியை அந்த 'இனிப்பான செய்தியை' மறந்தாள்; மறைத்தாள்.

வசந்தன் வார்த்தைகளால் அர்ச்சிக்க, அவள் அறைக்குச் சென்று உடுப்புக்களை மாற்றிவிட்டு சமையலறைக்குள் புகுந்தாள்.

இரவுச் சாப்பாட்டைச் சமைத்துவிட்டு அவனைச் சாப்பிட கூப்பிட்டாள். "எனக்கு பசி இல்லை" என்றான் அவன்.

அவள் அவனை வற்புறுத்தவில்லை. அவனுடன் வாக்குவாதப் படவும் இல்லை. தன்பாட்டில் சாப்பிட்டு விட்டு படுத்துவிட்டாள்.

காலையில் எழுந்தாள் ஜானகி. வசந்தன் கட்டிலில் கிடந்தான். அவள் நேரே சமையல் அறைக்குச் சென்றாள். தலை சுற்றியது. வாந்தி வருவது போல இருந்தது. எனினும், பற்களைக் கடித்தபடி சமையலை மேற்கொண்டாள்.

காரியாலயத்தை அடைந்த ஜானகி சிறிது நேரம் வரை வசந்தனின் செயல்களையிட்டு மனதினுள் அலசினாள். அவன் ஏன் தன் மீது இந்த மாதிரி சின்ன விஷயங்களுக்கெல்லாம் ஆத்திரம் கொள்கிறான் என ஆராய்ந்தாள். விட்டுக் கொடுத்து வாழ்வதில் பிடித்தம் அற்றவனா? இல்லாவிடில் ஆணாதிக்கத்தைச் சிறிது சிறிதாக நிலைநாட்ட முயற்சிக்கிறானா?





கடந்த இரு வருடங்களில் நடந்த சின்னஞ் சிறு சச்சரவுகள், அதன் எதிரொலியாக ஏற்பட்ட கோபதாபங்கள் எல்லாமே அவனின் ஆணாதிக்க உணர்வைத் தான் உறுதிப்படுத்தின. ஒவ்வொரு முறையும் அவள் தான் அவனுக்கு விட்டுக் கொடுத்து, பழியை தானே சுமந்தாள். ஆனால், இம்முறை அவள் அவனுக்கு விட்டுக் கொடுப்பதை தவிர்க்கவே விரும்பினாள். அவனுள் ஆணாதிக்க உணர்வு வளர்ந்தால், அது எதிர்காலத்தில் அவளை அடிமைச் சீவியத்திற்கு இட்டுச் சென்றுவிடும். இவ்விவகாரம் மூலம் ஒரு புதிய திருப்பத்தைக் கொண்டு வர வேண்டும் என நினைத்தாள். அவனாக வந்து மன்னிப்பு கோரும் வரை பேசுவதில்லை எனத் தீர்மானித்தாள்.

மதியம் 'கன்ரீனுக்கு' போகும் போது 'ஹான்ட் பாக்'கைத் திறக்க, அதில் முதல் நாள் வாங்கிய இனிப்புப் பண்டங்கள் தென்படுகின்றன. ஒருவருக்கும் தெரியாமல் அதை அப்படியே எடுத்து கழிவுக் கடதாசிக் கூடைக்குள் போட்டு விடுகிறாள்.

ஜானகி வேலைக்குப் போன பின் மனதினுள் ஒரு வெறுமை உணர்வு பிறக்க வசந்தன் அமர்ந்திருக்கிறான். சாப்பிடக் கூட அவனுக்கு மனம் வரவில்லை. ஏதோ தவறு செய்துவிட்ட பிரமை அவனுள் நுழைகின்றது. முதல் நாள் காலையில் இருந்து நடந்தவற்றை அசைபோட......... தன் மீதே குற்றம் இருப்பதை அவன் மனம் ஒப்புக் கொள்கிறது. 'ஜானுவை அப்படி ஏசி இருக்கக்கூடாது. ஏதோ காரணத்தினால் அவள் சமைக்காமல் இருந்திருக்கலாம். அந்தக் காரணத்தைக் கேட்காமல் அவளை ஏசிவிட்டேனே. அவள் பாவம் என எண்ணுகிறான்.

பல தடவைகள் கடுமையாக ஏசியும் அவள் ஒரு வார்த்தை கூட எதிர்த்துப் பேசாததையிட்டு அவன் அதிசயப்பட்டான். பெண் என்பவள் பொறுமையின் பொக்கிஷம் என்பதை அவள் நிரூபித்து விட்டாள்; பெண்மைக்கு இலக்கணம் வகுத்துவிட்டாள் என்ற நினைப்பே அவனுள் மேலோங்கி இருந்தது.

இப்படிப்பட்ட உயர்ந்த குணத்தைக் கொண்டவளை அநியாயமாக ஏசிவிட்டேனே என வருந்தினாள். நடந்ததை மறந்து விடும்படி அவளிடம் கேட்க வேண்டும் என்ற உத்வேகம் அவனுள் உருவகித்தது.

ஒரு தீர்மானத்துக்கு வந்தான். 'டெலிபோன் பூத்'துக்குப் போனான். ஜானகியுடன் தொலைபேசியில் தொடர்பு கொள்ள முற்பட்டான். ஆனால், அவள் வேலை விஷயமாக வெளியே போய்விட்டதாக மஞ்சுளா பதில் அளித்தாள்.

"'மிஸ்டர்' வசந்தன், உங்களோட ஒரு 'பேர்சனல்' விஷயம் பேச வேணும். பேசலாமா?" என மஞ்சுளா பீடிகை போட, "தெரியும். நீங்கள் என்ன சொல்லப் போறீங்க எண்டு எனக்குத் தெரியும். அதை உணர்ந்தபடியால தான் நான் இப்ப '.·.போன்' பண்ணினனான்" என்கிறான் வசந்தன்.

"இப்பத்தான் நீங்கள் உண்மையிலேயே ஒரு ஆம்பிளை", மஞ்சுளா உற்சாகத்துடன் கூறினாள்.

சிறிது நேரத்தில் வசந்தன் தொலை தொடர்பை அறுக்கிறான்.

ஜானகி வந்த பின்னர் வசந்தன் '.·.போன்' பண்ணியதைச் சொல்ல வேண்டும் என்று மஞ்சுளா நினைத்திருந்தாள். ஆனால், வேலைப்பளுவின் காரணமாக மறந்தே விட்டாள்.

மாலையில் கனத்த மனதுடன் ஜானகி வீடு சென்றாள்.

கதவைத் தட்ட வசந்தன் கதவை முழுமையாகத் திறந்தான். அவன் இதழ்களில் ஒரு தயக்கமான புன்னகை.

ஜானகி எதிர்பார்க்கவில்லை. அவளுள் மலர்ச்சி பூத்தது.

"'ஐ ஆம் ஸொரி' ஜானு." வசந்தன் அவளின் கரத்தைப் பற்றுகிறான்.

ஜானகி மெய்சிலிர்த்துப் போகிறாள். அவளிடம் அடங்கி இருந்த கோப உணர்ச்சி, ஓடி விடுகின்றது.

"'ஸொரி, ஸொரி'....." அவன் பிதற்றுகிறான்.

அந்த, 'இனிப்பான செய்தியை' அவனிடம் பரிமாறுகிறாள்.

அவன் முகமெல்லாம பூரிப்பு மனைவியை மகிழ்ச்சியுடன் நோக்குகிறான்

அவனுக்கு நீட்ட இனிப்புப் பண்டம் எதுவுமே இல்லையே என்ற கவலை ஜானகியை வாட்ட, அவள் கண்களில் இருந்து நீர் சுரக்கிறது.

*(அக்கரைப்பற்றில் இயங்கும் பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் 1996இல் நடத்திய சர்வதேச மகளிர் தின சிறுகதைப் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்றது. முதலாம் பரிசுக்குரியதாக எச்சிறுகதையும் தெரிவு செய்யப்படவில்லை.)*

